| Professional Skill 30 Hrs.;<br>Professional Knowledge 06 Hrs. | Carry out Recovery and Recycling of Refrigerant used, alternative of CFC, HFC re-cover, transfer & handing of gas cylinders. | 77. Identify and explain different colour code of different type refrigerant cylinder like HCFCs (HCFC-22, HCFC-123). HFCs (HFC-134a, HFC-32, R- 410A, R-407C and R-404A) and low-Global Warming Potential (GWP) refrigerants like ammonia, R-290, HFC- 32, blends of HFCs (R-410A, R-404A, R-407C etc.) and hydro Fluor olefins (HFOs: HFO-1234yf, HFO-1234ze, HFO-1233zd, HFO-1336mz), blends of HFCs and HFOs. (10 hrs.)<br>78. Recover refrigerant from a faulty machine. (07 hrs.)<br>79. Transfer refrigerant from one cylinder to another using ice. (04 hrs.)<br>80. Measure pressure andtemperature of refrigerants including HCFC-22, ammonia, R-290, HFC-32, HFC-134a, R-404A, R-407Cand R-410A, HFOs. Identify flammability and toxicity of A3 and A2L of refrigerants. (09 hrs.) | **Refrigerant**<br>Classification of refrigerants, nomenclature of refrigerants including chemical name and formulas, hydro chloro fluorocarbons (HCFCs), hydro fluorocarbons (HFCs) and hydro fluoroolefins (HFOs), blends of HFCs and blends of HFCs/HFOs. Climatic impact of refrigerants: Stratospheric ozone depletion, global warming, mechanism of ozone depletion; the Montreal Protocol phase-out schedule of ozone depleting refrigerants (HCFCs) and high global warming refrigerants (HFCs). Brief introduction of Ozone Depleting Substances (Regulation and Control) Rules, 2000 and its amendments. Introduction of properties of refrigerants; environment related properties: Ozone Depleting Potential (ODP), GWP; ODP and GWP of various refrigerants, thermo chemical properties: flammability and toxicity of refrigerants, lower flammability limit (LFL) and upper flammability limit of A3 and A2L refrigerants. Thermo physical properties: pressure temperature of different refrigerants.(06 hrs..) |

© NOT TO BE REPUBLISHED

| | | | |
|---|---|---|---|
| Professional Skill 22 Hrs.; Professional Knowledge 07 Hrs. | Retrofit CFC/HFC machine with ozone friendly refrigerant with understanding of the compatibility. | 81. Demonstrate safe handling of refrigeration cylinders. (10 hrs.)<br>82. Recover CFC by recovery pump and cylinder on CFC filled domestic refrigerator. (12 hrs.) | Safe handling of flammable refrigerants. Refrigerant leak detection methods, evacuation and charging of refrigerant, temperature glides of refrigerant blends, procedure of charging of refrigerant blends especially the zeotropic<br>lends,hydrocarbon blends, HFC blends (R-404A, R-407C,R-410A) and blends of HFCHFO.<br>**Retrofitting**<br>Changes of components & practices while retrofitting CFC appliances with HC Refrigerants. Properties of HCs(07 hrs..) |
| Professional Skill 13 Hrs.;<br>Professional Knowledge 02 Hrs. | Pack thermal insulation and prevent cooling leakage. | 83. Identify different insulating materials.(polyurethane rigid foam and polystyrene). (03 hrs.)<br>84. Fill with insulation material like PUF and glass wool. (10hrs.) | **Thermal Insulation**<br>Function,types,thermodynamic properties of heat insulation materials used in refrigeration and Air Conditioning systems. (02 hrs..) |
| Professional Skill 50 Hrs.;<br>Professional Knowledge 7 Hrs. | Install window AC, test Electrical & electronics components & Fault diagnosis & remedial measures. | 85. Acquainting with mechanical and electrical components (electrical components like selector switch, thermostat switch, relay, starting capacitor, running capacitor, overload protector, remote and PCB control, etc. ) used in window air- conditioner. (15 hrs.)<br>86. Troubleshooting, installation, tracing wiring circuit. (5 hrs..)<br>87. Leak testing, evacuation and gas charging, Show discharge pressure and suction pressure during running time. (15 hrs.)<br>88. Hands on practice on installation of window AC following step by step procedure. (15 hrs.) | **Window Air Conditioner** Study the constructionand working principle of window AC and its components; electrical controls and wiring. Installation, troubleshooting and servicing. ( 7 Hrs) |
| Professional Skill 100 Hrs.;<br>Professional Knowledge 18Hrs. | Perform servicing of electrical& electronic control, test, Installation, wiring, fault finding & remedial measures of different split AC. | **Split AC (wall/floor/Cassette)**<br>89. Identify various components of split AC like wall mounted, floor and ceiling mounted, duct able and multi split AC. (04hrs.)<br>90. Identify electrical circuits of wall mounted split AC. (04hrs.) | **Split AC (wall/floor/Cassette)**<br>Construction and working principle, troubleshooting & care and maintenance. Selection of location of indoor and outdoor units. |

© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | |
|---|---|---|---|
| | | 91. Test different components and fault finding. (03 hrs.)<br>92. Leak testing of the system, evacuation and gas charging. (03hrs.)<br>93. Trouble shooting in split AC. (06hrs.) | **Split AC (Wall Mounted)**<br>Construction and working principle, types, trouble shooting. Description of electrical components used in split A.C. Study the wiring circuit. |
| | | 94. Install IDU and ODU of wall mounted split AC. (16hrs.)<br>95. Install IDU of floor, Ceiling / Cassette mounted Split AC. (16hrs.) | **SPLIT A.C (floor, Ceiling / Cassette mounted Split A.C)**<br>Construction and working principle, types, trouble shooting. Description of electrical components used in split A.C. Study the wiring circuit. |
| | | 96. Install IDU and Duct of Ductable split AC. (16hrs.) | **SPLIT A.C (Ducted)**<br>Study of the Duct able split AC, its Construction and working principle, types, trouble shooting.Description of electrical components used in split A.C. Study the wiring circuit. |
| | | 97. Servicing of Multi Split AC. (16hrs.) | **MULTI SPLIT A.C**<br>Study the construction and working, various components, electrical circuits, testing components, fault detection |
| | | 98. Identify the parts of Inverter Split AC. (16hrs.) | **INVERTER SPLIT A.C.**<br>Study of construction and working principle of inverter AC and its components, electrical circuit and controls, installation, servicing, trouble shooting, fault detection, leak testing and gas charging.Concept of Indian Seasonal Energy Efficiency Ratio ISEER). Energy Efficiency leveling oninverter AC.(18 hrs..) |

© NIMI NOT TO BE REPUBLISHED

## பணிமனை மற்றும் இயந்திரங்களை அடையாளம் காணுதல் (Identify workshop and machineries)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **ITI தொழிற்பயிற்சி நிலையத்தின் - யின் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டு பணிபுரிபவர்களை அறிமுகம் செய்து கொள்ளுதல்.**
- **ITI தொழிற்பயிற்சி நிலையத்தின் - யில் ரெஃப்ரிஜிரெஷன் மற்றும் ஏர்கண்டிஷ்னிங் டெக்னீசியன் தொழிற்பிரிவின் பிரிவுகளின் இருப்பிடத்தை வரைபடமாக்கவும்.**

### தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஸ்டீல் ரூல் 300 மி.மீ - 1 No.
- மெஷரிங் டேப் (Measuring tape) - 1 No.
- செட் ஸ்கொயர் 30° & 60° - 1 No.
- செட் ஸ்கொயர் 45° & 45° - 1 No.

**பொருட்கள்**

- பென்சில் HB - 1 No.
- ரப்பர் - 1 No.
- பேப்பர்கள் - தேவைக்கேற்ப.

### செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **ITI தொழிற்பயிற்சி நிலையத்தின் - யின் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டு பணிபுரிபவர்களை அறிமுகம் செய்து கொள்ளுதல்**

**பயிற்றுநர், புதிய பயிற்சியாளர்களை ஐ.டி.ஐ யின் பல்வேறு பிரிவுகளுக்கு அழைத்துச் சென்று பயிற்சித் திட்டங்களைப் பற்றி விளக்க வேண்டும்.**

1 பணியாளர்களின் பதவி, அவர்களது பெயர் போன்ற விபரங்களை பார்வையிடுகையில் சேகரிக்கவும்.

2 ஐ.டி.ஐ யில் உள்ள பிரிவுகளை அடையாளங்கண்டு, எந்தந்த பிரிவுகளில் என்ன பயிற்சி அளிக்கப்படுகிறது என்று பட்டியலிடவும்.

3 வெவ்வேறு தொழிற்பிரிவுகளை பார்வையிடுகையில் அந்தந்த தொழிற்பிரிவுகளில் உள்ள முக்கியமான இயந்திரங்கள் மற்றும் சாதனங்களை அந்தந்த தொழிற்பிரிவு பயிற்றுனரிடம் கேட்டறிந்து பட்டியலிடவும்.

4 ஒவ்வொரு குறிப்பிட்ட தொழிற்பிரிவிற்கும் தொழிற்சாலைகளில் உள்ள பயன்பாடு மற்றும் வாய்ப்பை குறித்து சுருக்கமாக அறிந்து கொள்க.

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **ITI தொழிற்பயிற்சி நிலையத்திலுள்ள ரெஃப்ரிஜிரேஷன் மற்றும் ஏர்கண்டிஷ்னிங் டெக்னீசியன்- யில் பிரிவின் இருப்பிடத்தை வரைபடமாக வரையவும்**

1 A4 அளவு காகிதத்தில் குளிர்பானம் தொழில்நுட்ப வியலாளர் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்தல்) தொழிற்பிரிவை பொருத்தமான அளவில் திட்ட வரைபடமாக வரையவும்.

2 தொழிற்பிரிவில் இயந்திரங்கள் அமைந்துள்ள இடத்தை லேஅவுட் (layout) படமாக வரையவும்.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

## பாதுகாப்பு முன்னெச்சரிக்கை மற்றும் முதலுதவி பற்றிய செயல் விளக்கம் (Demonstrate safety precaution and first aid)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்

- பாதுகாப்புக் குறியீடுகளின் நான்கு அடிப்படை வகைகளை அடையாளம் கண்டு அதன் அர்த்தத்தை அறிதல்
- சாலை பாதுகாப்பு குறியீடுகளின் அர்த்தத்தை / பொருளை படித்தறிந்து பதிவு செய்தல்
- வெவ்வேறு நிலைகளில் நினைவிழந்து பாதிக்கப்பட்டவருக்கு மூச்சுவிட உதவுதல்
- இரத்தக் கசிவை நிறுத்த சிகிச்சை செய்தல்.


Fig 1


Fig 2


Fig 3


Fig 4


Fig 5


Fig 6


Fig 7


Fig 8


Fig 9


Fig 10


Fig 11


Fig 12


Fig 13


Fig 14


Fig 15


Fig 16


Fig 17


Fig 18


Fig 19


Fig 20

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 1: **பாதுகாப்பு குறியீடுகளின் நான்கு அடிப்படை பிரிவுகளையும் பொருளையும் கொண்டு அடையாளம் காணவும்**

| |
|---|
| **பயிற்றுநர் பல்வேறு பாதுகாப்பு அடையாளக் குறியீடுகளின் (safety signs) வகைகளைத் தந்து அவற்றின் பொருள்/ அர்த்தம் (meanings) வரையறை முதலியவற்றை விவரிப்பார். பயிற்சி பெறுவோரை sign-ஐ அடையாளங் காணச் சொல்லி அட்டவணையில் (table-ல்) பதிவு (record) பண்ணச் சொல்வார்.** |

1 சார்ட்டில் இருந்து பாதுகாப்பு அடையாளக் குறியீடுகளை அடையாளங் காண்க (Identify the safety sign).

2 அட்டவணை 1-ல் (Table 1-ல்) Category-யின் பெயரைப் பதிவு (record) செய்யவும்.

3 பாதுகாப்புச் சின்னங்களை (safety sign) அவற்றின் பொருள், விவரம் கூறி அட்டவணையில் குறிப்பிடுக.

**அட்டவணை -1 (Table 1)**

| படம் எண் (Fig No) | அடிப்படைப்பிரிவுகள் பாதுகாப்புச்சின்னம் (Basic categories/ safety sign) | பொருள்/அர்த்தம் விபரங்கள் (Meaning / description) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

உங்கள் பயிற்றுநரிடம் சோதிப்பதற்காகக் காண்பித்து வாங்கவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **சாலை பாதுகாப்பு குறியீடுகளின் பொருளைப் படித்து பதிவுசெய்தல்**

| |
|---|
| **அனைத்து சாலை பாதுகாப்பு குறியீடுகள் மற்றும் போக்குவரத்து காவல் குறியீடுகள் ஆகியவற்றை பயிற்றுநர் விவரிக்க வேண்டும்.** |

1 சார்ட்டில் கொடுக்கப்பட்ட குறியீடுகளை வாசித்து அவற்றின் வகைகள் மற்றும் அர்த்தங்களை அட்டவணை -2ல் குறிப்பிடவும்.

2 பயிற்றுநரால் பெறப்பட்டு சரிபார்க்கவும்.

| |
|---|
| **Assumption - (யூகம்)- எளிதாக நிர்வகிக்க பயிற்றுநர் (Instructor) பயிற்சியாளர்களை (trainees) ஒரு தொகுதி வாரியாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும் புத்துயிர் கொடுக்கும் முறையைச் செய்து காட்டும்படி வினவலாம்.** |



Fig. 1 Fig. 2 Fig. 3 Fig. 4 Fig. 5 Fig. 6 Fig. 7 Fig. 8

© NIMI NOT TO BE REPUBLISHED

அட்டவணை - 2 (Table 2)

| படம் எண் (Fig No) | அடிப்படைப்பிரிவுகள் பாதுகாப்புச்சின்னம் (Basic categories/ safety sign) | பொருள்/அர்த்தம் விபரங்கள் (Meaning / description) |
|---|---|---|
| 11 | | |
| 12 | | |
| 13 | | |
| 14 | | |
| 15 | | |
| 16 | | |
| 17 | | |
| 18 | | |
| 19 | | |
| 20 | | |

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **வெவ்வேறு நிலைகளில் நினைவிழந்து பாதிக்கப்பட்டவருக்கு மூச்சுவிட உதவுதல்**

**செயற்கை சுவாசம் பெறுவதற்குப் பாதிப்புக்குள்ளானவரைத் (victim) தயார் செய்தல்:**

1 பாதிக்கப்பட்ட நபரின் சுவாசத்திற்குத் உடைகள் தடையாக இருக்குமானால் உடைகளைத் தளர்த்தி விடவும்.

2 அவருடைய வாயில் வெளிப் பொருட்கள் ஏதேனும் சிக்கி இருந்தால் அதனை அகற்றி பாதிக்கப்பட்ட நபரின் வாய் திறந்தபடி இருக்குமாறு வைக்கவும்

3 பாதிக்கப்பட்ட நபரைப் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளோடு Level ground-ற்கு கொண்டு வரவும்.

4 தாமதமில்லாமல் உடனடியாக செயற்கை சுவாசத்தைத் துவக்கவும் உடைகளைத் தளர்த்துவதில் அல்லது இறுக்கமாக மூடியுள்ள வாயைத் திறக்க முயற்சிப்பதில் அதிக நேரத்தை வீணாக்கி விடாதீர்கள்.

Fig 1




5 பாதிக்கப்பட்டவருக்கு உள்பாகங்களின் காயங்கள் ஏற்படாது தடுப்பதற்கு, முரட்டுதனமான செயல்களைத் தவிர்க்கவும்.

6 உடனடியாக டாக்டருக்குத் தகவல் சொல்லி அனுப்பவும்.

**நெல்சனின் arm-lift back முறையில் பாதிக்கப்பட்ட நபருக்குப் புத்துயிர் கொடுத்தல்**

**மார்பிலும் / வயிற்றிலும் (belly) காயங்கள் இருந்தால் அந்நபருக்கு Nelson's arm-Lift back pressure முறையைப் பயன்படுத்தக் கூடாது.**

NOT TO BE REPUBLISHED © NIMI

7 பாதிக்கப்பட்ட நபரை, (அவரது முகம் கீழ்ப்புறம் நோக்கி இருக்கும்படி அவருடைய (மேல் கைகள்) மடிக்கப்பட்டு (fold பண்ணப்பட்டு) உள்ளங்கைகள் (palms) ஒன்றின் மேல் ஒன்று இருக்குமாறு வைத்து தலையானது கன்னத்தின் மேல் உள்ளங்கைகள் மேல் இருக்குமாறு வைக்கவும். பாதிக்கப்பட்ட நபரின் கைக்கு அருகில் முழங்காலால் மண்டியிட்டு அமரவும், victim-ன் (பாதிக்கப்பட்டவரின்) முதுகில் armpits (அக்குள்), lineக்கு, அப்பால் உங்கள் கைகளை வைக்கவும். அப்போது உங்கள் விரல்கள் வெளிப்புறமாகவும் கீழ்ப் புறமாகவும் விரிந்து இருந்து, பெருவிரல்கள் (thumbs) Fig 2-ல் காட்டியபடி ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டு இருக்கட்டும்.

Fig 2




8 கிட்டத்தட்ட செங்குத்தாக (nearly vertical) இருக்கும் வரை உங்கள் arms-ஐ (மேல் கைகளை) நேராக வைத்து, மெதுவாக முன்னோக்கி அசைந்து (rockஆக) Fig 3-ல் காட்டியபடி விக்டிமின் (victim-ன்/ பாதிப்புக்குள்ளான நபரின்) நுரையீரலில் இருந்து (lungs-ல் இருந்து) காற்று வெளியேறும்படிச் செய்ய victim-ன் முதுகை அழுத்தவும்.

9 மேலே சொல்லப்பட்ட அசைவை (rocking backwards) உங்கள் கைகள் கீழ்நோக்கி sliding ஆகும்படி அப்போது victim-ன் arms உடன் ஒன்றிணைந்து இயங்கச் செய்து, victim-ன் upperarm -ஐ முழங்கைக்கு (elbows) சற்றுமேலே Fig 4-ல் காட்டியபடி பிடிக்கவும். பின்னோக்கி அசைவதைத் (rock) தொடரவும்.

10 நீங்கள் பின்னோக்கி அசையும் போது Fig 5-ல் காட்டியபடி victim-ன் மேல் கைகளை (arms) உங்களை நோக்கி இழுக்கவும். நீங்கள் அவரது தோள்களில் விறைப்பை (tension-ஐ) உணரும் வரை அவ்வாறு செய்யவும். இந்த நிகழ்வை நிறைவு செய்ய, victim-ன் கைகளைத் தாழ்த்தி, உங்கள் கைகளை ஆரம்ப நிலைக்குக் கொண்டு செல்லவும். (பண்ணவும்)

Fig 3




Fig 4




Fig 5




11 victim இயல்பாக மூச்சுவிடும் வரை / சுவாசிக்கும் வரை செயற்கை சுவாசத்தைத் (artificial respiration) தொடரவும், தயவு செய்து கவனிக்கவும் சில நிகழ்வுகளில் இதற்கு அதிக நேரம் பிடிக்கலாம்.

© NIMI NOT TO BE REPUBLISHED

12 பாதிப்புக்குள்ளான நபர் புத்துயிர் பெறும் போது பாதித்தப்-ஐ சூடான தண்ணீர் பாட்டில்கள் அல்லது வெதுவெதுப்பான செங்கற்களால் பொதிந்து வைக்கப்பட்ட (wrapped up) போர்வையால் (blanket) warm ஆக வைக்கவும். மேல் கைகளின் (arms) உட்புறம் மற்றும் கால்களை இதயத்தை நோக்கி மென்மையாக அசைந்து இரத்த ஓட்டத்தை தூண்டவும். (stimulate circulation)

13 படுத்திருக்கும் நிலையிலேயே அந்நபரை வைத்து இருக்கவும் மற்றும் அவராக முயற்சி செய்ய விட வேண்டாம்.

**அவருக்கு முழுநினைவு திரும்பும் வரை எந்தவொரு stimulant-ஐயும் அவருக்குத் தர வேண்டாம்.**

**ஸ்கிபர்ஸ் முறையில் பாதிக்கப் பட்ட நபருக்கும் புத்துயிர் கொடுத்தல் (resusciate)**

**பாதிக்கப்பட்ட நபரின் மார்பு மற்றும் வயிற்றில் காயங்கள் இருந்தால் இந்த முறையைப் பயன்படுத்தாதீர்கள்.**

14 பாதிப்புக்குள்ளான நபரை அவரது வயிற்றின் மேல் படுக்க வைத்து, ஒரு கை முன்னோக்கி நேராக நீட்டியிருக்குமாறும் அடுத்த (முன்கை), முழங்கையில் (elbow) வளைந்தும் (bent ஆகியும்) முகம் பக்கவாட்டில் திரும்பியும், Fig 6-ல் காட்டியபடி கை (hand) அல்லது முன்கையில் (fore arm) தாங்கப் பட்டிருக்குமாறும் வைக்கவும்.

15 Fig 6-ல் காட்டியபடி உங்கள் விரல்களும் (fingers) பெருவிரலும் (thumbs) இருக்கும்படிச் செய்து, நோயாளியின் தொடைகள் (thighs) இரண்டும் உங்களின் முழங்கால்களுக்கு (knees) நடுவில் இருக்கும்படி பாதிக்கப்பட்ட நபரின் மீது இரண்டுகால்கள் படத்தில் காட்டியவாறு மண்டியிடவும் (kneel astride).

Fig 6




16 முன்கைகளை (arms) நேராக வைத்து (held straight) உங்கள் உடம்பின் எடை படிப்படியாக victim-ன் கீழ் ribs ஆல் தாங்கப்படுமாறு மெதுவாக முன்னோக்கி swing ஆகி நுரையீரலில் (lungs-ல்) இருந்து காற்று வெளிவருமாறு செய்யவும். (Fig 7)

Fig 7




17 இப்போது உடனடியாகப் பின்னோக்கி swing ஆகி (வளைந்து) victim-ன் உடலில் இருந்து எல்லா அழுத்தமும் விடுபடுமாறு செய்து Fig 8-ல் காட்டியபடி) இதன் மூலம் காற்றால் நுரையீரல் நிரம்ப அனுமதிக்கவும்.

Fig 8




18 இரண்டு வினாடிகளுக்குப் பிறகு (after two seconds) மீண்டும் முன்னோக்கி வளைந்து மேற்கூறிய செயலை (cycle) ஒரு நிமிடத்திற்கு 12 முதல் 15 தடைவைத் திரும்பத் திரும்பச் செய்க.

19 செயற்கை சுவாசம் தருவதை, victim தானாக இயல்வு நிலை சுவாசத்தை பெறும் வரைத் தொடரவும்.

**வாயுடன் வாய் முறையில் (mouth-to-mouth method-ல்) victim-க்குப் புத்துயிர் அளித்தல்.**

20 பாதிக்கப்பட்ட நபரை (victim-ஐ) அவரது முதுகின் மேல் தட்டையாகப் படுக்க வைத்து, அவரது தோள்களுக்கடியில் (under his shoulders) அவரது தலை நன்கு பின்னோக்கி உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், ஒரு துணிக் கற்றையை (roll of clothing) வைக்கவும் (Fig 9)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 9



21 கன்னங்கள்/(chin) நேராக மேல்நோக்கி இருக்குமாறு victim-ன் தலையைப் பின்னோக்கித் திருப்பவும். (Fig 10)

Fig 10



22 Victim-ன் தாடையை (jaw) Fig 11-ல் காட்டியபடி இறுக்கிக் கெட்டியாகப் பிடித்து, கீழ்ப்புறம் உள்ள பற்கள் (teeth) மேற்புறப் பற்களை விட உயரமாக இருக்கும்படி வரும் வரை அதனை உயர்த்தவும், அல்லது காது மடல்களின் (ear lobes) அருகில் தாடையின் (jaw) இரண்டு பக்கமும் உங்கள் விரல்களை வைத்து மேல்நோக்கி இழுக்கவும்.

Fig 11




23 நாக்கானது (tongue) காற்று உட்செல்லும் வழியைத் தடுக்காமல் பாதுகாக்க / (தடுப்பதைத் தவிர்க்க) தாடையின் நிலையை (jaw position-ஐ)செயற்கை சுவாசம் முழுமையும் அவ்வாறே பராமரிக்கவும் / வைத்திருக்கவும்.

24 ஆழ்ந்து மூச்சு எடுத்து ( deep breath எடுத்து) உங்கள் வாயை victim-ன் வாய் மீது Fig 12-ல் காட்டியபடி வைக்கவும். airtight contact இருக்குமாறு அவ்வாறு செய்யவும், victim-ன் மூக்கைக் (nose) கிள்ளி (pinch) பெருவிரல் மற்றும் fore fingerஆல் மூடவும். நீங்கள் நேரடியான தொடுதலை விரும்பாவிட்டால், ஒரு porous துணியை உங்கள் வாய்க்கும் (mouth) மற்றம் victim-ன் வாய்க்கும் நடுவில் வைக்கவும். சிறு குழந்தையெனில் உங்கள் வாயை அதன் வாய் மற்றும் மூக்கு மேல் வைக்கவும்.

Fig 12




25 மார்பு (chest) raise ஆகும் வரை (உயரும் வரை) victim-ன் வாய்க்குள் ஊதவும் (blow); (குழந்தையெனில் மெதுவாக ஊதவும்) உங்கள் வாயை அகற்றி மூக்கின் மேல் உள்ள பிடியை விடுவித்து, அந்நபர் மூச்சு விட (exhale) அனுமதிக்கவும் அப்போது உங்கள் தலையைத் திருப்பி, காற்று வெளியேறும் சப்தத்தைக் கேட்கவும். Victim respond பண்ணுவதற்கேற்ப முதல் 8 to 10 breathings அவ்வளவு வேகமாக இருக்க வேண்டும். பின்னர் அந்த வேகத்தை ஒரு நிமிடத்திற்கு சுமார் 12 தடவையாகக் குறைத்துக் கொள்ளலாம் (குழந்தை யெனில் 20 தடவை)

**காற்று உள்ளே நுழைய இயலாவிட்டால், victim-ன் தலை மற்றம் தாடையின் (jaw) நிலையைச் சோதிக்கவும் (check) மற்றும் தடைகள் ஏதேனுமிருக்கிறதா என்பதற்காக, வாயை மறுபடி சோதிக்கவும் (recheck) பின்னர் விசையுடன் (forcefully) மீண்டும் முயற்சிக்கவும். மார்பானது (chest) இப்போதும் உயராவிடில் (rise ஆகாவிடில்) victim-ன் முகத்தைக் கீழ் நோக்கித் திரும்பி, தடைகள் வெளி வரும்படி அவரது முதுகில் அடிக்கவும் (strike sharply).**

**சில சமயங்களில், காற்று victim-ன் வயிற்றுக்குள் நுழைந்து வயிறு உப்பிக்/ வீக்கிக் காணப்படும். மூச்சு வெளிவிடும் சமயத்தில் வயிற்றை இலேசாக அழுத்தி காற்றை வெளியேற்றவும்.**

**மூக்கின் மீது வாய் வைத்து ஊதும் (Mouth-to-nose) முறையில் (method-ல்) victim-ஐப் புத்துயிர் பெறச் செய்தல்.**

**Victim-ன் வாயைத் திறக்க முடியாத போது அல்லது உங்களால் அகற்ற முடியாத தடை (blockage) இருக்கும்போது இந்த முறையைப் பயன்படுத்தவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

26 Victim-ன் உதடுகளை உறுதியாக மூட (Firmly shut) உங்கள் ஒரு கையின் விரல்களை உபயோகித்து, victim-ன் மூக்குத் துவாரத்தை உங்கள் உதடால் மூடி அவருள் பண்ணவும். Victim-ன் மார்பு உயர்ந்தும் தாழ்ந்தும் செயலாற்றுகிறதா என்பதைச் சோதிக்கவும் (Fig 13)

Fig 13




27 Victim respond பண்ணும் வரை இதே பயிற்சியை நிமிடத்திற்கு 10 முதல் 15 தடவை வேகத்தில் திரும்பத் திரும்பச் செய்யவும்.

28 டாக்டர் (மருத்துவர்/Doctor) வரும்வரை இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து செய்யவும்.

**நெஞ்சு அடைப்பு (cardiac arrest) (CPR) நெஞ்சு/ இதயம்/ நுரையீரல் தொடர்பான (cardio pulmanory) பாதிப்புக் குள்ளான நபருக்குப்புத்துயிர் தருதல்.**

> **இதயம் துடிப்பது நின்று விட்ட நிகழ்வுகளில் நீங்கள் உடனடியாகச் செயல்பட வேண்டும்.**

29 Victim நெஞ்சடைப்புக்கு உள்ளானவரா (cardiac arrest) என்று விரைவாகச் சோதிக்கவும்.

> **கழுத்தில் (Fig 14) cardiac pulse இல்லாததை வைத்து, உதடுகளைச் சுற்றி நீலநிறம் இருப்பதும் மற்றும் கண்ணின் பாவை (pupil of the eyes பரந்து விரிந்து இருப்பதை வைத்து) நெஞ்சடைப்பை (cardiac arrest) நிச்சயிக்க/ உணர முடியும்.**

Fig 14




30 உறுதியான பரப்பின் மீது முதுகின் மேல் victim-ஐப் படுக்க வையுங்கள்.

31 பக்கவாட்டில் மார்பை நோக்கி மண்டியிட்டு (kneel alongside) மார்பு எலும்பின் கீழ்பாகத்தை இடங்காணவும். (Fig 15)

Fig 15




32 ஒரு கையின் உள்ளங்கையை (palm) மார்பெலும்பின் கீழ்ப்பாகத்தின் மையத்தில் வைத்து, விலா எலும்பைத் தாண்டி உங்கள் விரல்கள் இருக்குமாறு செய்யவும். உள்ளங்கையை (palm) உங்கள் மறுகையால் மூடி (coverage) Fig 16-ல் காட்டியபடி உங்கள் விரல்களைப் பூட்டவும்.

Fig 16




33 உங்கள் கைகளை நேராக நீட்டி, மார்பெலும்பின் (breastbone-ன்) கீழ்ப் பகுதியில் கீழ்நோக்கி அழுத்தவும், (press) பின்னர் அழுத்தத்தை (pressure) விடுவிக்கவும். (Fig 17) படி (step) 5-ஐ திரும்பத் திரும்பச் செய்யவும் (repeat) வினாடிக்கு ஒரு தடவை என்ற கணக்கில் 15 தடவை திரும்பத் திரும்பச் செய்யவும்.

34 இதயத்துடிப்பை (cardiac pulse-ஐச்) சோதிக்கவும் (Fig 18)

35 பாதிக்கப்பட்ட நபரின் வாயை (mouth) நோக்கி நகர்ந்து இரண்டு மூச்சுக்காற்று/ சுவாசம் (breaths) கொடுக்கவும், (வாயுடன் வாய் வைத்துப் புத்துயிர்ப்பு தருதல்) (Mouth-to-mouth resuscitation) (Fig 19)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 17



Fig 18



Fig 19



இப்படியே மேலும் 15 அழுத்தம் (compressions) இதயத்திற்கும் கொடுத்து, அதைத் தொடர்ந்து இரண்டு சுவாசம் (two breaths) வாயுடன் வாய் வைத்துப் துப்பபித்து தருதலைத் தொடரவும். அடிக்கடி (frequrent intervels-ல்) நாடித்துடிப்பைச் (pulse) சோதிக்கவும்.

36 இதயத்துடிப்பு திரும்பவும் கிடைத்த வுடன், அழுத்துவதை (compression) உடனே நிறுத்தவும். ஆனால் வாயுடன் வாய் வைத்துப் துப்பித்து பிடிப்பு தருவதை, இயல்பான சுவாசம் முழுவதும் மறுபடியும் கிடைக்கும் வரைத் தொடரவும்.

37 Fig 20-ல் காட்டியபடி victim-ஐ recovery நிலையில் (position) வைக்கவும். அவரை warm ஆக (வெதுவெதுப்பாக) வைக்கவும் மற்றும் மருத்துவ உதவி விரைவில் கிடைக்கும்படி செய்யவும்.

Fig 20



***பிற படிகள்* (other steps)**

38 உடனடியாக டாக்டரை (doctor)அழைக்க ஏற்பாடு செய்யவும்.

39 சூடான தண்ணீர் பாட்டில்கள் அல்லது வெதுவெதுப்பான செங்கல் (bricks) கொண்டு சுற்றப்பட்ட (wrapped up) ஒரு போர்வையால் (blanket) பாதிக்கப்பட்ட நபரை warm-ஆக வைத்திருக்கவும். மேல் கைகளின் உட்புறத்தை மற்றம் கால்களை இதயத்தை நோக்கி stroking செய்து இரத்த ஓட்டத்தைத் தூண்டவும் (stimulate circulation)

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **இரத்தக் கசிவால் பாதிக்கப்பட்ட நபருக்கு சிகிச்சை**

1 இரத்தம் கசியும் இடத்தைத் கண்டுபிடிக்கவும்.

2 முடிந்தால் இதயத்திற்கு மேலே காயப்பட்ட பகுதியை உயர்த்தவும்.

3 தொற்றத் தரடக்காப்பு செய்யப்பட்ட துணியால் (sterile cloth) இரத்தம் கசியும் பகுதியில் நேரடியாக அழுத்தம் கொடுக்கவும்.

4 5 வினாடிகளுக்கு அப்படியே அழுத்தவும்.

5 இரத்தக் கசிவு நின்றுவிட்டதா எனப் பார்க்கவும் இல்லாவிடில் மேலும் 15 நிமிடங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும்.

6 காயத்தை (wound) சுத்தம் செய்யவும்.

7 மிருதுவான பொருளால் காயத்தை Bandage பண்ணவும். (Fig 1)

NOT TO BE REPUBLISHED © NIMI

8 டாக்டரிடம் சிகிச்சை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட நபருக்கு ஆலோசனை கூறவும்.

Fig 1




— — — — — — — — —

© NIMI
NOT TO BE REPUBLISHED

## தீயணைத்தல் முறைகள் பற்றிய செயல் விளக்கம் (Demonstrate - Fire fighting)

நோக்கம்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
• **தீ ஏற்பட்டால் பின்பற்ற வேண்டிய பொதுவான நடைமுறைகள்.**

| **தேவையானவைகள் (Requirements)** |
|---|
| **கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**<br>• தீயணைப்பான்கள்<br>- பல்வேறு வகைகள் - ஒவ்வொன்றிலும் ஒன்று |

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **தீ ஏற்பட்டால் பின்பற்றப்பட வேண்டிய பொதுவான நடைமுறைகள்**

Fig 1




1 கூக்குரலிடவும், தீ ஏற்பட்டால் கீழே விவரித்துள்ளபடி, ஆபத்து அடையாளங்களைப் பின்பற்றவும்.

- குரலை உயர்த்தி தீ, தீ எனக் கூக்குரலிட்டு மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கவும்.
- விரைவாக சென்று விபத்து குறித்த அலரல்மணி (alarm bell)/ ஒலிக்கச் செய்யவும்.
- மற்ற முறைகளைப் பின்பற்றவும்.

2 அலரல்/ஆபத்து அடையாளம் கிடைத்தவுடன்.

© NIMI NOT TO BE REPUBLISHED

- வேலை செய்வதை நிறுத்தவும்.
- எல்லா இயந்திரங்களையும், மின் விநியோகத்தையும் நிறுத்தவும்.
- மின் விசிறிகள் (fans)/காற்று வீசிகள் (air circulators)/காற்று வெளியேற்றிகள் (exhaust fans) ஆகியவைகளை அணைக்கவும். (முதன்மை சொடுக்கியை அணைத்தல் நல்லது).

3 தீ அணைப்பதில் நீர் ஈடுபடவில்லை என்றால்,

- அவசர வெளியேறும் வழி மூலமாக அமைதியாக வெளியேறி விடவும்.
- இடத்தை காலி செய்யவும்.
- மற்றவர்களுடன் பாதுகாப்பான இடத்தில் ஒன்று கூடவும்.
- சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தீ பற்றித் தகவல் தெரிவிக்க யாராவது சென்றுள்ளார்களா என சோதிக்கவும்.
- கதவு, ஜன்னல்களை மூடவும். ஆனால் பூட்ட வேண்டாம் அல்லது தாழ்ப்பாள் இட வேண்டாம்.

4 தீயணைப்பதில் நீர் ஈடுபட்டால்,

- தீயைத் தகுந்த ஏற்பாட்டின்படி அணைக்க அறிவுரைகள் தரவும்/அறிவுரைகளைப் பெறவும்.
- அறிவுரைகளைத் தருவதாக இருந்தால்,
- தீயின் வகையை அறியவும்.
- போதுமான உதவியைக் கோரவும், தீயணைப்புக் குழுவிற்குத் தகவல் தரவும்.
- தீயை அணைப்பதற்கு அவ்விடத்தில் கிடைக்குப் பொருத்தமான இனத்தைக் கண்டறியவும்.
- தீயின் பரிமாணத்தை அறியவும், அவசர வழிகள் தடங்கலின்றி உள்ளனவா என உறுதி செய்துக் கொள்ளவும், பிறகு இடத்தை காலி செய்ய முயற்சிக்கவும். (வெடிக்கும் பொருட்கள், தீப்பற்றும் பொருட்கள் ஆகியவைகள் தீ ஏற்பட்டுள்ள இடத்தின் கண் பார்வை தூரத்திற்குள் இருந்தால் அவைகளை அகற்றவும்).
- தீயை அணைக்க குறிப்பிட்ட வேலையைச் செய்ய குறிப்பிட்ட நபரைப் பெயர்க் குறிப்பிட்டு செய்யவும்.

5 சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தீ விபத்து பற்றியும் அதை அணைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அறிக்கை அனுப்பவும்.

**எவ்வளவு சிறிய தீயாக இருந்தாலும் அதைப் பற்றித் தெரிவித்தால், தீ ஏற்பட்டதற்கான காரணத்தை விசாரித்தறிய உதவும். இதே போன்று தீ மீண்டும் ஏற்படாமல் தடுக்க அது உதவும்.**

**தீயணைத்தல்**

1 தீ எரிவதைக் கண்டால் 'தீ', 'தீ', 'தீ' எனக் கத்தி (shouting) (உரக்கச் சொல்லி) அருகில் இருப்போரை எச்சரிக்கவும் (alert).

2 தீத்தடுப்பு நிலையத்திற்குத் தகவல் உடனடியாகக் கொடுக்கவும் அல்லது தெரியப்படுத்த ஏற்பாடு செய்யவும்.

3 அவசர கால வழியைத் (emergency exit) திறந்து அவர்களை வெளியேறச் சொல்லவும்.

4 மின்சாரத்தின் இணைப்பை துண்டிக்கவும்.

**தீயின் அருகாமையில் யாரையும் செல்ல அனுமதிக்காதீர்கள்.**

5 தீயின் வகையை ஆய்வு செய்து அடையாளங் காண்க,

6 அட்டவணை-1ஐப் பார்க்கவும்.

7 'B' வகை என யூகித்துக் கொள்ளுங்கள் (Assume) எரியக் கூடிய திரவமாகக் கூடிய திடப் பொருட்கள் (flammable liquitiable solids)

8 $CO^2$ (Carbon dioxide) தீ அணைப்பானைத் (fire extinguisher) தேர்ந்தெடுக்கவும்.

9 $CO^2$ தீ அணைப்பானை இருக்கும் இடம் அறிந்து அதனை எடுக்கவும். அதன் காலாவதி தேதியைச் (expiry date) சோதித்துக் கொள்ளவும்.

10 Seal-ஐ உடைக்கவும் (Fig 2)

Fig 2



அட்டவணை - 1 (Table 1)

| | | |
|---|---|---|
| Class 'A' | மரத்துண்டு (wood), காகிதம், (paper) துணி, (Cloth) திடப் பொருட்கள் (Solid material) |  |
| Class 'B' | எண்ணெய் சார்ந்த தீ (கிரீஸ்) grease, கேசலின் (gasoline), எண்ணெய் (oil) மற்றும் திரவமாக்கப்பட்ட திடப் பொருட்கள் (liquefied solids) |  |
| Class 'C' | வாயு (Gas) மற்றும் திரவமாக்கப்பட்ட வாயுக்கள் (liquefied gases) |  |
| Class 'D' | உலோகம் மற்றும் மின்சார சாதனங்கள் (Electrical equipment) |  |

11 கைப்பிடியில் (handle) இருந்து பாதுகாப்பு (safety) pin-ஐ இழுக்கவும் (prill) (Fig 3) (தீ அணைப்பானின் மேற்புறம் pin இருக்கும்).

Fig 3




12 தீயின் அடிப்பாகத்தை (base of the fire) நோக்கி தீ அணைப்பானின் நாஸில் (nozzle) அல்லது hose-ஐப் பிடிக்கவும். (இது fuel fire-ன் மூல ஆதாரத்தை அகற்றும்) (Fig 4).

**உங்களை நீங்களே தாழ்வாக வைத்துக் கொள்ளுங்கள்.**

13 தீ அணைக்கும் பொருள் (agent) வெளிவர கைப்பிடி லீவரை மெதுவாக squeeze பண்ணவும் (Fig 5)

14 தீ அணையும் வரை fuel fire-க்கு மேலே தோராயமாக 15 செ.மீ பக்கம் பக்கமாக (side to side) sweep பண்ணவும் (Fig 5)

Fig 4




**தீ அணைப்பான்கள் (fire extinguishers) தொலைவில் இருந்து இயக்கப் படுவதாகத் தயாரிக்கப்பட்டவை ஆகும்.**

Fig 5



எச்சரிக்கை (caution)

15 தீயை அணைக்கும் போது அது மேலும் (flare up) கொழுத்திவிட்டு எரியலாம்

16 அது சரிவர அணையும் வரை கலங்காதீர்கள் (panic ஆக்காதீர்கள்)

17 தீ அணைப்பானைப் பயன்படுத்திய பிறகும் கூட தீ அணையாது எரிந்தால் அந்த இடத்தில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.

18 விஷப்புகையை வெளியிடும் தீயை (toxic smoke) அணைக்க முயற்சிக்க வேண்டாம், அதில் கைதேர்ந்த நபர்கள் (professionals) அந்தப் பணியைச் செய்ய விட்டு விடுங்கள்.

19 உங்கள் உயிரானது / வாழ்க்கையானது உங்கள் சொத்துக்களை (property) விட முக்கியமானது. எனவே நீங்களாக அல்லது மற்றவர்கள் risk எடுக்க வேண்டாம்.

**தீ அணைப்பானை (fire extinguisher) எளிதாக இயக்க கீழ்க்கண்டவற்றை நினைவில் நிறுத்துங்கள்.**

**ஞாபகத்தில் வையுங்கள் (remember)**

**P.A.S.S. இது தீ அணைப்பானை உபயோகிக்க உதவுவது.**

**P for pull (இழு)**

**A for aim (இலக்கு நோக்கு)**

**S for squeeze (அழுத்து)**

**S for sweep (ஊசலாட்டு)**

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# உயரமான இடத்தில் சுயபாதுகாப்பு சாதனங்கள் பயன்படுத்துதன் செயல் விளக்கம், ஆபத்துகளை அறிதல் மற்றும் சுய பாதுகாப்பு (Demonstrate working at height using PPE's and identify the hazards and take personal safety precautions)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்

- **உயரமான இடங்களில் சுய பாதுகாப்பு சாதனங்களுடன் (PPE) எப்படி வேலை செய்வது என்பதன் செயல் விளக்கம் (PPE)**
- **சுய பாதுகாப்புச் சாதனங்களை (PPE) அடையாளம் காணுதல்.**

**தேவையானவைகள் (Requirements)**

*பாதுகாப்பு உபகரணங்கள்*

- பாதுகாப்பு காரணிகள் (Safety shoes) - 1 ஜோடி
- பாதுகாப்பு கண்கவசங்கள் (Safety goggles) - 1 No.
- பாதுகாப்பு தலைக் கவசம்) (Safety helmet) - 1 No.
- பாதுகாப்பு பெல்ட் (Safety belt) - 1 தொகுப்பு
- காது பாதுகாப்பு சாதனம் (Safety ear plug) - 1 ஜோடி
- பாதுகாப்பு ஜாக்கட் (Safety jacket) - 1 No.

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **உயரமான இடங்களில் சுயபாதுகாப்பு சாதனங்களுடன் எப்படி வேலை செய்வது என்பதன் செயல் விளக்கம்**

1 உயரமான இடங்களில் செய்யப்படும் வேலை சரியாக திட்டமிட்டு ஒருங்கிணைக்கப் படுகிறது. (Fig 1)

Fig 1




2 உயரமான இடங்களில் வேலை செய்யும் போது ஏற்படக் கூடிய ஆபத்துகளை மதிப்பீடு செய்து உரிய சுய பாதுகாப்பு சாதனங்களை (PPE) தேர்ந்தெடுத்து பயன்படுத்த வேண்டும்.

3 உயரமான இடங்களில் வேலை செய்ய துவங்குவதற்கு முன்பு சரியான வேலை செய்யும் கருவிகள் மற்றும் உபகரணங்களை தேவையான அளவு தேர்வு செய்ய வேண்டும்.

> **பாதுகாப்பு உயரமான இடத்திற்கு செல்லும் முன் சரியான தொங்கும் பெல்ட் (Hanging belt) மற்றும் இதர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என உறுதி செய்ய வேண்டும். (Fig 2)**

Fig 2




© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 2: **சுய பாதுகாப்பு சாதனங்களை அடையாளம் காணுதல்**

1 அட்டவணை 1 -ல் உள்ள PPE -ஐ அடையாளம் காண்க **(Identify the personal protective equipment )**

**அட்டவணை 1 (Table 1)**

| படம் | |
|---|---|
| Fig 1   | Fig 2   |
| Fig 3   | Fig 4   |
| Fig 5   | Fig 6   |

© NIMI NOT TO BE REPUBLISHED

| படம் | |
|---|---|
| Fig 7  MRN1104J7 | Fig 8   MRN1104J8 |
| Fig 9  MRN1104J9 | |

2 உங்கள் பயிற்றுவிப்பாளரால் அதை சரி பார்க்கவும்.

**Table 1**

| Sl No | Name of PPE | Hazards | Type of protection |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# பொது கருவிகள், அளவிகள் மற்றும் சாதனங்களை அடையாளம் கண்டு அதன் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை அறிதல் (Identify general tools instruments & equipments with care and maintenance)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- பொதுவான பணிமனை கருவிகளை அடையாளம் காணுதல்
- பணிமனை சாதனங்களை அடையாளம் காணுதல்
- துல்லியமான கருவிகளை அடையாளம் காணுதல்
- கருவிகள், சாதனங்கள் மற்றும் அளக்கும் கருவிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.

| தேவையானவைகள் (Requirements) | |
|---|---|
| **கருவிகள்/அளவிகள் (Tools/ Instruments)** | **சாதனங்கள்/இயந்திரங்கள் (Equipment/Machines)** |
| • பொதுவான பணிமனைக் கருவிகள்<br>• துல்லியமாக அளக்கும் கருவிகள் | • பணிமனை சாதனங்கள் |

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **பொதுவான பணிமனைக் கருவிகளை அடையாளம் காணுதல்**

| படம் (Figure) | |
|---|---|
|  |  |
|   |  |

**Table 1**

| SI No | Name | Uses |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

NOT TO BE REPUBLISHED © NIMI

| படம் (Figure) | |
|---|---|
| Fig 5  Fig 7  | Fig 6  |
|  | Fig 8  |
| Fig 9  | Fig 10  |
| Fig 11  | Fig 12  |

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 2: **பணிமனை சாதனங்களை அடையாளம் காணுதல்**

| வ. எண் | படம் (Figure) | |
|---|---|---|
| Fig 1 |  | Fig 3  |
| Fig 2 |  | Fig 4  |

**Table 2**

| SI No | Name | Uses |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **துல்லியமாக அளக்கும் கருவிகளை அடையாளம் காண்க**

<table>
<tr><th>வ. எண்</th><th>படம் (Figure)</th><th></th></tr>
<tr><td>Fig 1</td><td>
</td><td>Fig 2<br>
</td></tr>
<tr><td>Fig 3</td><td></td><td>Fig 4<br>
</td></tr>
<tr><td>Fig 5</td><td></td><td></td></tr>
</table>

**Table 3**

| SI No | Name | Uses |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 4: **கருவிகள், சாதனங்கள் மற்றும் அளக்கும் கருவிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு**

1 பென்ச் வைசை (bench vice - மேடை பிடித்திருக்கி) அதிகமாக அழுத்தம் கொடுக்கக் கூடாது.

2 தளர்வான கைப்பிடியுடைய (Loose handle) சுத்தியலை பயன்படுத்தக் கூடாது.

3 சுத்தியலின் முகப்பு, எண்ணெயிலிருந்தும், கிரீஸ்லிருந்தும், தலைப்பகுதி காளான் குடை விரிவடைவதை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

4 ஸ்டீல் ரூலை ஸ்க்ரூ டிரைவராக பயன்படுத்தக் கூடாது.

5 ஃபைலை (file) கைபிடி இல்லாமல் பயன்படுத்தக் கூடாது.

6 ஃபைலை எறிவதால் அதனுடைய பற்கள் சேதமடைய வாய்ப்புகள். ஆகவே ஃபைலை எறியக் கூடாது.

7 பிளையரை (Plier) சுத்தியலாக பயன்படுத்தக் கூடாது.

8 வெட்டுளியின் முனை சரியான கோணத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

9 வெட்டுளியின் தலைப்பகுதி காளான் குடை போல் (Mushroom head) விரிவடைவதை தவிர்க்க வேண்டும்.

10 சிறிய டிரில் பிட்களை (Drill bit - தமர்) பயன்படுத்தி துளையிடும் பொழுது அதிகப்படியான அழுத்தம் தரக்கூடாது.

11 எலக்ட்ரிக்கல் டிரில்லிங் மிஷினாக இருந்தால் மிகவும் நன்றாக எர்த்திங் (Earth) செய்திருக்க வேண்டும் மற்றும் இன்சுலேஷன் (Insulation) நன்றாக இருக்க வேண்டும்.

12 வெர்னியர் காலிபரை உபயோகப்படுத்திய பின் அதற்குண்டான பெட்டியில் வைத்து பாதுகாக்க வேண்டும்.

13 மைக்ரோ மீட்டரை பயன்படுத்தி அளக்கும் பொழுது அதிகப்படியான அழுத்தம் தரக் கூடாது.

14 அனைத்து அளவிகளும் பயன்படுத்திய பின்பு பனியன் துணியைக் கொண்டு அதிலுள்ள கிரீஸ், எண்ணெய், தூசி ஆகியவற்றை நீக்கி சுத்தம் செய்து அதற்குண்டான பாதுகாப்பு உறை அல்லது பெட்டியில் வைத்து பாதுகாக்க வேண்டும்.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# அளத்தல், குறியிடுதல், பஞ்சிங், ஹேக்சாயிங் மற்றும் ஃப்ளாட் பைலிங் (Practice flat filing, marking, punching, sawing, drilling jappin and reaming)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- பிளாட் பைலிங் மற்றும் பிளாட்னஸ் சோதிப்பது
- கொடுக்கப்பட்ட அளவிற்கேற்ப இணை கோடுகளை மார்க் செய்தல்
- சென்டர் பஞ்சு மற்றும் பால் பீன் சுத்தியல் கொண்டு எவ்வாறு பஞ்சு செய்தல்
- ஹாக்சா பிளேடை இணைத்தல் மற்றும் இயக்குதல்

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- டபுள் கட் பாஸ்டார்ட் பிளாட் பைல் 150 mm - 1 No.
- டபுள் கட் செகண்ட் கட் பிளாட் பைல் 150 mm - 1 No.
- டிரை ஸ்குயர் (Try square - மூலை மட்டம்) 150 mm - 1 No.
- பால் பீன் சுத்தியல் 220 gm - 1 No.
- ஸ்டீல் ரூல் 300 mm - 1 No.
- சென்டர் பஞ்ச் 100 mm - 1 No.
- ஸ்கேலுடன் கூடிய மார்கிங் பிளாக் 150 mm - 1 No.
- ஹாக்சா பிரேம் பிளேடுடன் 300 mm, 24 TPI - 1 No.

**சாதனங்கள்/இயந்திரங்கள் (Equipment/ Machines)**

- பென்ச் வைஸ் 150 mm - 1 No.
- ஆங்கிள் பிளேட் 150 mm - 1 No.
- சர்பேஸ் பிளேட் 450mm x 450mm - 1 No.
- ஸ்டேண்டுடன் கூடிய ஆன்வில் 300 mm, 100 kg - 1 No.

**பொருட்கள் (Materials)**

- MS சேனல் 75 x 40 x 155மி.மீ - 1 துண்டு

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **பிளாட் ஃபைலிங் பயிற்சி மற்றும் பிளாட்னஸ் தன்மையை சரிபார்க்கவும்**

1 கொடுக்கப்பட்டுள்ள (MS channel)-லின் அளவையும் (155 x 75 x 40 mm) மற்றும் அதன் கோணத்தையும் சரிபார்க்க வேண்டும். (Fig 1)

Fig 1




2 பைலின் உதவியுடன் (channel)-ன் எல்லா பரப்பிலும் உள்ள துருவை வெளியேற்ற வேண்டும். அதன் பிறகு காட்டன் வேஸ்ட்-ஐ கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். (Fig 2)

Fig 2




© NIMI NOT TO BE REPUBLISHED

3 வேலை செய்வதற்காக பைலை பிடிக்கும் போது கை கட்டை விரலானது நன்றாக இருக்கிப்பிடித்தும் இடது கால் வலது காலைவிட 300 மி.மி முன்னோக்கியும் இருக்குமாறு நிற்க வேண்டும். மேலும் வைஸ்-ன் உயரம் கைகளை மடக்கும் போது இருக்கும் உயரத்திற்கு இருக்கிறதா என்று சரிபார்த்து வேலையை தொடங்க வேண்டும். (Fig 3)

Fig 3




4 பணிப் பொருளை, பெஞ்ச் வைசில் அதன் அகலவாக்கில் நன்றாக இறுக்கி பிடிக்க வேண்டும். (Fig 4).

Fig 4




5 பைலிங் செய்யும் போது பைலானது முன்னோக்கி செல்லும் போது அதிகமான அழுத்தத்துடனும், பின்னோக்கி வரும் போது அழுத்தமின்றியும் இருக்குமாறு பைலிங் செய்ய வேண்டும். பணிப்பொருளின் ஒரு பரப்பை பைலிங் முடித்த பிறகு, இதே போல் அனைத்து பரப்புகளையும் இதே முறையில் பைலிங் செய்ய வேண்டும். முழுவதுமாக பைலிங் செய்த பின்பு டிரை ஸ்கொயரைக் கொண்டு பரிசோதிக்க வேண்டும். (Fig 5)

Fig 5




6 பரப்பு A - ஐ பைலிங் செய்து முடித்த பிறகு B- உடன் டிரை ஸ்கொயரை கொண்டு செங்குத்தை சரிபார்க்க வேண்டும். (Fig 6)

Fig 6




- பரப்பு D- ஐ பைலிங் செய்து முடித்த பிறகு A - உடன் டிரை ஸ்கொயரைக் கொண்டு சரிபார்க்க வேண்டும்.
- பரப்பு C- ஐ பைலிங் செய்து முடித்தபிறகு பரப்பு A,B மற்றும் D உடன் செங்குத்தை சரிபார்க்க வேண்டும்.
- பரப்பு F- ஐ பைலிங் செய்து முடித்த பிறகு பரப்பு A,B,C மற்றும் D உடன் செங்குத்தை சரிபார்க்க வேண்டும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

7 இறுதியாக இந்தத் துண்டு நமக்குக் கிடைக்கும். (Fig 7)

Fig 7




— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **கொடுக்கப்பட்ட அளவிற்கேற்ப இணையான கோடுகளைக் குறிக்கவும்**

1 சேனலின் பரப்பு B- ஐ சாக்பீஸ் மற்றும் தண்ணீர் உதவியுடன், முழுவதுமாக தேய்க்க வேண்டும். பின்னர் இந்த பரப்பை நன்றாக உலரவிட வேண்டும்.

2 மார்க்கிங் பிளாக்ஐ சர்ஃபேஸ் பிளேட்டில் வைத்தும் பணிப்பொருளை ஆங்கில் பிளேட்டில் பொருத்த வேண்டும். மார்க்கிங் பிளாக்கில் ஊசியை பொருத்தி ஸ்டீல் ரூல் ன் உதவியுடன் அளவுகளை மார்க்கிங் செய்ய வேண்டும். (Fig 1)

Fig 1




3 MS சேனலின் பரப்புகளை மாற்றி வைத்து தேவைக்கேற்ப, மேலே குறிப்பிட்டவாறு மார்க்கிங் செய்து முடிக்க வேண்டும்.

4 பணிப்பொருளை ஆன்வில்ல் வைக்க வேண்டும்.

5 மார்க்கிங் செய்த கோட்டில் சென்டர் பஞ்ச் மற்றும் சுத்தியல் உதவியுடன் பஞ்ச்-ன் குறுக்குக் கோடு நன்றாக தெரியுமாறு பஞ்சிங் செய்ய வேண்டும். (Fig 2)

Fig 2




— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 3: **சென்டர் பன்ச் மற்றும் பால் பீன் சுத்தியுடன் பன்ச் செய்யவும்**

1 வேலை பொருளை சர்பேஸ் பிளேட்டின் மூலம் வைத்தல் மற்றும் ஆங்கில் பிளேட்டின் மூலம் பிடித்தல் மற்றும் சேனலில் பக்கத்தில் வரைதல். (Fig 1)

Fig 1




2 வேலை பொருளை வெளியே எடுத்து சோதிக்கவும்.

3 ஆன்வில் மேலே பொருளை வைத்து வரையப்பட்ட இடத்தில் டாட் பஞ்ச் (புள்ளி பஞ்ச்) மூலம் ஒரே நேர்க்கோட்டில் சுத்தியின் உதவியால் பஞ்ச் செய்ய வேண்டும்.

4 சேனலில் பஞ்ச் செய்த பிறகு புள்ளி விழுந்திருக்கின்றதா அல்லது விழுந்திருக்கவில்லையா என்று பார்க்கவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **ஹாக்சா பிளேடை ஃபிக்ஸ் செய்து மற்றும் சாயிங் பயிற்சி செய்யவும்**

1 ஹாக்சா பிளேடை பிரேமில் சரியாக பொருத்த வேண்டும். பின்பு பிளேடு நல்ல முறையில் விரைப்புத்தன்மையுடன் இருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும். (Fig 1)

Fig 1




2 கட்டை விரலின் நகத்தின் மூலம் திசை சரியாக உள்ளதா என்று பார்க்க வேண்டும். மேலும் 10 மி.மீ இடைவெளியில் வெளியில் இருக்குமாறு பொருத்த வேண்டும். நன்றாக பிடித்து ஹாக்சா நேராக முன்னோக்கி அறுக்க வேண்டும். பின்னால் அதிக விசை கொடுத்து இழுக்க வேண்டாம். அறுக்கும் போது கட்டிங் காம்பொவுண்ட் (cutting compound) பயன்படுத்த வேண்டும். முழு நீளத்திற்கு அறுக்க வேண்டும். கடைசி முடிவு பகுதியில் ஹாக்சா பண்ணும் போது இடது பக்கத்தில் இருந்து அறுக்க வேண்டும். இந்த முறையில் அறுப்பதற்கு பைலின் கிரேடு பற்களைக் கொண்ட ஹாக்சா பிளேடு பயன்படுத்த வேண்டும். குறைந்தது இரண்டு அல்லது மூன்று பற்கள்படும்படி அறுக்க வேண்டும். (Fig 2)

Fig 2




3 வைசை ஹாண்டிலை தளர்திய பிறகு பொருளை வெளியே எடுத்து பிசிருகளை நீக்க வேண்டும். (Fig 3)

Fig 3




— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஸ்ட்ரைட் ஸ்னிப் மூலம் உலோகத்தகட்டை நேர் கோட்டின் வழியே வெட்டுதல் (Cutting sheet by straight snip)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- உலோகத் தகட்டின் மீது நேர் கோட்டை வரைதல்
- ஸ்ட்ரைட் ஸ்னிப் மூலம் உலோகத் தகட்டை நேர் கோட்டின் வழியே வெட்டுதல்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- பென்ச் வைஸ் (Bench vice) 150 mm - 1 No.
- ஆன்வில் 200x 100 kg - 1 No.
- மர சுத்தியல் (Wooden mallet) 500gm - 1 No.
- ஸ்ட்ரைட் ஸ்னிப் (Straight snip) 200mm - 1 No.
- ஸ்கிரைபர் (Scriber) 150mm - 1 No.
- டிரை ஸ்குயர் (Try square) 150mm - 1 No.
- ஸிங்கிள் கட் ஸ்மூத் பைல் 150 mm - 1 No.

**பொருட்கள் (Materials)**

- GI தகடு 65 x 120 mm x 22 SWG - 1 துண்டு.

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **உலோகத் தகட்டின் மீது நேர் கோட்டை வரைதல்**

1 அடிப்படை 'XX' விளிம்பிலிருந்து நமக்கு வேண்டிய தூரத்தில் அளவிட்டு ஒரு ஸ்டீல் அளவுகோலையும் வரையூசியையும் பயன்படுத்தி 2 'V' குறிகளிடவும்.

X' அடிப்படைக் கோடு 'YY' அடிப்படைக் கோட்டுக்கு 0° -யில் இருக்கும். (Fig 1)

Fig 1




2 ஒரு நேர் விளிம்பு சட்டத்தை (Straight edge) இரு 'V' குறிகளுக்குமிடையே அமைத்து விரல்களால் அழுத்திப் பிடிக்கவும். (Fig 2)

**ஸ்கிரைபரின் சாய்வுதல் உங்களுக்கு எதிர்புறம் இருக்கிறது எனில், இது தகடுவிற்கு சேதம் ஏற்படுத்தும் பிறகு உலோகத்தின் உச்ச/மேலடுக்குவை நீக்குவதாகும்.**

**உலோகத்தின் நீக்குதலை தவிற்பதற்கு ஸ்கிரைபரை பயன்படுத்தி கோடுகள் வரைதலின் போது அதிகபடியான அழுத்தம் தரக் கூடாது. (படம் 3)**

Fig 2




Fig 3




கோடு 'AB', 'XX' அடித்தளத்திற்கு கோடு பக்க இணை கோடுவாகிறது. (படம் 4)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 4



— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **ஸ்ட்ரைட்ஸ்நிப்ஸ் கொண்டு தகடுகளை வெட்டுதல்**

ஒரு கையில் தகடுவை பிடித்து மற்றும் மற்றொரு கையை கொண்டு வெட்டும் முனையில் ஸ்நிப்ஸ் கைப்பிடியை பிடித்து பிறகு சிறிய திறப்பு கோணத்தை வைத்து கோடுவின் மேல் ஸ்நிப்ஸ் உச்ச தகடுவை அமைக்கவும். (Fig 1)

Fig 1




ஸ்நிப்ஸ் பிடியில் அதாவது தகடுகள் இரண்டும் ஒன்றுக்கொன்று தகடுகளினிடையே ஏதாவது இடைவெளியில்லாது ஈடுபடச் செய்கிறது.

இரு வெட்டுமுனைகளுக்குமிடையில் உள்ள இடைவேளை 20° க்கும் கீழே பராமரிக்க வேண்டும். (Fig 2)

Fig 2




**வெட்டுமுனைகளுக்கான இடைவெளி (blade gap) 20°-க்கும் மேல் இருப்பின் சரியாகப்பிடித்தம் செய்ய முடியாது. (Fig 3)**

வெட்டும் விளிம்புகள் உலோகத் தகட்டின் தளத்துக்கு செங்குத்தாக அமைந்திருக்க வேண்டும். ஸ்நிப்ஸ்யை நராகக் (Straight) கையாள வேண்டும். (Fig 4)

Fig 3




Fig 4




**எச்சரிக்கை (Caution)**

ஒரே வெட்டில் ஸ்நிப்ஸ்ன் முழு நீளத்தையும் உபயோகப்படுத்தக் கூடாது.

முழு நீளத்தையும் ஒரே வீச்சில் பயன்படுத்தினால் வெட்டும் கோடு அல்லது தளம் நேராக அமையாது. (Fig 5)

Fig 5



© NIMI NOT TO BE REPUBLISHED

கூடிய வரையில் இடப்பக்கத்தில் குறைந்த அளவு தகட்டுப்பகுதி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். (Fig 6)

Fig 6




**தகடு ஸ்நிப்ஸின் கைப்பிடிகளுக்கு இடையே நிறுத்தங்கள் (stops) ஏதும் இல்லாதிருப்பின் கையின் பாகம் இரண்டு கைப்பிடிகளுக்குமிடையில் மாட்டிக் கொள்ளாதவாறு கவனித்துக் கொள்ளவும். (Fig 7)**

Fig 7




© NIMI NOT TO BE REPUBLISHED

# பென்ட் ஸ்நிப்ஸை பயன்படுத்தி எஃகுத் தகட்டை வெட்டுதல் (Cutting sheet by bent snip)

நோக்கம்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **விங் காம்பஸ்ஸை (wing compass) பயன்படுத்தி வளைவுக் கோடுகளை தகட்டின் மீது வரைதல் பென்ட் ஸ்நிப்ஸ் மற்றும் ஸ்ட்ரைட் ஸ்னிப் (straight snip) பயன்படுத்தி வளைவுகளின் படி வெளி வளைவு கோட்டின் வழியாக உலோகத் தகட்டை வெட்டுதல்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- பென்ச் வைஸ் (Bench vice) 150 mm - 1 No.
- 200 mm x 100kg ஆன்வில் (Anvilwith stand) - 1 No.
- மர சுத்தியல் (Wooden mallet) 500gm - 1 No.
- கருவிடு நோஸ் ஸ்னிப் (curred nose snip) 200mm - 1 No.
- ஸ்கிரைபர் (Scriber) 150mm - 1 No.
- டிரை ஸ்குயர் (Try square) 150mm - 1 No.
- ஸிங்கிள் கட் ஸ்மூத் பைல் 150 mm - 1 No.
- விங் காம்பஸ் (150 mm) - 1 No.

**பொருட்கள் (Materials)**

- GI தகடு 65 x 120 mm x 22 SWQ - 1 துண்டு.

செய்ய வேண்டிய வேலை 1: **விங் காம்பஸ்ஸை (wing compass) பயன்படுத்தி வளைவுக் கோடுகளை தகட்டின் மீது வரைதல்**

1 உட்டன் மேலெட் (wooden mallet) மற்றும் டின் மேன்ஸ் ஆன்வில் ஸ்டேக் பயன்படுத்தி உலோகத் தகட்டைத் தட்டையாக்கவும்.

2 ஸ்டில் ரூல் பயன்படுத்தி தகட்டின் அளவை சோதிக்கவும்.

3 ஸ்டீல் ரூல், ஸ்ட்ரைட் எட்ஜ் மற்றும் டிரை ஸ்கொயர் பயன்படுத்தி 100x100 அளவுள்ள சதுரத்தைக் குறிக்கவும்.

4 (Fig 1)-ல் காட்டியுள்ளது போல் மையக் கோட்டினை வலையவும்.

Fig 1




5 புள்ளி 'A' யை டாட் பஞ்ச் மற்றும் பால்பீன் ஹேமர் பயன்படுத்தி குறிக்கவும்.

6 'A' யை மையப் புள்ளியாகக் கொண்டு, விங் காம்பசைப் பயன்படுத்தி வேலை வரைபடத்தின்படி வளைவுக் கோட்டினைக் குறிக்கவும்.

7 ஸ்டீல் ரூல் பயன்படுத்தி குறிக்கப்பட்ட வளைவுக் கோட்டினை சோதிக்கவும்.

8 1 முதல் 4 வரை வரையப்பட்டுள்ள வளைவுக்கோடுகளின் வெளிப்புறமாக ஸ்ட்ரைட் ஸ்னிப் பயன்படுத்தி வெட்டவும். (Fig 2)

9 பெண்ட் ஸ்னிப் பயன்படுத்தி 5 முதல் 9 வரையில் உள்ள வளைவுக் கோடுகளின் வழியாக உட்புறமாக வெட்டவும். (Fig 2)

Fig 2



10 வெட்டப்பட்ட துண்டுகளின் அளவுகளை சோதிக்கவும். மேலும் ஸ்டீல் ரூல், உடன் மேலெட் மற்றும் ஆன்வில் ஸ்டேக் பயன்படுத்தி பரப்பின் தட்டைத் தன்மையை சோதிக்கவும்.

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **ஸ்ட்ரைட் ஸ்னிப் (straight snip) பெண்ட் ஸ்னிப் (bent snip) பயன்படுத்தி வளைவுகளின் படி உள் மற்றும் வெளி வளைவு கோட்டின் வழியாக உலோகத்தகட்டை வெட்டுதல்**

**வளைவு நறுக்கியைப் பயன்படுத்தி எஃகுத் தகட்டில் உள் மற்றும் வெளி வளைவுகளை வெட்டுதல்.**

1 பெண்ட் ஸ்னிப்ஸை பயன்படுத்தி உள் மற்றும் வெளி வளைவுகளை வெட்டலாம்.

2 துளைகளை வெட்டுவதற்கு பெண்ட் ஸ்நிப்ஸ் பயன்படுத்தப்படுகிறது. முதலில் ஒரு தோராய வெட்டு செய்யப்படுகிறது. பிறகு துளை சரியாக வெட்டி முடிக்கப்படுகிறது. (Fig 1)

Fig 1




3 வட்டமாக வெட்டுவதற்கு, வெட்டினைத் தொடர்ந்து செய்துக் கொண்டே தகட்டினை சுழற்ற வேண்டும்.

4 முதலில் தோராய வெட்டு செய்துக் கொள்ளப்படலாம். (Fig 2)

Fig 2




5 உருளையை சீர்வெட்டு (trimming) செய்யும் பொழுது, கீழ் கத்தியை வெட்டின் வெளிப்புறத்தில் வைத்துக் கொள்ளலாம். (Fig 3)

Fig 3




— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# உலோகத் தகட்டை வளைத்தல், மடித்தல் மற்றும் இணைத்தல் (Bend, fold and join sheet in different process)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **வரைவுகளின் படி உலோக தகட்டை வளைத்தல் மற்றும் மடித்தல்**
- **ஸ்னிப்பை பயன்படுத்தி உருவாக்குதல் சிறுவெட்டுகள்**
- **லாக்ட் குரூவ்ட் இணைப்பு உருவாக்குதல்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- பென்ச் வைஸ் (150 mm) - 1 No.
- மர சுத்தியல் (500 gm) - 1 No.
- ஸ்ட்ரைட் ஸ்னிப் (200 mm) - 1 No.
- ஸ்கிரைபர் (150 mm) - 1 No.
- டிரை ஸ்குயர் (150 mm) - 1 No.
- 200mm x 100kg ஆன்வில் - 1 No.
- ஸிங்கிள் கட் ஸ்மூத் பைல் (150 mm) - 1 No.
- விங் காம்பஸ் (150 mm) - 1 No.

**பொருட்கள் (Materials)**

- GI தகடு - தேவையான அளவு

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **வரைவுகளின் படி உலோக தகட்டை வளைத்தல் மற்றும் மடித்தல்**

1 ஒரு எஃகு அளவு கோலைப் பயன்படுத்தி மூலத் தகட்டின் அளவு சரியாக இருக்கின்றதா என அளந்து பார்க்கவும்.

2 சமதளத் தட்டையின் மீது தகட்டை வைத்து தகட்டை ஒரு மென் சுத்தியல் கொண்டு சமமாக்கவும்.

3 தகட்டின் (tray) விரிவாக்கத்தை இணை கோட்டு வழிமுறையின் படி விரிவாக்கவும்.

4 நேரான தகடு நறுக்கியைக் கொண்டு கோடிட்டபடி தகட்டை வெட்டவும்.

5 நேரான தகடு நறுக்கி கொண்டு கோடுகள் வழியே வெட்டவும்.

6 மூலைகளை நேர்நறுக்கி கொண்டு வெட்டவும்.

7 தகட்டின் 4 பக்கங்களிலும் ஒற்றை மடிப்பிடவும்.

8 உலோகத்தகடு பணியாளரின் பட்டடைக்கல்லை (tin man's anvil) பயன்படுத்தி 4 பக்கங்களையும் 90° -க்கு வளைக்கவும்.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 2: **லாக்ட் குரூவ்ட் இணைப்பு உருவாக்குதல். (Fig 1)**

Fig 1




**சிறுவெட்டுகளின் வடிவங்கள் - நேர் சிறுவெட்டு (Fig 1)**

ஒரு வேலையை அமைப்பு செய்யும் பொழுது, மடிப்பு கொண்ட விளிம்புகளை மடக்க சில சமயம் சில முன்னேற்பாடுகளை செய்துக் கொள்ள நேருகறது. உலோகம் ஒன்றின் மீது ஒன்று அமர நேரும்.

அம்மாதிரியான இடங்களில் பெருக்கம் ஏற்படுவதைத் தடுக்க, உலோகத்தை செதுக்க வேண்டும் அல்லது சிறிய திறப்புகளை செய்ய வேண்டும்.

சில பொருந்து சீமஸ் அல்லது ஓரங்களில் ஏற்படுத்தப்படும் திறப்புகள், சிறுவெட்டுகள் எனப்படும்.

சிறுவெட்டுகளின் வடிவம் - Fig 1

சதுர சிறுவெட்டு - Fig 2

வீ சிறுவெட்டு - Fig 3

Fig 1




LAYING OUT STRAIGHT NOTCHES

Fig 2




LAYING OUT SQUARE NOTCHES

Fig 3




LAYING OUT 'V' NOTCH FOR 90° BEND.
LAYING OUT 'V' NOTCH FOR OTHER THAN 90° BEND.

© NIMI NOT TO BE REPUBLISHED

# உலோகத் தகடு வேலைகளில் ரிவிட் செட் கொண்டு ரிவிட்டிங் செய்தல் (Joining sheet metal by using rivet set and snap)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
• உலோகத் தகடு வேலைகளில் ரிவிட் செட் கொண்டு ரிவிட்டிங் செய்தல்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஸ்டீல் ரூல் 300 மி.மீ - 1 No.
- வரை ஊசி 150 மி.மீ - 1 No.
- நேரானதாக இருக்கும் டிரொசர்கள் அணிந்து பாதுகாப்பு காலணி அணிய வேண்டும்.
- உயரமான இடங்களில் தலைக்கு மேல் செய்யும் வேலைகளுக்கு தீப்பாதுகாப்பு தலைகவசம் மற்றும் தோள் கவசம் அணிய வேண்டும்.
- ஆடைகளில் கிரீஸ் அல்லது ஆயில் எதுவும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளவும்.
- பாதுகாப்பு அணிகள் மற்றும் சாதனங்கள் ஒவ்வொரு பயன்பாட்டிற்கு முன்னும் நல்ல நிலையில் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **சிலிண்டர் மற்றும் ரெகுலேட்டரை இயக்கி டார்ச்சை பற்ற வைத்தல்**

1 சிலிண்ட் வால்வுகளை இயக்கும் பொழுது பக்கவாட்டிலிருந்து இயக்க வேண்டும். (ரெகுலேட்டரிலிருந்து தூரமாக).

2 திடீரென அதிக அழுத்தினால் ரெகுலேட்டர்கள் வெடிப்பதை தவிர்க்க சிலிண்டர் வால்வுகளை மிக மெதுவாக திறக்க வேண்டும்.

3 அசிட்டலின் சிலிண்டர் வால்வை 1/4 - 3/4 சுற்றுகள் மட்டுமே திறக்க வேண்டும். திறந்த பிறகு ரின்சை (Wrench) அங்கேயே வைக்க வேண்டும். ஏன்னெில் அவசர நிலையில் சிலிண்டர் வால்வை மூடுவதற்கு ஏதுவாகும்.

4 முதலில் அசிட்டலின் சிலிண்டரை திறந்து பற்ற வைக்க வேண்டும். பின்பு ஆக்சிஜன் சிலிண்டரை திறந்து பிழம்பை அட்ஜஸ்ட் செய்ய வேண்டும்.

5 டார்ச்சை நிறுத்தும் பொழுது முதலில் அசிட்டலின் நாப்பை மூட வேண்டும். பிறகு ஆக்ஸிஜன் நாப்பை மூடவேண்டும்

6 பணி முடிந்தவுடன், சிலிண்டர் வால்வுகளை மூடிவிட்டு, ரெகுலேட்டரில் உள்ள பிரஸ்ஸர் அட்ஜஸ்டிங் ஸ்குரு (or) நாப் (bleeding) செய்ய வேண்டும். ஹோசுகளை சரியாக சுற்றி வைத்து சாதனத்தை மாட்டி வைக்க வேண்டும்.

7 வெல்டிங் பணி செய்யும் இடத்தில் எளிதில் எடுக்கும் வண்ணம் ஒரு தீ அணைப்பானை வைக்க வேண்டும்.

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 5: **கேஸ் வெல்டிங் தொகுப்பின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு**

**1 சரியான காற்றோட்டம் (Proper ventilation)**

குறுகிய இடங்களிலும் காற்று தடை ஏற்படும் இடங்களிலும் வெல்டிங் வேலை செய்யும் முன் காற்றோட்ட வசதிகள் செய்து கொள்ள வேண்டும். நேச்சுரல் டிராப்ட் ஃபேன்கள் பயன்படுத்துவதாலும், தலையை பாதுகாப்பான நிலையில் வைப்பதாலும் முகத்தில் தீப்பொறி/பிழம்பு பரவுவதை தவிர்க்க முடியும்.

**2 சரியான கட்டமைப்பு (Proper infrastructure)**

- வெல்டிங் செய்யும் இடம் ஒவ்வொரு வெல்டருக்கும் குறைந்த பட்சம் 1000 cubic feet இருக்க வேண்டும்.
- கூரையின் உயரம் 16 அடிக்கும் குறைவாக இருக்கக் கூடாது.
- காற்றோட்டம் கட்டுமான பகிர்வினாலே, சாதனங்களாலோ கட்டுமான தடைகளாலோ பாதிக்காமலும் தடைபடாமலும் இருக்க வேண்டும்.
- வெல்டிங் குறுகிய இடத்தில் செய்யக்கூடாது.

**3 பாதுகாப்பு அக்கரை (Safety concern)**

- சரியான சுய பாதுகாப்பு சாதனங்கள் (PPE) மிக முக்கியமானதாகும்.
- அசிட்டலின் மிகவும் எளிதில் தீப்பற்றக் கூடியது.
- வெல்டிங் செய்வதற்கு முன் அனைத்து சாதனங்களையும் ஆய்வு செய்ய வேண்டும்.
- காற்றோட்டம் போதுமானதாக இல்லாத பட்சத்தில், செயற்கை காற்றோட்ட வசதிகள் செய்து கொள்ளப்பட வேண்டும்.

— — — — — — — —



© NIMI NOT TO BE REPUBLISHED

- அவசரகாலத் தேவைக்காக தீயணைப்பான் மற்றும் தீயணைப்பு சாதனங்களை எப்பொழுது தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.
- மறை சிலிண்டர் / ரெகுலேட்டர் பகுதிகளில் எண்ணெய் அல்லது உயவு எண்ணெய் (lubrication) இருக்க கூடாது.

Fig 6




— — — — — — — —

© NIMI
NOT TO BE REPUBLISHED

# Air - LPG, $O_2$- LPG மற்றும் $O_2$- $C_2H_2$ ஆகியவற்றை கேன் டைப் நகரும் லேம் செட்டைக் கொண்டு அமைத்தல் (Setting up Air - LPG, $O_2$ - LPG and $O_2$ - $C_2H_2$ using portable flame set)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- AIR - LPG பிரேசிங் தொகுப்பை அமைத்தல் (ஒற்றை டார்ச்சு) கசிவுகளை கண்டறிந்தல்
- OXY - LPG வெல்டிங் தொகுப்பை அமைத்தல் டார்ச்சை பற்றவைத்து தீப்பிளம்பை அட்ஸ்ர்ட் செய்தல்
- ஆக்ஸி அசிட்டலின் (oxy- acetylene) வெல்டிங் பிளாண்டை அமைத்தல்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஆக்சிஜன் கேஸ் ரெகுலேட்டர் - 1 No.
- டிஸ்போஸ்புல் கஸ்டெய்னர் டார்ச்- 1 No.
- பியுட்டேன் வாயு டின் - 1 No.
- ஆக்ஸிஜன் சிலிண்டர் - 1 No.
- வணிக LPG சிலிண்டர் - 1 No.
- LPG ரெகுலேட்டர் - 1 No.
- டார்ச் மற்றும் நாசில்ஸ் - 1 தொகுதி
- பேக் ஃபையர் அரஸ்டர் - 2 Nos.
- அசிட்டலின் கேஸ் ரெகுலேட்டர் - 1 No.
- சிலிண்டர் கீ - 1 No.

**சாதனங்கள்/இயந்திரங்கள் (Equipment/ Machines)**

- சிலிண்டர் ட்ராளி - 1 No.
- ஆக்சி அசிட்டலின் வெல்டிங்/ பிரேசிங் தொகுப்பு - 1 No.

**பொருட்கள் (Materials)**

- பாதுகாப்பு கையுறை - 1 No.
- சிங்கிள் புளோபைப் - 1 No.
- கண் பாதுகாப்பு கண்ணாடி - 1 No.
- ஸ்பார்க் லைட்டர் - 1 No.
- பாதுகாப்பு ஆடை - 1 தொகுப்பு

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

**செய்ய வேண்டிய வேலை 1: Air - LPG பிரேசிங் தொகுப்பை (சிங்கிள் புளோ பைப்) அமைத்தல்**

1 பியுட்டேன் டின்னை எடுத்து அதன் முத்திரையிடப்பட்ட மூடியை திறக்கவும். (Fig 1)

2 பியுட்டேன் டின்னை செங்குத்தாக வால்வு மேல் பக்கம் இருக்குமாறு பிடிக்கவும். (Fig 2)

3 டின் வால்வின் மேற்பகுதியில் டார்ச்சை பொருத்தவும்.

4 டார்ச்சானது பியுட்டேன் டின்னின் காடி பள்ளங்களில் சரியாக பொருந்துமாறு அமைக்க வேண்டும்.

Fig 1



Fig 2



5 டார்ச்சில் மெதுவான அழுத்தம் கொடுத்து கிளாக்வைஸ் (Clockwise) திசையில் சுற்றவும்.

6 டார்ச் திடமாக பொருந்தியுள்ளதா என்பதை பார்த்து கசிவுகள் உள்ளனவா என பார்க்கவும்.

7 கசிவுகளை சோப்புத்தண்ணீர் பயன்படுத்தி சோதிக்கவும்.

8 வால்வை திறந்து தீப்பிழம்பை பற்ற வைக்கவும்.

9 எரிபொருளின் அளவு வால்வை அட்ஜஸ்ட் செய்து நியூட்ரல் பிலேமிற்கு கொண்டு வரவும். (Fig 3)

10 வேலை முடிந்த பின்பு வால்வை மூடி பிழம்பை அணைக்கவும்.

Fig 3



**குறிப்பு: பியுட்டேன் டின்னை 50°C ற்கும் மேலான வெப்பநிலையில் வைக்க கூடாது.**

**வேலை செய்யும் இடத்திலிருந்து எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்களை அப்புறப்படுத்தவும்.**

**சரியான காற்றோட்டம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.**

**பியுட்டேன் டின்னை பிரேசிங் செய்யும் பொழுது, கிடைமட்டத்திற்கு சாய்காமல் பார்த்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் திரவம் வெளியேறிபிளேம் அனைந்து விடும்.**

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **Oxy - LPG கேஸ் வெல்டிங்கை அமைத்தல்**

1 ஆக்ஸிஜன் சிலிண்டர் வால்வில் ஒரு முறை திறந்து மூட வேண்டும்.

2 ஆக்சிஜன் மற்றும் LPG சிலிண்டர்களில் ரெகுலேட்டர்களை பொருத்தவும். (Fig 4)

Fig 4



3 ரெகுலேட்டர்களுடன் ரப்பர் ஹோசை இணைக்கவும்.

- கறுப்பு நிறம் ஆக்சிஜன் சிலிண்டருக்கும்.
- சிகப்பு/மரூண் நிறம் LPG சிலிண்டருக்கும் பொருத்த வேண்டும். (Fig 5)

4 ஹோசை பைப்புடன் இணைப்பதற்கு முன்பு பேக் ஃபையர் அரஸ்டர்/நான் ரிட்டர்ண் வால்வு பொருத்தவும். (Fig 6)

5 ஹோசின் மற்றொரு முனையை ஃப்ளோ பைப்புடன் இணைக்கவும்.

6 ஹோஸ் கிளாம்பை பயன்படுத்தி ரப்பர் ஹோசை இறுக்கவும்.

7 சிலிண்டர் வால்வை திறந்து ரெகுலேட்டரின் அழுத்தத்தை சரி செய்யவும். (Fig 7)

8 சோப்பு தண்ணீரை பயன்படுத்தி அனைத்து இணைப்புகளில் கசிவு சோதனை மேற்கொள்ளவும்.

9 இரண்டு சிலிண்டர்களின் வால்வுகளை மெதுவாக திறக்கவும். (Fig 8)

10 தீப்பிழம்பை பற்றவைத்து தேவையான ஃப்ளேமிற்கு சரி செய்யவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5



Fig 7




Fig 6



Fig 8



---

செய்ய வேண்டிய வேலை 3: **ஆக்ஸி அசிட்டலின் (oxy- acetylene) வெல்டிங் பிளாண்டை அமைத்தல்**

1 பாதுகாப்பு அணிகளை அணியவும்.

2 ஒரு தள்ளுவண்டியில் கேஸ் சிலிண்டர்களை வைத்து அவைகளை சரியான நிலையில் சங்கிலியால் கட்டவும்.

3 ரெகுலேட்டர்களை பொருத்தும் முன்பு சிலிண்டர் வால்வை திறந்து மூட வேண்டும்.

4 சிலிண்டர்களில் ரெகுலேட்டர்களை பொருத்தவும். அழுத்தத்தை அட்ஜஸ் செய்யும் நாப் விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

5 கேஸ் ரெகுலேட்டர்களில் ரப்பர் பிளக்ஸிபுல் ஹோஸ் பொருத்தவும். கருப்பு வண்ண ஹோஸ் ஆக்சிஜனுக்கும், காவி வண்ண (Maroon) ஹோஸ் அசிட்டிலின் ரெகுலேட்டர் மற்றும் டார்ச் இடையே பொருத்தவும்.

6 ஊது குழாயை ரப்பர் நெளிகுழாய்களுடன் இணைக்கவும்.

7 அசிட்டிலின் இணைப்புகள் இடப்பக்க மரைகளையும், ஆக்சிஜன் இணைப்புகள் வலப்பக்க மரைகளையும் கொண்டிருக்கும்.

8 சிலிண்டரை திறந்து, ரெகுலேட்டர்களில் உள்ள அழுத்தத்தை அட்ஜஸ் செய்யவும்.

Fig 9




9 எல்லா இணைப்புகளிலும், கசிவு குறித்து சோதிக்கவும். (சோப்புத் தண்ணீர் பயன்படுத்தவும்)

---

© NIMI NOT TO BE REPUBLISHED

## திறன் வரிசை

## கேஸ் ரெகுலேட்டர்களை இணைத்தல் (Attaching gas regulators)

நோக்கங்கள்: இது உங்களுக்கு உதவுவது
• கேஸ் சிலிண்டர்களை சங்கிலியல் கட்டுதல் மற்றும் வால்வு திறந்து மூடுதல்
• சிலிண்டர் வால்வுகளின் வால்வுகளின் கேஸ் ரெகுலேட்டர்களை இணைத்தல்.

**கேஸ் ரெகுலேட்டர்களை சங்கிலியால் கட்டுதல் (Chaining gas cylinders):** கேஸ் சிலிண்டர்களை பாதுகாப்பாகக் கையாள்வதற்காக அவைகளை நேரான நிலையில் வைத்திருப்பதற்காக சங்கிலி கொண்டு, அவைகள் சிலிண்டர் தள்ளுவண்டி (அ) சுவர் (அ) சிலிண்டர் தாங்கி ஆகியவைகளுடன் கட்டப்பட வேண்டும். (Fig 1)

Fig 1




CHAINING GAS CYLINDERS

**கேஸ் சிலிண்டர் வால்வு திறந்து முடுதல் (Cracking the gas cylinder valves):** கேஸ் ரெகுலேட்டர்களின் பாதுகாப்பிற்காக கேஸ் சிலிண்டர் வால்வு மறைகள் (Valve sockets)சுத்தப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றன. இதற்காக சிலிண்டர் வால்வு திறக்கப்பட்டு உடனே மூடப்படுகிறது. (Fig 2)

Fig 2




**கேஸ் ரெகுலெட்டர்களை சிலிண்டர் வால்வுடன் பொருத்துதல் (Attaching of gas regulators with cylinder valves)**

அசிட்டிலின் ரெகுலேட்டர்களை அசிட்டிலின் சிலிண்டருடன் ஆக்சிஜன் ரெகுலேட்டர்களை ஆக்சிஜன் சிலிண்டருடன் பொருத்த வேண்டும். (Fig 3)

Fig 3




ATTACHING REGULATOR

எல்லா மரை இணைப்புகளையும் முதலில் கையால் இறுக்கி, பிறகு அட்ஜஸ்யுக் கொண்டு டைட் செய்ய வேண்டும்.

> **அசிட்டிலின் இணைப்புகள் இடப்பக்க மரையையும், ஆக்சிஜன் இணைப்புகள் வலப்பக்க மரையையும் கொண்டிருக்கும்.**

> **சரியான அளவுள்ள ஸ்பேனர்களை பயன்படுத்தவும்.**
>
> **மரைகள் மீது எந்தவிதமான ஆயில்களையும் இட வேண்டாம்.**
>
> **சிலிண்டர் வால்வுகளைத் திறக்கும் முன்பு இரண்டு ரெகுலேட்டர்களின் பிரஸ்ஸர் அட்ஜஸ்டிங் நாப் (or) ஸ்குரு விடுவிக்கப்பட வேண்டும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

## புளோ டார்ச்சை இணைத்தல் (Attaching blow pipe)

**நோக்கம்:** இது உங்களுக்கு உதவுவது

- **ஆக்சி - அசிட்டிலின் சாதனத்தில் புளோ டார்ச்யை ரெகுலேட்டர்களுடன் இணைத்தல்.**

***ரப்பர் பிளக்ஸிபுள் ஹோசை இணைத்தல்:* (Attaching rubber hose)** அசிட்டிலின் பிளக்ஸிபுள் ஹோஸ் இணைப்புகள் இடப்பக்க மரையைக் கொண்டுள்ளன. (Fig 1)

Fig 1




ஆக்சிஜன் பிளக்ஸிபுள் ஹோஸ் இணைப்புகள் வலப்பக்க மரையைக் கொண்டுள்ளன.

அசிட்டிலின் பிளக்ஸிபுள் ஹோஸ் காவிநிறம் (maroon) கொண்டிருக்கும். ஆக்சிஜன் பிளக்ஸிபுள் ஹோஸ் கருப்பு நிறம் கொண்டிருக்கும். வாயுக்களை எளிதாக அடையாளங் காண நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அசிட்டிலின் பிளக்ஸிபுள் ஹோஸ் ஒரு முனையை அசிட்டிலின் ரெகுலேட்டரின் வெளி வழியிலும், அதே போன்று ஆக்சிஜன் பிளக்ஸிபுள் ஹோஸ் ஆக்சிஜன் ரெகுலெட்டரின் வெளி வழியிலும் (outlet) இணைக்கவும். (Fig 1)

பிளக்ஸிபுள் ஹோஸ்களை இணைக்கும் முன்பு, முதலில் பிளக்ஸிபுள் ஹோஸ்கள் மரைகளுடன் கை இறுக்கமாக செய்து இறுதியாக சரியான அளவுள்ள ஸ்பேனர்கள் கொண்டு டைட் செய்து இணைக்கவும்.

தேவையற்றவாறு அதிக விசையைக் கொடுக்கக் கூடாது.

> **இணைப்புகள் உலர்நிலையில் இறுக்கமாக இருக்க வேண்டும்.**

நான் ரிட்டன் வால்வுடன் உள்ள பிளக்ஸிபுஸ் ஹோஸ் இணைப்பு, புளோ டார்ச்சுடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

பிளக்ஸிபுள் ஹோஸ்ஸயையும், ஹோஸ் இணைப்புகளையும் டைட்டாக பிடிப்பதற்காக கம்பிகளைப் பயன்படுத்தக் கூடாது.

எப்பொழுதும் சரியான அளவுள்ள ஹோஸ் கிளாம்பை (hose clip) பயன்படுத்தவும்.

**புளோடார்ச் இணைத்தல்: (Attaching blow pipe)** புளோ டார்ட்களில், வெவ்வேறு மரைகள் கொண்ட உள்வழி இணைப்புகள் உள்ளன.

அசிட்டிலின் இடப்பக்க மரை இணைப்பையும், ஆக்சிஜன் வலப்பக்க மரை இணைப்பையும் கொண்டிருக்கும்.

நான் ரிட்டன் வால்வுடன் இணைக்கப்பட்டுள்ள ரப்பர் பிளகஸிபுள் ஹோஸ் மறுமுனையை, A எனக் குறிக்கப்பட்டுள்ள புளோடார்ச் உள் வழியுடன் இணைக்கவும். (Fig 2)

Fig 2




ATTACHING BLOW PIPES TO RUBBER HOSES

© NIMI NOT TO BE REPUBLISHED

ஆக்சிஜன் ரப்பர் பிளக்ஸிபுள் ஹோஸ் O எனக் குறிக்கப்பட்டுள்ள புளோ டார்ச் இணைப்புடன் இணைக்கவும்.

சாதனத்தின் முழு அமைப்பையும் காணவும். (Fig 3)

ஆக்சிஜன் ரப்பர் பிளக்ஸிபுள் ஹோஸ் புளோ டார்ச்சுடன் இணைக்கவும்.

Fig 3




## கேஸ் பிரஸ்ஸரை அட்ஜஸ்டிங் செய்தல் (Adjusting gas pressure)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது

- ***நாசில்களின் அளவுக்கு ஏற்ப கேஸ் பிரஸ்1ரை அட்ஜஸ்டிங் செய்தல்***
- ***இணைப்பில் கசிவு உள்ளதா என சோதித்தல்.***

நாசில்களின் அளவிற்குத் தகுந்தவாறு, ஆக்சிஜன் மற்றும் அசிட்டிலின் ஆகிய இரு வாயுக்களின் பிரஸ்ஸர் அட்ஜஸ்டிங் செய்யப்பட வேண்டும்.

பணிப்பொருளின் உலோகம் மற்றும் அதன் கனம் ஆகியவைகளுக்கு ஏற்ப நாசில்கள் அளவு தேர்ந்தெடுக்கப்படுகிறது. (மென் எஃகிற்கான அட்டவணை 1 ஐப் பார்க்கவும்). (Fig 1)

இரண்டு சிலிண்டர்களின் வால்வுகளையும் ஒரு சுற்று திறந்து மெதுவாகத் திறக்கவும். இரண்டு ரெகுலேட்டர்களிலும், சிறிய அளவு நாசிலுக்காக 0.2 கிகி./செ.மீ$^2$ அழுத்தத்தை அமைக்கவும். இவ்வாறு அமைக்க, அழுத்தம் அட்ஜஸ்டிங் நாப்பை டைட் செய்யவும்.

ரெகுலேட்டர்களில் உள்ள வேலை செய்யும் பிரஸ்ஸர் கேஜின் (Working pressure gauge) அழுத்த அமைவை வாசித்தறியவும். (Fig 1)

வாயு சிலிண்டர்களில் வால்வுகளைத் திறக்கும் பொழுது, ரெகுலேட்டர்களின் பக்கவாட்டில் நிற்கவும். வால்வுகளை திடீரெனத் திறக்கக் கூடாது.

Fig 1




**அட்டவணை 1 (Table 1)**

**Nozzle sizes for welding mild steel**

| Plate thickness (mm) | 0.8 | 1.2 | 1.6 | 2.4 | 3.2 | 4.0 | 5.0 | 6.5 | 10.0 | 13.0 | 16.2 | 19.0 | 25.0 | over 25 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Nozzle size | 1 | 2 | 3 | 5 | 7 | 10 | 13 | 18 | 25 | 35 | 45 | 60 | 70 | 80 |

NOT TO BE REPUBLISHED ©NIMI

**கசிவுகளை சோதித்தல்: (Testing leakages)**

1 எல்லா இணைப்புகளிலும் வாயுக் கசிவு உள்ளதா என சோதிக்கப்பட வேண்டும்.

2 அசிட்டிலின் வாயு இணைப்புகளில் சோப்புத் தண்ணீரைப் பயன்படுத்தவும். ஆக்சிஜன் இணைப்புகளுக்கு சுத்தமான நீரைப் பயன்படுத்தவும். (Fig 2)

3 கசிவு சோதனை செய்யும் போழுது தீக்குச்சி அல்லது தீ விளக்கை எப்பொழுதும் பயன்படுத்தக் கூடாது.

Fig 2




**தீப்பிழம்பை அமைத்தல் (Flame setting)**

1 பாதுகாப்பு அணிகலன்களை அணியவும்.

2 கேஸ் சிலிண்டர்களைத் திறந்து, கேஸ் அழுத்தத்தை ரெகுலேட்டர்களில் அட்ஜஸ் செய்யவும்.

3 புளோ டார்ச் அசிட்டிலின் வாயு கட்டுப்பாட்டு வால்வைத் திறக்கவும்.

4 தீப்பொறி மூட்டியைப் பயன்படுத்தி தீப்பிழம்பை எரிவிக்கவும். வேறு தீ மூலங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

5 அசிட்டிலின் பாய்வை சரிக்கட்டி கரும்புகை வருவதை நிறுத்தவும்.

6 தீப்பிழம்பில் எந்தவித ஓசையும் இன்றி வட்டமான உள்கூம்பு உருவாகும் வரை ஆக்சிஜன் வாயுவைத் திறக்கவும்.

7 ஆக்சிகரணத் தீப்பிழம்பை, ஆக்சிஜன் வாயுவை அதிகரித்து அட்ஜஸ் செய்யவும் (உள்கூம்பு கூர்மையானதாகவும் சற்று சீறும் ஓசை வரும் வரையிலும்)

8 நியுட்ரல் பிளேம் மீண்டும் அமைக்கவும். மென்மையான உள் கூம்பை சுற்றி வெளிப்புற இறகு (outer feather) அமையுமாறும், ஓசை இல்லாமல் இருக்கும்படியும் அசிட்டிலின் வாயுவை அதிகரித்து கார்பரைஸிங் பிளேம் அமைக்கவும்.

Fig 3




9 பேக் பையர் (back fire) (அ) பிளாஷ்பேக் (Flash back) ஏற்படாமல் பிளேம் அமைத்தலை செய்ய முடியும் வரை மீண்டும் மீண்டும் செய்யவும்.

**பிளேமை அணைத்தாலும் வேலையை நிறுத்தலும்.**

10 பிளேமை அணைக்க முதலில் அசிட்டிலின் வாயுவை நிறுத்தவும். பிறகு ஆக்சிஜன் வாயுவை நிறுத்தவும்.

11 புளோ டார்ச் குளிர்விப்பதற்காக நாசில் குழலை தண்ணீருக்குள் மூழ்கச் செய்து சிறிது ஆக்சிஜன் வாயுவைத் திறந்து விடவும்.

12 சிலிண்டரின் வால்வுகளை மூடி, வழிகளில் உள்ள எல்லா பிரஸ்ஸரையும் விடுவிக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஆக்சிஅசிட்டிலின் பிளேமை எரிவித்தல், அமைத்தல், அணைத்தல் மற்றும் சாதனத்தை நிறுத்துதல் (Lighting, setting, extinguishing oxy - acetylene flame and shutting the plant)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது

- கேஸ் வெல்டிங்கை சரிவர செய்ய ஆக்சி - அசிட்டிலின் பிளேமை (தீப்பிழம்பை) பற்ற வைத்தல், அமைத்தல், மற்றும் அணைத்தல்
- வேலையை நிறுத்துவதற்கு ஆக்சி - அசிட்டிலின் சாதனத்தை நிறுத்துதல்.

## பிளேமை (தீப்பிழம்பை) எரிவித்தல் (Flame lighting):

**ஏப்ரான், கையுறைகள் மற்றும் பாதுகாப்புக் கண்ணாடி ஆகியவைகள் அணிந்து கொள்ளப்பட்டனவா என உறுதி செய்துக் கொள்ளவும். (Fig 1)**

Fig 1




சிறிய அளவிலான நாசில்களுக்கு (No.3) ஆக்சி - அசிட்டிலின் அழுத்தத்தை 0.2 கிகி/செமீ$^2$ என்னும் அளவிற்கு அமைக்கவும்.

**அழுத்தத்தை ரெகுலேட்டர்களில் துல்லியமாக அமைப்பதற்கு புளோ டார்ச்சின் கண்ட்ரோல் நாப்பை திறந்த நிலையில் வைக்கவும்.**

புளோ டார்ச்சின் அசிட்டிலின் கட்டுப்பாட்டு வால்வை 1/4 சுற்று திருப்பி தீப்பொறி மூட்டி கொண்டு அதை பற்ற வைக்கவும். அசிட்டிலின் பாய்வை சரிக்கட்டி கரும்புகையை மறையச் செய்யவும். (Fig 2)

புளோ டார்ச்சின் பேக் பையர் மற்றும் விபத்து பிளாஷ்பேக் ஏற்படுவதைத் தவிர்க்கவும்.

Fig 2




தீப்பிழம்பை நோக்கவும். புளோடார்ச் ஆக்சிஜன் கட்டுப்பாட்டு வால்வைத் திறந்து ஆக்சிஜன் வாயுவை சேர்க்கவும். (Fig 3)

Fig 3




## தீப்பிழம்பை சரிக்கட்டுதல் (Flame adjustment):

நியுட்ரல் பிளேம் அட்ஜஸ் செய்ய போதுமான ஆக்சிஜன் வாயுவை சேர்த்து, வெண்ணிறக் கூம்பு தெளிவாகவும், உருளையாகவும் இருக்கும்படி அமைக்கவும். (Fig 4)

Fig 4




**புளோ டார்ச்சில் வாயுக் கலப்பு ஆக்சிஜனும், அசிட்டிலினும் சம பரும அளவில் இருக்கும்.**

ஆக்சி டைஸியிங் பிளேமை அமைக்க அதிக அளவு ஆக்சிஜனை சேர்க்கவும்.

வெண்ணிறக் கூம்பு சிறியதாகவும், கூராகவும் மாறிவிடும்.

பிளேம் சீறும் ஒலியைத் தருவதுடன் தீப்பிழம்பு குறைந்த நீளம் கொண்டதாகவும் இருக்கும். (Fig 5)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5




MORE OXYGEN FOR OXIDISING FLAME

கார்பரைஸிங் பிளேம் அமைக்க தீப்பிழம்பை நியுட்ரலுக்கு கொண்டு வந்து பிறகு அசிட்டிலின் வாயுவை கூடுதலாகச் சேர்க்கவும்.

வெண்ணிறக் கூம்பு நீளமாகவும் சுற்றிலும் இறகு போன்று தீப்பிழம்பு சூழப்பட்டதாகவும் இருக்கும்.

தீப்பிழம்பு சப்தமின்றி எரிவதுடன் நீளமாகவும் இருக்கும். (Fig 6)

**தீப்பிழம்பை அணைத்தல் (Extinguishing the flame)** புளோ டார்ச்சி அசிட்டிலின் வால்வை மூடவும். பிறகு ஆக்சிஜன் வால்வை மூடவும்.

Fig 6




MORE ACETYLENE FOR CARBURISING FLAME

**சாதனத்தை நிறுத்துதல் (Shutting off the plant):**

வேலையை முடித்த பிறகு சாதனத்தை கீழ்க்குறித்த முறைகள்படி நிறுத்தவும்.

அசிட்டிலின் சிலிண்டரின் வால்வை மூடவும்.

புளோடார்ச்சின் அசிட்டிலின் வால்வைத் திறந்து அதில் உள்ள அழுத்தத்தை விடுவிக்கவும்.

அசிட்டிலின் ரெகுலேட்டரின் அட்ஜஸ்டிங் ஸ்குருளை விடுவிக்கவும்.

புளோ டார்ச் அசிட்டிலின் வால்வை மூடவும்.

ஆக்சிஜனை மூடுவதற்கும், மேற்குறிப்பிட்ட நான்கு படிமுறைகளை மீண்டும் செய்யவும்.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# உலோக தகட்டின் மீது ஆக்சி -அசிட்டிலின் வாயுவை பயன்படுத்தி கட்டிங் பிரேசிங், வெல்டிங் செய்தல் (Oxy- Acetylene gas cutting , brazing & welding on thin sheet metal)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **கட்டிங் டார்ச் பயன்படுத்தி தகடுகளை கைமூலம் நேராக வெட்டுதல்**
- **காப்பர் டியூபை பிரேசிங் செய்தல்**
- **காப்பர் தகடை வெல்டிங் செய்தல்.**
- **பேக் ஃபயர் அரச்டரை சோதித்தல்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**
- பாதுகாப்பு உடை - 1 தொகுதி
- ஸ்பார்க் லைட்டர் - 1 No.
- ஆக்சிஜன் கேஸ் ரெகுலேட்டர் - 1 No.
- அசிட்டலின் கேஸ் ரெகுலேட்டர் - 1 No.
- சிலிண்டர் கீ - 1 No.
- பிரேசிங் டார்ச் - 1 No.
- ஆக்சிஜன் ரப்பர் ஹோஸ் - தேவைக்கேற்ப
- அசிட்டலின் ரப்பர் ஹோஸ் - தேவைக்கேற்ப
- கண் கண்ணாடி - 1 No.

**சாதனங்கள் / இயந்திரங்கள் ( Equipment Machines)**
- ஆக்சி - அசிட்டிலின் கேஸ் வெல்டிங் செட் - 1 தொகுதி
- சிலிண்டர் ட்ராளி - 1 No.

**பொருட்கள் (Materials)**
- மென் எஃகுத் தகடு (பணிப்பொருள்) - 1 No.

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **கட்டிங் டார்ச்சை பயன்படுத்தி மெல்லிய தகடுகளை கை மூலம் நேராக வெட்டுதல் (வாயு)**

1 முழு பாதுகாப்பு அணிகலன்களையும் அணியவும்.

2 கட்டிங் டார்ச்கேஸ் வெல்டிங் செட் சாதனத்தை அமைக்கவும்.

3 உலோகத்தின் கனத்துக்கு ஏற்றவாறு சரியான அளவுள்ள கட்டிங் நாசில்களை குழலை பொருத்தவும்.

4 உலோகத்தின் கனத்திற்குத் தகுந்தவாறும், கட்டிங் நாசில்களுக்கு தகுந்தவாறும் அசிட்டிலின் வாயு மற்றும் கட்டிங் ஆக்சிஜன் வாயு ஆகியவைகளின் அழுத்தத்தை அட்ஜஸ் செய்யவும்.

5 வெட்டப்பட வேண்டிய பரப்பினை சுத்தப்படுத்தவும்.

6 நேர்க்கோடாகப் புள்ளிகளை இடவும். (Fig 1)

Fig 1




7 சரியான பிளேமை அட்ஜஸ் செய்து அமைக்கவும்.

8 வெட்டுக் கோட்டிற்கும், தகட்டின் பரப்பிற்கும் 90°ல் இருக்குமாறு கட்டிங் டார்ச்சை பிடிக்கவும். (Fig 2)

Fig 2



STARTING OF CUT

9 தகட்டின் ஒரு முனையில் புள்ளிக் கோட்டின் மீது செஞ்சூடாகும் வரை வெப்பப்படுத்தவும்.

> **கூம்புக் குழலுக்கும், பணிப்பொருளுக்கும் இடையே 5 மி.மீ இடைவெளியை பராமரிக்கவும்.**

10 கட்டிங் ஆக்சிஜனை விடுவித்து செய்யப்பட்ட வெட்டினைப் பார்க்கவும்.

11 மற்ற முனையை நோக்கி கட்டிங் டார்ச்சை, புள்ளிக்கோட்டின் வழியே நகர்த்தவும். (Fig 3)

Fig 3



CUT IN PROGRESS

> **கேஸ் கட்டிங் செய்யும் பொழுது, கட்டிங் டார்ச்சை பக்கவாட்டு நகர்வு இன்றி நேராக நகர்த்த வேண்டும். கட்டிங் ஆக்சிஜன் வால்வை முழுதுமாகத் திறந்து தகட்டின் பரப்புடன் சரியான நாசில் நிலையைப் பராமரிக்கவும்.**

12 நாசில்களுக்கு சரியான வேகமும், தூரமும் பராமரிக்கவும். (Fig 4)

13 கட்டிங் முடிவுற்றவுடன் கட்டிங் ஆக்சிஜனை மூடி தீப்பிழம்பை நிறுத்தவும்.

14 வெட்டினை சுத்தப்படுத்தி, கட்டிங் துல்லியமாக உள்ளதா என ஆய்வு செய்யவும். (Fig 5)

Fig 4




Fig 5




15 நல்ல நயமான கட்டிங் பெறப்படும் வரை இப்பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்து பழகவும்.

அசிட்டிலின் அழுத்தம் 0.15 கிகி/செ.மீ$^2$ ஆக இருக்க வேண்டும்.

புளோ டார்ச்சில் கட்டிங் நாசில் சரிவர அமைக்கவும்.

ஃபிரி ஹிட்டிங்கிற்காக நியுட்ரல் ஃபிளேம்மை அட்ஜஸ் செய்யவும்.

**அட்டவணை**

**வெட்டுவதற்கான விபரங்கள்**

| **கட்டிங் ஆக்நிஜன் நாசில் துளை விட்டம் (மிமீ)** | **தகட்டின் கனம் (மிமீ)** | **கட்டிங் ஆக்கிஜன் அழுத்தம் (கிகிவிசை / செ.மீ2)** |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 0.8 | 3-6 | 1.0-1.4 |
| 1.2 | 6-19 | 1.4-2.1 |
| 1.6 | 19-100 | 2.1-4.2 |
| 2.0 | 100-150 | 4.2-4.6 |
| 2.4 | 150-200 | 4.6-4.9 |
| 2.8 | 200-250 | 4.9-5.5 |
| 3.2 | 250-300 | 5.5-5.6 |

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 2: **காப்பர் குழாய் இணைப்பை பிரேஸிங் செய்க**

1 குழாய் பெருக்கப்பட்ட முனையுள் சரிவர நுழைகிறதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும். இது ஒரு எளிதான பொருத்துதலாக இருக்க வேண்டும்.

2 இணைக்கப்பட வேண்டிய பரப்பின் மீது சிறிதளவு பிளக்ஸை பூசவும்.

3 இணைப்பை புளோடார்ச் கொண்டு வெப்பப்படுத்தவும்.

4 இணைப்பு மங்கலான சிகப்பாக மாறும் வரை காத்திருக்கவும். பிரேஸிங் ராடு உருக ஆரம்பித்ததும், இணைப்பு சரியான வெப்ப நிலையை அடைகிறது. இணைப்பை வெப்பப்படுத்தும் போழுது அவ்வப்பொழுது பிரேஸிங்ராடை இணைப்பின் மீது தொடச் செய்து இந்த வெப்பநிலையை அறியலாம்.

5 சரியான வெப்பநிலை அடைந்தவுடன், பிரேஸிங் ராடு கொண்டு இணைப்பைப் பல இடங்களில் தொடவும்.

6 உருக்கப்பட்ட பிரேஸிங் ராடு இணைப்பினுள் இழுக்கப்பட்டு, ஒரு குழாயின் வெளிப்புறத்திற்கும், விரிக்கப்பட்ட மற்ற குழாய்க்கும் இடையே உள்ள இடத்தை நிரப்பும். பிரேஸிங் உலோகம் முழு வளையமாக விரிப்பின் முனையில் தென்பட்டால் புளோ டார்ச்சை நீக்கவும். (Fig 6)

Fig 1




7 இணைப்பைக் குளிர விடவும். பிரேஸிங் உலோகம் இறுகும் வரை எந்த ஒரு குழாயையும் அசைக்கக் கூடாது.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 3: **காப்பர் தகடுகளை வெல்டிங் (Butt joints) செய்தல் (Fig 7)**

1 செப்புத் தகடுகளை அளவுகளின் படி தயார் செய்யவும்.

2 தகடுகளின் விளிம்புகளை சுத்தம் செய்து பிசிர் நீக்கவும்.

3 தகடுகளை சதுர பட்ஜாயின்ட் அமைக்கவும்.

4 தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றவும்.

5 இணைப்பின் ஒவ்வொரு 40 - 50 மிமீ தூரத்திற்கும் டேக் வெல்டு செய்யவும்.

6 இணைப்பின் நேர் தன்மையை சோதிக்கவும்.

7 7 ஆம் எண் நாசிலையும் , பாஸ் ஃபர் பிரான்ஸ் ஃபில்லர் ராடையும் தேர்ந்தெடுக்கவும்.

8 சரியான ப்ரான்ஸ் ஃப்ளக்சைத் தேர்ந்தெடுத்து மென்மையான ஆக்சிடைசிங் தீப்பிழம்பை அமைக்கவும்.

9 இணைப்பின் விளிம்புகளை மந்த சிவப்பு நிலைக்கு வெப்பப் படுத்தவும்.

10 இடப்பக்க நுட்ப முறையைப் படுத்தி இணைப்பை பிரேஸ் வெல்டு செய்யவும்.

11 இணைப்பை சுத்தம் செய்து வெல்டை ஆய்வு செய்யவும்.

— — — — — — — —




## திறன் வரிசை

வணிக முறையில் கிடைக்கும் செப்புத் தகடுகள் வெல்டிங் செய்யும் பொழுது விரிசலடையும் என்பதால், சரியான அளவுள்ள (ஆக்சிஜன் நீக்கம்) செய்யப்பட்ட டிஆக்ஸிடைஸ்டு (De oxidised) செப்புத் தகடு தானா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

ஓரங்களையும் பரப்புகளையும் எண்ணெய், கீரிஸ் மற்றும் அழுக்குகளை நீக்கி சுத்தம் செய்ய பிக்ளிங் / கரைப்பான் பயன்படுத்தவும்.

இணைப்பின் பரப்புக்கள் சர்பேஸ் ஆக்சைடுகள் (Surface oxides) இல்லாமல் உள்ளனவா என உறுதி செய்யவும். பரப்புகளை சுத்தம் செய்ய எமரித்தாள், ஒயர்பிரஷ் (அ) ஒயர் கம்பளி (Wool) பயன்படுத்தவும்.

தகடுகளை பட்ஜாயின்டாக சரியான நேர் தன்மையுடனும்,2.5மிமீ ரூட் இடைவெளியுடனும் அமைக்கவும்.

பாஸ்ஃபர்ப்ரான்ஸ் நிரப்புக் கம்பியைத் தேர்ந்தெடுக்கவும்.

ப்ரான்ஸ் ஃப்ளக்ஸ் தேர்ந்தெடுக்கவும். (போரக்ஸ் ஃப்ளக்ஸ்)

மென்மையான ஆக்சிடைசிங் தீப்பிழம்பை அமைக்கவும். இது வெல்டு உலோகத்திலிருந்து ஜிங்க் (துத்த நாகம்) மற்றும் டின் (வெள்ளீயம்) ஆகியவை ஆவியாவதைக் கட்டுப்படுத்தும்.

தகடுகளைப் புறப்பரப்பு ஆக்சைடுகள் உருவாகும் வரை முன் வெப்பப் படுத்தவும்.

செம்பின் அதிக வெப்ப விரிவாக்கம் காரணமாக இணைப்பின் ஒவ்வொரு 50 மிமீ நீளத்திற்கும் டேக் வெல்டு செய்யவும்.

ப்ளோபைப்பை இணைப்பின் முனையில் $60^o$ - $70^o$ கோணத்திலும் நிரப்புக் கம்பியை $30^o$ - $40^o$ கோணத்திலும் பிடித்து பிறகு டேக் வெல்டு செய்யவும். நிரப்புக் கம்பி வெப்பப்படுத்தப்பட்டு ஃப்ளக்ஸ் பொடியில் அமிழ்த்தப்பட்டு, அது ஃப்ளக்ஸ் பூச்சு செய்யப்பட வேண்டும்.

ப்ளோ பைப்பையும் நிரப்புக் கம்பியையும் டேக் வெல்டிங் செய்வதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கோணங்களில் பிடிக்கவும். ப்ளோபைப்புக்கு சற்று ஊசல் இயக்கம் தருவதன் மூலம் இரண்டு விளிம்புகளும் சரிவர உருக்கப்படுவது உறுதி செய்யப் படும்.

ஒரு முனையில் துவங்கி சற்று விவிங் மோஷன் தொடர்ந்து இணைப்பு முடிக்கப்படும் வரை இடையிடையே நிரப்பு உலோகத்தை சேர்க்கவும்.

சீரான ரூட் ஊடுருவலை உறுதிப் படுத்தவும்.

# வெல்டிங் டூல்ஸ், எக்கியுப்மென்ட்ஸ் மற்றும் ஃபேக் ஃபையர் அரஸ்டர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய செயல் விளக்கம் (Demonstrate care & safety of welding tools and equipments and back fire arrester)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **வெல்டிங் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு**
- ஃபேக் ஃபையர் அரஸ்புரை பரிசோதித்தல்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- சிலிண்டர் கீ - 1 தொகுதி
- அட்ஜஸ்டபுள் ஸ்பேனர் - 250mm.
- ஸ்குரு டிரைவர் - 300mm.

**சாதனங்கள் / இயந்திரங்கள் ( Equipment Machines)**

- ஆக்சி - அசிட்டிலின் கேஸ் வெல்டிங் செட் - 1 No.
- சிலிண்டர் டிராளி - 1 No.

**பொருட்கள் (Materials)**

- கண்பாதுகாப்பு கண்ணாடி - 1 No.
- பாதுகாப்பு உடை - 1 No.
- ஸ்பாக் லைட்டர் - 1 No.
- ஹோஸ் கிளாம்ப் - 1 No.

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **சிலிண்டரை சேமித்தல் மற்றும் பாதுகாத்தல்**

**Refer (Task 5 of Exercise 1.5.22)**

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **பேக் ஃபயர் (பின் தீயை) (back fire) சோதித்தல்**

1 (Fig 1)-ல் காண்பித்தவாறு பேக் ஃபயர் அரஸ்டரை ஆக்சிஜன் மற்றும் அசிட்டலின் சிலிண்டர் லைன்களில் இணைக்கவும்.

2 ஒரு பேக் ஃபயர் அரஸ்டர் சிலிண்டரின் அருகில் உள்ள ரெகுலேட்டரின் லோ பிரஷர் சைடில் (low pressure side) பொருத்தவும்.

3 மற்றொரு பேக் ஃபயர் அரஸ்டரை டார்சின் அருகே பொருத்தவும்.

**பாதுகாப்பு (Safety)**

1 கேஸ் பைப்பில் பேக் ஃபயர் அல்லது வெடிப்பு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக இரண்டு சிலிண்டர்களின் வால்வுகளை மூடவும்.

2 மீண்டும் பேக் ஃபயர் ஏற்படுவதை தவிர்க்க பணியை தொடர்வதற்கு முன் குறைகளை நிவர்தி செய்ய.

Fig 1



# வெல்டிங் டூல்ஸ், எக்கியுப்மென்ட்ஸ் மற்றும் ஃபேக் ஃபையர் அரஸ்டர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய செயல் விளக்கம் (Set oxy acetylene plant, use two stage regulator, adjustment of flame gas pressure-O2 and DA)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்

- **ஆக்ஸி அசெட்டிலீன் கேஸ் வெல்டிங் பிளாண்டை அமைத்தல்.**

**(பயிற்சி#1.5.23-ல் உள்ள செய்ய வேண்டிய வேலை 3-ஐ பார்க்கவும்)**

© NIMI NOT TO BE REPUBLISHED

## காப்பர்-காப்பர், காப்பர்- மைல்டு ஸ்டீல், காப்பர் - அலுமினிய பைப்களை பிரேசிங் செய்தல் (Perform brazing between copper to copper and copper to MS, copper to aluminium pipes)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **காப்பர் - காப்பர் பைப்களை இணைத்தல்**
- **காப்பர் - மைல்டு ஸ்டீல் பைப்களை இணைத்தல்**
- **காப்பர் - அலுமினியம் பைப்களை இணைத்தல்.**

**தேவையானவைகள் (Requirements)**

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஆக்சி - அசிட்டலின் அமைப்பு நாசிலுடன் - 6 Nos.
- வெல்டிங் ஸ்கிரீன் - 1 தொகுப்பு

**பொருட்கள் (Materials)**

- வெல்டிங் மாஸ்க் - 1 No.
- கையுறை - 1 No.
- காப்பர் பைப்6mm, 200mm ஒவ்வொன்றிலும் - 10 Nos.
- காப்பர் பாஸ்பரஸ் கம்பி - தேவையான அளவு
- எஃகு பைப் 6 mm, 200mm - 10 Nos.
- அலுமினியம் பைப் 6 mm, 200mm ஒவ்வொன்றிலும் - 10 Nos.
- சில்வர் பிரான்ஸ் கம்பி - தேவையான அளவு
- அலுமினா, போரக்ஸ் ஃபிளக்ஸ் - தேவையான அளவு
- ஃபையர் பிரிக் மற்றும் டேபில் - தேவையான அளவு

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **காப்பர் - காப்பர் பைப் இணைத்தல் (Fig 1)**

1 காப்பர் பைப்பின் உள்புறம் மற்றும் வெளிப்புறத்தை சுத்தம் செய்து தயார் படுத்தவும்.

2 ஃபயர் பிரிக்ஸ் (Fire - bricks) ன் மேற்புறம் பைப்புகளை வைக்கவும்.

3 நியூட்ரல் தீ பிழம்பை அமைக்கவும்.

4 இணைப்பின் முனைகள் சிகப்பு நிறத்தை அடையும் வரை வெப்பப்படுத்தவும்.

5 இணைப்பினை சுற்றிலும் காப்பர் பாஸ்பரஸ் ஃபில்லர் கம்பியை கொண்டு தொடவும்.

Fig 1




6 உருகிய உலோகம் நுண்துளை செயல்பாட்டினால் இடைவெளிகளில் நிரம்ப வேண்டும்.

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **காப்பர் - மைல்டு ஸ்டீல் பைப்புகளை இணைத்தல் (Fig 2)**

1 காப்பர் பைப்பின் உட்புறம் மற்றும் மைல்டு ஸ்டீல் பைப்பின் வெளிப்புறத்தை சுத்தம் செய்து தயார் படுத்தவும்.

2 ஃபயர் பிரிக்ஸ்ன் மேற்புறம் பைப்புகளை வைக்கவும்.

3 நியூட்ரல் தீ பிழம்பை அமைக்கவும்.

4 இணைப்பின் முனைகள் சிகப்பு நிறத்தை அடையும் வரை வெப்பப்படுத்தவும்.

5 இணைப்பின் மேற்புறம் மற்றும் ஃபில்லர் கம்பி முனையில் ஃப்லக்ஸை தேய்க்கவும்.

6 இணைப்பினை சுற்றிலும் சில்வர் பிரான்ஸ் ஃபில்லர் கம்பியை கொண்டு தொடவும்.

7 உருகிய உலோகம் இடைவெகளில் நிரப்புமாறு இணைப்புகளை சீராக மறுவெப்பம் செய்க.



Fig 2
SILVER BRAZING TO MAKE CONNECTING JOINTS

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **காப்பர் - அலுமினியம் பைப்புகளை இணைத்தல்**

1 காப்பர் மற்றும் அலுமினியம் பைப்பின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தை சுத்தம் செய்து தயார் படுத்தவும்.

2 நியூட்ரல் தீ பிழம்பை அமைக்கவும்.

3 காப்பர் பைப்பினை வெப்பப்படுத்தவும்.

4 இணைப்பின் முனைகள் சிகப்பு நிற தோற்றத்தை அடையும் வரை வெப்பப்படுத்தவும்.

5 காப்பர் பைப்பின் உள்ளே அலுமினிய பைப்பின் முனையை வைத்து அழுத்தவும்.

6 இணைப்பின் மேற்புறமும் ஃபில்லர் கம்பியின் முனையிலும் ஃப்ளக்ஸை தேய்க்கவும்.

7 இணைப்பினை சுற்றிலும் சில்வர் பிரான்ஸ் ஃபில்லர் கம்பியை கொண்டு தொடவும்.

8 உருகிய உலோகம் இடைவெளிகளில் நிரப்புமாறு இணைப்புகளை சீராக மறுவெப்பப்படுத்துக.

— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# பொதுவான கை கருவிகள் நுண்கருவிகள் மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதல் மற்றும் பயன்படுத்துதல் (Identify and use of general hand tools instruments and equipment used in refrigeration work)

நோக்கம்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்

• சிறப்புக் கருவிகளையும் அவற்றின் செயற்பாட்டையும் அடையாளங் காண்க.

**(பயிற்சி#1.1.05-ல் உள்ள செய்ய வேண்டிய வேலை 1,2,3 & 4-ஐ பார்க்கவும்)**

© NIMI
NOT TO BE REPUBLISHED

# ரெஃப்ரிஜிரேஷன் வேலைகளில் பயன்படும் சிறப்புக் கருவிகளை அடையாளம் காண்க (Identify special tools, instruments and equipment used in refrigeration work shop)

நோக்கம்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
• **சிறப்புக் கருவிகளையும் அவற்றின் செயற்பாட்டையும் அடையாளங் காண்க.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஃப்ளேரிங் டூல் மற்றும் யோக் - 1 No.
- ரீமருடன் ட்யூப் கட்டர் - 1 No.
- பைப் பெண்டர் (ஸ்பிரிங்/புள்ளி டைப்) - 1 No.
- பின்ச்சிங் டூல் - 1 No.
- ஸ்வேஜிங் டூல்/பின்ச் ஆப் பிளையார் - 1 No.
- அலைடு டார்ச் - 1 No.
- எலக்ட்ரானிக் லீக் டிடெக்டர் - 1 No.
- அனிமாமீட்டர் - 1 No.
- டாக்கோ மீட்டர் - 1 No.
- ஸ்சிலிங் சைக்ரோமீட்டர் - 1 No.
- ஏர்கம்பிரஸ்ஸர் - 1 No.
- ரேச்சட் ரின்ச் - 2 Nos.
- ப்ரஷர் கேஜ் - 2 Nos.
- தெர்மோமீட்டர் - 1 No.
- லீக் டிடெக்டர் - 2 Nos.
- கேஜ் மேனிஃபோல்டு - 1 No.
- டாங் டெஸ்டர் - 1 No.
- வேக்கம் பம்பு - 1 No.

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **சிறப்பு கருவிகளின் முக்கிய பாகங்கள் மற்றும் செயற்பாட்டை அடையாளங் காண்க**

**ஃபிளேரிங் டூல் மற்றும் யோக்கு (Flaring tool with yoke)**

1 (Fig 1) ஐ பார்த்து குறியிடப்பட்டுள்ள உள்ள பாகங்களை அடையாளங் காணவும்.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (1)ல் பாகங்களின் பெயர்களையும் செயற்பாட்டையும் பதிவு செய்யவும்.

Fig 1




**அட்டவணை (1)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

• **டியுப்கட்டர் மற்றும் ரீமரின் முக்கிய பாகங்களைக் கண்டறியவும் (Identify the main part of Tube cutter with Reamer)**

1 படத்தைப் பார்த்து (Fig 2)ல் உள்ள விவரச்சீட்டின் (label ) படி பாகங்களை அடையாளங் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (2)ல், பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

Fig 2




© NIMI NOT TO BE REPUBLISHED

அட்டவணை (2)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- **பைப் பெண்டர் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main part of Pipe bender)**

1 படங்களைப் பார்த்து (Fig 3 & 4) குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளங் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (3)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

Fig 3




Fig 4




அட்டவணை (3)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |

- **ஸ்வேஜிங் டூல் கருவியின் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main part of Swaging tool)**

1 படங்களைப் பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை (Fig 5 & 6) அடையாளங் காண்க.

2 பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (4)ல் பதியவும்.

Fig 5




Fig 6




அட்டவணை (4)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- **பின்சிங் டூல் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main part of pinching tool)**

1 குறி இடப்பட்ட பாகங்களை, (Figs 7&8)ல் பார்த்து அடையாளம் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (5)ல் பாகங்களின் பெயர்கள் மற்றும் செயற்பாட்டைப் பதியவும்

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 7




PINCHING TOOL

Fig 8



PINCHING PLIER

MRN1544H7

அட்டவணை (5)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- ரேட்சட் ரின்ச் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. **(Identify the main part of Ratchet wrench)**

1 (Fig 9)ஐ பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளங் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (6ல்) பாகங்களின் பெயர்கள் மற்றும் செயற்பாட்டைப் பதியவும்.

Fig 9




RATCHET WRENCH

MRN1544H8

அட்டவணை (6)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **பிரஸ்ஸர்கேஜின் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க**

1 (Figs 10&11)ஐ பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளம் காண்க.

Fig 10




PRESSURE GAUGE

MRN1544H9

Fig 11




COMPOUND GAUGE

MRN1544HA

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (7)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டைப் பதியவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

அட்டவணை (7)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- **தெர்மாமீட்டரின் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main part of Thermometer)**

1 (Figs 12&13)ஐ பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளம் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (8)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

Fig 12




THERMOMETER

Fig 13




POCKET THERMOMETERS

அட்டவணை (8)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- **லீக் டிடெக்டர் கருவியின் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main part of Leak detector)**

1 (Fig 14)ஐ பார்த்து குறியிடப்பட்டுள்ள பாகங்களை அடையாளம் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (9)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

Fig 14




HALIDE TORCH LEAK DETECTOR

அட்டவணை (9)

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- **எலக்ட்ரானிக் லீக் டிடெக்டர் கருவியின் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main part of electronic leak detector)**

1 (Fig 15)ஐ பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளம் காண்க.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 15




ELECTRONIC LEAK DETECTOR

MRN1544HE

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (10)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

**அட்டவணை (10)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- **ஸ்லிங் சைக்ரோமீட்டரின் முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main parts of sling psychrometer)**

1 (Fig 16)ஐ பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளம் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (11)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

**அட்டவணை (11)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

Fig 16




SLING PSYCHROMETER

MRN1544HF

- **(கேஜ் மேனிபோல்டு) முக்கிய பாகங்களை அடையாளங் காண்க. (Identify the main parts of gauge manifold)**

1 (Fig 17)ஐ பார்த்து குறியிடப்பட்டுள்ள பாகங்களை அடையாளம் காண்க.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (12)ல் பாகங்களின் பெயர்களையும் அவற்றின் செயற்பாட்டையும் பதியவும்.

**அட்டவணை (12)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 17




1 (Fig 18)ஐ பார்த்து குறியிடப்பட்டு உள்ள பாகங்களை அடையாளம் காண்க.

Fig 18




**அட்டவணை (13)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

**டாக்கோ மீட்டரின் முக்கிய பாகங்களை அடையாளங் காணுதல் (Identify the main part of tachometer)**

1 (Fig 19) அடையாளக் குறியிடப்பட்டுள்ள பாகங்களை அடையாளங் காணவும்.

2 கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (13)ல் பாகங்களின் பெயர்களை குறிப்பிடவும்.

Fig 19




**அட்டவணை (14)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 3: **வேக்கம் பம்பின் முக்கிய பாகங்களை அடையாளங் காணுதல்**

1 (Fig 20) காட்டப்பட்டுள்ள அடையாளக் குறிகளிடப்பட்ட பாகங்களை அடையாளங் காணவும்.

2 கொடுக்கப்பட்ட அட்டவணை 14-ல் பாகங்களின் பெயர்களையும், செயல்பாட்டையும் குறிப்பிடவும்.

Fig 20




PORTABLE HIGH-VACCUM PUMP

**அட்டவணை (15)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

**ஏர்கம்பிரஸ்ஸரின் முக்கிய பாகங்களை அடையாளங் காணுதல் (Identify the main part of air compressor)**

1 (Fig 21) உள்ள அடையாளக் குறியிடப்பட்டுள்ள பாகங்களின் பெயர்களை அடையாளங் காணவும்.

2 கொடுக்கப்பட்ட அட்டவணை 15-ல் பாகங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.

Fig 21




**அட்டவணை (16)**

| லேபிள் | பாகங்களின் பெயர்கள் | செயற்பாடு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

— — — — — — — —

NOT TO BE REPUBLISHED © NIMI

# வேப்பர் கம்ப்ரசன் சிஸ்டம் மற்றும் வேப்பர் அப்சார்ப்ஷன் சிஸ்டம் அடையாளங் காணதல் (Identify the components of vapour compression system and vapour absorption system)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- வேப்பர் கம்பிரஸ்ஸின் அமைப்பை அடையாளங்கண்டு சுழற்சியைப் பின் தொடரவும்
- வேப்பர் கம்ப்ரசன் சிஸ்டத்தின் பாகங்களை அடையாளம் காணுதல்
- வேப்பர் அப்சார்ப்ஷன் ரெப்ரிஜரேஷன் சுற்றை அடையாளம் காணுதல்.

## தேவையானவைகள் (Requirements)

**உபகரணங்கள் (Equipments)**
- வேப்பர் கம்ப்ரசன் சிஸ்டம் ரெப்ரிஜிரேட்டர் (Refrigerator) - 1 No.
- வேப்பர் அப்சார்ப்ஷன் சிஸ்டம் - 1 No.

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: பல்வேறு ரெஃப்ரிஜிரெஷன் உபகரணங்களை அடையாளம் காணுதல்

Fig 1




PARTS OF VISIBLE COOLER

Fig 3




FROST FREE REFRIGERATOR.

Fig 4




WATER COOLER COVERED WITH SIDE PANELS

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 2: வேப்பர் கம்ப்ரசன் சிஸ்டத்தில் உள்ள அனைத்து பாகங்களையும் அடையாளங் கண்டு மற்றும் சுழற்சியைப் பின் தொடரவும்

Fig 1




TYPICAL COMPRESSION REFRIGERATION SYSTEM

| வ. எண் | சிஸ்டத்தில் அடையாளங் கண்ட பாகங்கள் (Identified components in the system) |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |
| 11 | |
| 12 | |
| 13 | |

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: பாகங்களை கண்டறிதல்

Fig 2




Fig 3




Fig 4




Fig 5




Fig 6




**Record Sheet**

| வ. எண். | பாகங்களின் பெயர் (Components Name) | செயல்பாடு (Functions) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்ய வேண்டிய வேலை 4:#வேப்பர் அப்சார்ஷன் ரெப்ரிஜரேஷன் சுழற்சியை அடையாளம் காணுதல்




**Record Sheet**

| வ. எண். | பாகங்களின் பெயர் (Components Name) | செயல்பாடு (Functions) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |

© NIMI NOT TO BE REPUBLISHED

# சாப்ட் காப்பர் டியுப் காயிலை பிரித்தல், வெட்டுதல் மற்றும் வளைத்தல் (Unroll, cut and bend on soft copper tubes)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- காயிலில் இருந்து காப்பர் டியுபை பிரித்து நீட்டுதல்
- கொடுக்கப்பட்ட அளவுக்கு காப்பர் டியுபை வெட்டுதல்
- படத்தின்படி காப்பர் டியுபை வளைத்தல்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- மென் சுத்தியல் (Mallet) - 1 No.
- டியுப் கட்டர் (0.25 மி.மீ) - 1 No.
- ரீமிங் டூல் (Reaming tool) - 1 No.
- ஸ்பிரிங் பெண்டர் கருவி(6மி.மீ) - 1 No.
- புள்ளி டைப் டியுப் பெண்டர் கருவி (6 மி.மீ) - 1 No.
- ஸ்டீல் டேப் (அ) ஸ்டீல் ரூல் - 1 No.
- முக்கோண அரம் 150 மி.மீ - 1 No.
- பால் பீன் சுத்தியல் 220 கிராம்ஸ் - 1 No.

**பொருட்கள் (Materials)**

- காப்பர் டியுப் 6 மி.மீ விட்டம் - 1 சுருணை
- காட்டன் வேஸ்ட் - தேவையான அளவு

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **காயிலில் இருந்து காப்பர் டியுபை பிரித்து நீட்டுதல் (Unrolling)**

1 சுத்தமான தட்டையான பரப்பின் மீது டியுபை வைக்கவும்.

2 காப்பர் டியுபை கொடுக்கப்பட்ட அளவிற்கு நீட்டவும். (Fig 1)

Fig 1




Fig 2




3 டியுபில் ஏதாவது வளைவு இருந்தால், குழலை, மென்சுத்தியல் (அ) பிளாஸ்டிக் சுத்தியல் கொண்டு இலேசாகத் தட்டி நேராக்கவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **காப்பர் டியூப்பை கொடுக்கப்பட்ட அளவில் மார்க் செய்து மற்றும் கட் செய்யவும்**

**கவனிப்பு அட்டவணை**

| வ.எண் | கவனிக்க வேண்டியவை | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | குழலின் நேரான தன்மை | மிக மிக நன்று/மிக நன்று/நன்று/சுமார் |
| 2 | குழலைப் பாதுகாப்பாகக் கையாளுதல் | மிக மிக நன்று/மிக நன்று/நன்று/சுமார் |
| 3 | பிற அளவுக் குழல் சுருள்களை விரித்தல் | மிக மிக நன்று/மிக நன்று/நன்று/சுமார் |
| குறிப்பு: பல்வேறு அளவுள்ள குழல்களுக்கு இவைகளை மீண்டும் செய்யவும். | | |

© NIMI NOT TO BE REPUBLISHED

1 டியுபின் நீளத்தைத் தேவையான அளவுக்கு அளந்து வெளிப்புறத்தில் அடையாளக் குறியிடவும்.

2 டியுபின் அடிப்புறத்தில் உள்ள உருளைகளுக்கும், மேலே உள்ள வெட்டும் சக்கரத்திற்கும் இடையே வைக்கவும்.

3 அரத்தைக் கொண்டு செய்த அடையாளக் குறியுடன் ஒரே நேர்க்கோட்டில் வெட்டும் சக்கரம் இருக்கும்படி டியுபை அமைக்கவும். (Fig 3)

Fig 3




PIPE CUTTER IN POSITION ON THE PIPE

4 தம்ப் வீலை குறைந்த அழுத்தத்துடன் டைட் செய்து வெட்டும் சக்கரம் டியிபின் வெளிப்புறத்தைத் தொடும்படியாகச் செய்யவும்.

5 டியுபை சுற்றிலும் டியுப்கட்டரை சுழற்றி, டியுபின் வெளிப்புறத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிச் செல்லும்படிச் செய்யவும்.

6 வெட்டும் சக்கரத்தின் அழுத்தத்தை அதிகரிக்க தம்ப் விலை டைட் செய்யவும் பிறகு டியுப் கட்டரைக் டியுபை சுற்றி சுழற்றவும். (Fig 4 பார்க்கவும்).

Fig 4




USING THE PIPE CUTTER

7 வெட்டும் சக்கரத்திற்கு தொடர்ந்து அழுத்தத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வெட்டவும். மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் வேலை செய்யவும். அதிகமான அழுத்தத்தைக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் டியுப் பழுதடைந்து விடும்.

8 கட்டிங் முடிந்தவுடன் திறந்துள்ள முனையை அடைப்பு செய்து, டியுபை சுருளாக சுருட்டவும்.

9 டியுபின் முனையில் உள்ள பிசிர்களை ரீமர் கருவியைப் பயன்படுத்தவும். (Fig 5)

Fig 5




THE PIPE REAMING TOOL

10 ரீமிங் வேண்டிய டியுபின் முனையைக் கீழ்நோக்கிப் பிடிக்கவும். (இதனால் காப்பர் துகள்கள் குழாயினுள் புகாது) குழாயின் உட்புறத்தில் உள்ள பிசிர்களை விளிம்பு, முழுவதுமாக நீக்கப்படும் வரை ரீமர் கருவியைத் ரீமிங் செய்யவும்.(Fig 6)

Fig 6



REAMING THE INSIDE OF THE PIPE




REAMING THE OUTSIDE OF THE PIPE

© NIMI NOT TO BE REPUBLISHED

**கவனிப்பு அட்டவணை**

| வ. எண் | கவனிக்க வேண்டியவை | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | வெட்டப்பட்ட டியுபின் நீளம் | மிக மிக நன்று /நன்று/சுமார் |
| 2 | டியுபின் சுத்தப்படுத்த-ப்பட்ட முனை | மிக மிக நன்று /நன்று/சுமார் |
| **குறிப்பு: இப்பயிற்சியை பல்வேறு அளவுள்ள டியுப்களுக்கு மீண்டும் செய்யவும்.** | | |

**கவனிப்பு அட்டவணை**

| வ. எண் | கவனிக்க வேண்டியவை | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | வளைவு 1ன் கோணம் | சரி/சரியல்ல |
| 2 | வளைவு 2ன் கோணம் | சரி/சரியல்ல |
| **குறிப்பு: இப்பயிற்சியை பல்வேறு அளவுள்ள டியுப்களுக்கு மீண்டும் செய்யவும்.** | | |

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **காப்பர் டியூப்பை வளைத்தல்**

1 ரெஃப்ரிஜிரேஷன் சிஷ்டத்தில் பயன்படுத்தப்படும் மிகவும் மென்மையானது. டியுப் கையாலேயே வளைக்கலாம். (சிறிய விட்முள்ள டியுப்களை) இது மென்மையாக இருப்பதால் வளைக்கும் பொழுது எளிதாக பழுதடையலாம்.

2 குழாய் கடினமாக இருந்தால் அது எளிதாக வளையாது. அதைப் பயன்படுத்துவதற்கு முன்பு அது மென்மைப்படுத்தப்பட வேண்டும்.

3 வளைக்கும் ஸ்பிரிங் பெண்டரை டியுபின் வெளிப்புறத்தில் தள்ளவும். (Fig 7 பார்க்கவும்). இது ஒரே சீராக வளைய உதவுகிறது.

Fig 7




4 டியுப் பெருவிரல்களைப் பயன்படுத்தி ஒரு நேரத்தில் சிறிதளவு மட்டுமே வளைக்கவும். (படத்தைப் பார்க்கவும்) (Fig 8). ஒரே நகர்வில் வளைவை வளைத்து முடிக்க முயற்சிக்க வேண்டாம். இது டியுப்பை நசுங்க (Buckle) செய்து விடும்.

Fig 8




5 குழாயில் குறுகிய வளைவை செய்யக் கூடாது. குழாயின் விட்டம் 1/4 அங் (6 மி.மீ) ஆக இருப்பின், குழாயைப் சேதமடையாமல் நீர் வளைக்கக் கூடிய மிகக் குறுகிய வளைவின் ஆரம் 1"(25 மி.மீ) ஆகும். (படத்தைப் பார்க்கவும்) (Fig 9) அதாவது குழாயின் விட்டத்தைப் போல் வளைவின் ஆரம் 5 மடங்குக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

Fig 9




© NIMI NOT TO BE REPUBLISHED

6 வளைக்கும் போது, விரிசல் அடையக் கூடிய, பிளக்கக் கூடிய, சுருக்கம் ஏற்படக் கூடிய (அ) தட்டையாகக் கூடிய டியூப்களை பயன்படுத்தக் கூடாது.

7 இணைப்புடன் நன்கு பொருந்தும்படியாகக் டியூபை வளைக்கவும். (Fig 10)

Fig 10




ACCURATE TUBE BENDER

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# காப்பர் டியூபில் ஸ்வேஜிங் செய்து பிரேஸிங் இணைப்பு செய்தல் (Swage and make a brazed joint on copper tubing)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **காப்பர் டியூபை ஸ்வெஜ் செய்தல்**
- **பிரேஸிங் இணைப்பை உருவாக்குதல்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஸ்டீல் டேப் (அ) ஸ்டீல் ரூல் - 1 No.
- முக்கோண ஃபைல் 150mm - 1 No.
- பிளாரிங் பிளாக் - 1 No.
- ஸ்வேஜிங் டூல் செட் - 1 No.
- பால் பீன் சுத்தியல் 220 gm - 1 No.
- பியுட்டேன் டிஸ்போஸ்புல் கண்டெய்னர் மற்றும் டார்ச் -1 செட்

**பொருட்கள் (Materials)**

- பிரேசிஸ் ராடு - தேவையான அளவு.
- பிரேசிஸ் பிளக்ஸ் - தேவையான அளவு.
- பியுட்டேன் - தேவையான அளவு.
- வாயுடன் கூடிய சிலிண்டர் - தேவையான அளவு.
- ஸ்பார்க் லைட்டர் - 1 No.

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **காப்பர் டியுபின் முனையைப் ஸ்வெஜ்ஜிங் செய்தல்**

1 ஒரே அளவுள்ள இரண்டு டியுப்களை ஒன்றிணைக்க, ஒரு டியுபினுள் இன்னொரு டியுபை பொருந்தி அமையும் படி பெரியதாக இருக்க வேண்டும். (Fig 1)

Fig 1




2 டியுபின் முனையைப் பெரிதாக்கல், ஸ்வெஜ்ஜிங் செய்தல் (Swaging) எனப்படுகிறது. (Fig 2)

Fig 2




3 ஸ்வெஜ்ஜிங் செய்வதற்கான கருவி எதிரிலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. (Fig 3) டியுபின் முனையைப் ஸ்வெஜ்ஜிங் செய்ய முயலும் முன்பு அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்துக் கொள்ளவும்.

Fig 3




4 டியுபைக் கருவியினுள் அமைக்கவும். டியுப்பை பொருத்துவதற்கான பொருத்தமான துளையை தேர்ந்தெடுத்துக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

5 ஃபிளாரிங் பிளாக் மேற்புறத்தில் டியுபின் நீளம் அதன் விட்ட அளவுடன் கூடுதலாக 1/8" (3 மி.மீ) அளவுக்கு நீட்டிக் கொண்டு இருக்கும் படியாக அமைக்கவும். (Fig 2) 1/4" (6 மி.மீ) அளவுள்ள குழாய்க்கு இது 1/4" (6 மி.மீ) + 1/8" (3 மி.மீ) = 3/8" (9 மி.மீ) ஆக படத்தில் காட்டப்பட்டவாறு இருக்கும். (Fig 4)

Fig 4




6 ஃபிளாரிங் பிளாக்கின் இரண்டு முனைகளிலும் உள்ள விங்நெட்டை டைட் செய்யவும்.

7 மற்றொரு குழாய் பொருந்தும்படியாக, முனையைப் பெரிதாக்க பொருத்தமான ஸ்வெஜ்ஜிங் அடாப்டரை தேர்ந்தெடுக்கவும். அடாப்டரில் எண்ணெய் இடவும். ஸ்வெஜ்ஜிங் அடாப்டரை பிளாரிங் பிளாக்கின் மீது பொருத்தவும். அடாப்டரை செலுத்தவும்.

8 அடாப்டர் மூலம் டியுபினுள் ஸ்வெஜ்ஜிங் செய்யப்படுகிறது.

9 பிளாரிங் பிளாக்கிலிருந்து டியுபினை நீக்கவும். ஸ்வெஜ்ஜிங் செய்யப்பட்ட டியுபை முனையில் மற்றொரு துண்டு பொருத்தப்படலாம். (Fig 5)

10 ஸ்வெஜ்ஜிங் டியுப் முனையில் டியுப் சரிவர பொருந்தவில்லையெனில் ரீமர் கருவியைப் பயன்படுத்தி ஸ்வெஜ்ஜிங் செய்யப்பட்ட டியுபின் உட்புறத்தை சுத்தப்படுத்தவும்.

Fig 5




---

செய்ய வேண்டிய வேலை 2: **ஸ்வெஜ்ஜிங் செய்யப்பட்ட டியுப்பை இணைப்பை பிரேஸிங் செய்க**

1 டியுப் ஸ்வெஜ்ஜிங் செய்யப்பட்ட முனையுள் சரிவர நுழைகிறதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும். இது ஒரு எளிதான பொருத்துதலாக இருக்க வேண்டும். அது இறுக்கமான பொருத்துதலாக இருப்பின், பற்றீடு உலோகத்திற்குப் போதுமான இடைவெளி இருக்காது. அது ஒரு தளர்வான பொருத்துதலாக இருப்பின் இணைப்பு பலவீனமாக இருக்கும். (Fig 6)

Fig 6




2 வெவ்வேறு வகையான உலோக டியுப்பை இணைக்கப்பட வேண்டிய பரப்பின் மீது சிறிதளவு பிளக்ஸ் பூசவும். சிறிதளவு மட்டுமே போதும். அதிக அளவு இருந்தால் அது அமைப்பை (System) மாசுபடுத்தி விடும். (Fig 7)

Fig 7




**குறிப்பு: பிளக்ஸ் கலந்த பிரேஸிங்ராடை பயன்படுத்தப் படுவதனால், கூடுதலாக பிளக்ஸ் பயன்படுத்துவது தேவைப்படாது.**

3 ஒரு டியுபின் ஒரு முனையை மற்றொரு டியுபின் ஸ்வேஜினுள் சரியான அளவு

© NIMI NOT TO BE REPUBLISHED

தள்ளவும். பிளக்ஸ்ஸை பரவலாக்க டியுப்பை திருப்பவும். (Fig 8)

Fig 8




4 இணைப்பை புளோடார்ச் கொண்டு வெப்பப்படுத்தவும். சரியான அளவுள்ள தீப்பிழம்பைப் பயன்படுத்தவும்.

5 இணைப்பு மங்கலான சிகப்பாக மாறும் வரை காத்திருக்கவும். பிரேஸிங் ராடு உருக ஆரம்பித்ததும், இணைப்பு சரியான வெப்ப நிலையை அடைகிறது. இணைப்பை வெப்பப்படுத்தும் பொழுது அவ்வப் பொழுது பிரேஸிங் ராடு இணைப்பின் மீது தொடச் செய்து இந்த வெப்பநிலையை அறியலாம். இணைப்பை அதிக வெப்பம் செய்யக் கூடாது. தீப்பிழம்பில் பிரேஸிங் ராடை விடக் கூடாது. இணைப்பின் வெப்பநிலையால் மட்டுமே பிரேஸிங் ராடு உருக்கப்பட வேண்டும். தீப்பிழம்பால் அல்ல. (Fig 9)

6 சரியான வெப்பநிலை அடைந்தவுடன், பிரேஸிங் ராடு கொண்டு இணைப்பைப் பல இடங்களில் தொடவும்.

7 உருக்கப்பட்ட பிரேஸிங் ராடு இணைப்பினுள் இழுக்கப்பட்டு, ஒரு டியுபின் வெளிப்புறத்திற்கும், விரிக்கப்பட்ட மற்ற குழாய்க்கும் இடையே உள்ள இடத்தை நிரப்பும். பிரேஸிங் உலோகம் முழு வளையமாக விரிப்பின் முனையில் தென்பட்டால் புளோடார்ச்சை நீக்கவும்.

8 இணைப்பைக் குளிர விடவும். பிரேஸிங் உலோகம் இறுகும் வரை எந்த ஒரு டியுபையும் அசைக்கக் கூடாது.

**கவனிப்பு அட்டவணை**

| வ.எண் | கவனிக்க வேண்டியவை | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | ஸ்வெஜ்ஜிங்கை சோதித்தல் | மிக மிக நன்று/நன்று/சுமார் |
| 2 | பிரேஸிங் செய்யப்பட்ட இணைப்பை சோதித்தல் | உறுதியானது/நுண் துளைகள் கொண்டுள்ளது. |
| 3 | எடுத்துக் கொண்ட நேரம் | மெதுவாக/நடுநிலையாக/வேகமாக |
| 4 | பொருள் விரயம் | குறைவானது/மிகவும் குறைவு/விரயம் இல்லை. |

**குறிப்பு: இதே பயிற்சியை பல்வேறு அளவுள்ள குழல்களுக்கு செய்து முன்னேற்றத்தை சோதிக்கவும்.**

— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஃபிளார் இணைப்புகளை செய்து ஃபிளார் - யுனியனுடன் பரிசோதிக்கவும்‡(Make flare joints and test them with flare fittings)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **டியுபின் இறுதியில் ஃபிளாரிங் செய்யவும்**
- **ஃபிளார் யுனியன் அதை இணைக்கவும்**
- **ஃபிளர்நெட் மற்றும் பிரேஸ் செய்த இணைப்புகளைப் கசிவு பரிசோதிக்கவும்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- ஃப்ளேரிங் ப்ளாக் யோக் உடன் - 1 செட்
- அட்ஜஸ்டபிள் ரின்ச் 200 மி.மீ - 1 No.
- வால்வு கீ 6 மி.மீ (சிலிண்டர் வால்வு திறக்க) - 1 No.
- கேஜ்மேனி போல்டு செட் - 1 No.
- பிளாட் பைல் மென்மை 200 மி.மீ - 1 No.
- நைட்ரஜன் கேஸ் சிலிண்டர் மற்றும் வாயு - 1 No.

**பொருட்கள் (Mareials)**

- செப்புக்குழல் எண்ணிக்கை, நீளம் - தேவையான அளவு
- ஃப்ளேர் நட் 6 மி.மீ - தேவையான அளவு
- யூனியன் 6 மி.மீ - தேவையான அளவு
- சோப்புக் கரைசல், பிரஷ் - தேவையான அளவு
- சிறிதளவு எண்ணெய் - தேவையான அளவு

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **காப்பர் டியுப்களில் ஃபிளாரிங் செய்க**

1 ரெஃப்ரிஜிரேஷன் டியுப்களை சில நேரங்களில் பிளார் யுனியன் பயன்படுத்தி இணைக்கலாம்.

2 டியுப்களின் இறுதியில் கோண் வடிவாக விரித்தல் செய்ய வேண்டும். (Fig 1)

Fig 1




FLARE NUT

3 ஃபிளாரிங் செய்வதற்கு முன் டியுப் வழியே அதற்குரிய ஃப்ளேர் நட்டை நுழைத்தல் வேண்டும்.

4 ஃப்ளேரிங் கருவியை சோதிக்கவும். டியுபில் பிளாரிங் செய்யுமுன் அது எவ்வாறு வேலை செய்கிறது டியுபின் இறுதிமுனையில் என்பதைப் புரிந்து கொள்ளவும்.

5 முனைவிரிப்பு செய்யுமுன் செப்புக்குழலின் வெட்டுமுனை முரட்டுத்தனமாக இல்லாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

6 கருவியில் குழலைப் பொருத்தவும் (Fig 2) இவற்றை உறுதி செய்து கொள்ளவும்.

a ஃப்ளேர் நட்டை முனைவிரிப்பதற்கு முன் நுழைத்தாயிற்று.

Fig 2



b சரியான துளையில், ஃபிளாரிங் கருவியில் தேர்ந்தெடுத்து டியுப்பை பொறுத்த வேண்டும் (அதில் 5 வெவ்வேறு அளவு குழாய்களுக்கான துளைகள் உள்ளன)

7 அந்தக் டியுப் 1/4 அங்குலம் (6 மி.மீ) விட்டமானால் அதற்குரிய துளையில் சுமார் 2 மி.மீ மேலே தெரியும்படி வைத்துப் பொருத்தவும். (இந்தத் தூரம் கணக்கிடப்படுவது. (Fig 3) டியுபின் விட்டம் வகுத்தல் 3, இந்த விஷயத்தில் 6 மி.மீ 3 ஆல் வகுத்தால் = 2 மி.மீ)

Fig 3




8 ஃப்ளேரிங் ப்ளாக்கின் ஒவ்வொரு முனையிலும் உள்ள விங்நட்டை திருகி இறுக்கவும். (படத்தைப் பார்க்கவும். )

9 ஃப்ளேரிங் ப்ளாக்கின் மீது யோக்கைப் பொருத்தவும். (Fig 4)

10 கோனின் மேல் ஆயில் தடவி மெதுவாகத் திருகி இறக்க வேண்டும்.

11 டியுபின் முனைவிரிவடைந்து ஃப்ளேர் உருவத்தைப் பெறும்.

Fig 4




12 ஃபிளாரிங் செய்யப்பட்ட டியுபை பிளாரிங் பிளாக்கிலிருந்து நீக்கவும்.

13 அந்த ஃபிளாரிங்கை சோதனை செய்யவும். அதில் விரிசல் இருந்தால் கோன் மிக அவசரமாக கீழே திருகப்பட்டுள்ளது.

14 ஃபிளார் நட்டில் பொருத்தமாக அமர வேண்டும். அது மிகவும் தளர்வாக இருந்தால், அந்த முனையை வெட்டிவிட்டு, மறுபடியும் அறிவுரை 5ல் இருந்து படிமுறையை செயல்படுத்தவும்.

படிமுறையில் அறிவுரை 7ல் 2 மி.மீ மேலே தூக்கி பொருத்துவதற்கு பதில் இந்த முறை 3 மி.மீ குழலை உயர்த்திப் பொருத்தவும்.

ஃபிளாரிங் தளர்வாக மற்றும் அதிக இறுக்கமாக இல்லாத வகையில் மீண்டும் மீண்டும் சரியான ஃபிளாரிங் வரும்வரை பயிற்சி செய்யவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

**கவனிப்பு அட்டவணை 1**

| வரிசை எண் | திறன் | குறிப்பு |
|---|---|---|
| 1 | ஃபிளாரிங்கை சோதித்தல் | விரிசல் / சமமற்று / மிகச் சிறிது/ மிக நீளம் / சரியானது |
| 2 | முயன்ற எண்ணிக்கை | ஒன்று /இரண்டு / மூன்று |
| **குறிப்பு : வெவ்வேறு அளவு காப்பர் டியுப்களின் மேலே கூறப்பட்டமுறைகளை திருப்பிச் செய்யவும்** | | |

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2:#**ஃபிளார் யுனியன்களுடன் இணைக்கவும்**

1 ஃப்ளேர் நட்டைப் பின்னுக்குத் தள்ளி, யுனியனில் பிளாரிங் செய்யப்பட்ட டியுபை பொருத்தவும், பிறகு அட்ஜஸ்டபிள் ரின்ச் அல்லது பொருத்தமான ஸ்பேனர் பயன்படுத்தி இணைப்பை டைட் செய்யவும்.

2 குழலின் ஒரு முனையை உலர் நைட்ரஜன் சிலிண்டருடன் (cylinder) ஃப்ளேர் நட்டினால் டைட் செய்யவும். உலர் நைட்ரஜனை இணைக்கும் பொழுது எப்போதும் சேஃப்டி வால்வு உடன் மற்றும் டபுள் ஸ்டேஜ் பிரஸ்ஸர் ரெகுலேட்டரைப் பயன்படுத்தவும்.

3 டியுபின் மறுமுனையில் பிரஸ்ஸர் கேஜ் (pressure gauge) ஃப்ளேர் நட் கொண்டு டைட் செய்யவும்.

> **குறிப்பு:**
>
> - **ஃபிளார் நட்டை டைட் செய்யும் போது அதிக அழுத்தம் தரக் கூடாது. ஏனெனில் அது பிளாரிங்கை சேதப்படுத்தி விடும்.**
> - **டியுபின் இணைப்பில் தளர்வு இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளவும்.**

**கவனிப்பு அட்டவணை 2**

| வரிசை எண் | திறன் | குறிப்பு |
|---|---|---|
| 1 | சரியான யுனியன்களை தேர்வு செய்தல் | சரி / சரியில்லை |
| 2 | இணைக்கும் முறை | அருமை / நன்று / சுமார் |
| 3 | எடுத்துக்கொண்ட நேரம் | குறைவு / மிகக்குறைவு / அதிகம் |

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **ஃபிளார் யுனியனில் மற்றும் பிரேஸிங் இணைப்புகளில் கசிவு உள்ளதா எனப் பரிசோதிக்கவும்**

1 டியுபை உறுதியாக இணைத்தபின், வால்வு கீ (அ) ரேச்சட் மூலம் சிலிண்டர் வால்வைத் திறக்கவும்.

2 பிரஸ்ஸர் பிரஸ்ஸர்கேஜில் ஏறிக்கொண்டே வரும்.

3 பிறகு சிலிண்டர் வால்வை மூடி விட வேண்டும். அதிகக்கசிவிருந்தால் ஓசை வரும் மற்றும் இதற்கு உடனே நட்டை மேலும் டைட் செய்ய வேண்டும்.

4 இதில் கசிவேதும் இல்லையென்றால், பிரஸ்ஸர் கேஜில் காட்டும் பிரஸ்ஸர் குறையாமல் அப்படியே இருக்கும்.

5 அழுத்தம் குறைந்தால், இணைப்புகளில் சோப்புக் கரைசல் இட்டு குமிழ்கள் தோன்றுகின்றனவா என சோதிக்கவும். பிரஸ்ஸர் அளவு குறையாமல் இருந்தால், இந்த இணைப்பில் கசிவேதும் இல்லை.

**கவனிப்பு அட்டவணை 3**

| வரிசை எண் | திறன் | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | கருவிகளைத் தேர்ந்தெடுத்தல் | அருமை/ நன்று/ சராசரி |
| 2 | கசிவு கண்டுபிடித்து நிறுத்தல் | அருமை/ நன்று / சராசரி |

— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

## காப்பர் டியுப்களை பிஞ்சிங் செய்தல் (Pinch off copper tubing)

நோக்கம்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **காப்பர் டியுப்களை பிஞ்சிங் செய்தல் டியுப் முனையில் பிரேஸ் செய்தல் மற்றும் கசிவு சோதனை செய்தல்**

### தேவையானவைகள் (Requirements)

| கருவிகள்/அளவிகள் (Tools/Instruments) | | பொருட்கள் (Materials) | |
|---|---|---|---|
| • டியுப் கட்டர் மற்றும் ரீமர் (Tube cutter with reamer) | - 1 No. | • மென் குழல் 1/4", 3/8", 1/2" | - 1 சுருள் ஒவ்வொன்றிலும். |
| • சிறிய முக்கோண பைல் (Small triangular file) | - 1 No. | • சுத்தமான துணி | - தேவையான அளவு |
| • பின்ச்சிங் டூல் (Pinch off tool) | - 1 No. | | |
| • எஃகு வரைகோல் (Steel rule) | - 1 No. | | |

செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **காப்பர் டியுப்களை பிஞ்சிங் செய்தல், டியுப் முனையில் பிரேஸ் செய்தல் மற்றும் கசிவு சோதனை செய்தல்**

1 3 அங்குலம் நீளத் துண்டை வெட்டும் படியாக 1/4"அங். மென் காப்பர் டியுப்பை காயிலிருந்து நீட்டவும்.

2 குழலை 3 அங்குல நீளத்திற்கு ஸ்டீல் ரூல் கொண்டு அளந்து அதன் முகப்பில் பைலின் மூலம் சிறியகோடு செய்து குறியிடவும்.

3 டியுப் V காடியில் கட்டரின் வைத்து டியுப்பை வெட்டவும்.

4 போதுமான அழுத்தம் காப்பர் டியுப்பில் கொடுக்கப்படும் வரை தம்வீலை டைட் செய்யவும்.

5 டியுப்பை சுற்றி மெதுவாகக் டியுப் கட்டரை சுற்றவும்.

6 தேவையான நீளத் துண்டை வெட்டி எடுத்த பிறகு டியுப் காயிலின் முனையை அடைப்பு செய்யவும்.

7 டியுபின் ஓரத்தை ரீமிங் மற்றும் பைல் கொண்டு சுத்தப்படுத்தவும்.

8 3/8" மற்றும் 1/2" குழல்களைப் பயன்படுத்தி மீண்டும் செய்யவும். (படிமுறை 1 முதல் 7 வரை)

9 பிஞ்ச்சிங்/பிஞ்சிங் பகுதியில் காப்பர் டியுபை வைத்து, கையினால் திருகி சீரான அழுத்தம் தரவும். (Figs 1 & 2)

10 ஒரு திருகில் பகுதி சுற்றும், மற்றொன்றில் அதற்கு சமமாகவும் சுற்றவும்.

Fig 1




Fig 2




11 இரண்டு பகுதிகளும் (blocks) சமமாக அமரும் வரை டைட் செய்வதை தொடரவும்.

12 பிறகு டியுப் பிஞ்சிங் செய்யப்பட்டு அடைக்கப்படுகிறது.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# லாக்ரிங் கருவி மற்றும் வெவ்வேறு இணைப்புகளை பயன்படுத்தி உபகரணங்களை சர்வீசிங் செய்தல் (Use lock ring tools various fittings of lockring for servicing of appliances)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- லாக் ரிங் உடன் இரண்டு காப்பர் டியுப்களை இணைத்தல்
- லாக் ரிங் இணைப்புடன் கேப்பிலரி டியூப் இணைத்தல்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- டியூப் கட்டர் - 1 No.
- டியூப் காலிஃபர் - 1 No.
- டிஜிட்டல் மைக்ரோ மீட்டர் - 1 No.
- லாக்ரிங் டூல் கிட் - 1 No.

**பொருட்கள் (Mareials)**

- உப்புத்தாள் - தேவையான அளவு
- லாக் பசை - 1 No.
- லாக் ரிங்கள் (வெவ்வேறு அளவுடைய) - 1 தொகுப்பு
- காப்பர் டியூப் - தேவையான அளவு

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **இரண்டு காப்பர் டியூபை லாக் ரிங்குடன் இணைத்தல்**

1 சரியான அளவுகளுக்கு லாக் ரிங் மற்றும் பொருட்களை தேர்வு செய்யவும். (கிடைக்கக் கூடிய அளவுகள் 1.6 mm முதல் 35 mm வரை)

2 டியூப் காலிஃபரின் உதவி கொண்டு டியூபுகளின் அளவுகளை சோதிக்கவும். (துல்லியமான அளவுகளுக்கு டிஜிட்டல் மைக்ரோமீட்டர் பயன்படுத்தவும்).

3 டியூப் மற்றும் லாக்கரிங் இணைப்பை (Fig 1)ல் காட்டியவாறு கிடைமட்ட கோட்டில் வைக்கவும்.

Fig 1




4 லாக்கரிங் கைக் கருவியைப் பயன்படுத்தி, இணைப்பை (Fig 2)-ல் காட்டியவாறு ஜாயிண்ட்டில் அழுத்தவும்.

5 டியூபின் வெளிப்பரப்பில் லாக் பசையை தடவி டியூப்களை சுற்றவும்.

Fig 2



6 (Fig 3)-ல் காட்டியவாறு லாக் ரிங் இறுக்கமாக மூடும் வரை அழுத்தம் கொடுக்கவும்.

Fig 3




7 லாக்ரிங் பிட்டிங் செய்து முடித்தவுடன், லாக்ரிங் மற்றும் இணைப்புகளை ஒரு உலர்ந்த துணியால் துடைத்து விடவும்.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 2: **லாக்ரிங் இணைப்புடன் கேப்பிலெரி டியூப்களை இணைத்தல் (நுண்புழைக் குழல்)**

1 டியூப் கட்டரை பயன்படுத்தி டியூப்களை பிரிக்கவும் (தேவை ஏற்படின்)

2 கேப்பிலரி டியூபின் (நுண்புழைக் குழல்) முனைகளை உப்புத்தாள் கொண்டு சுத்தம் செய்யவும்.

3 லாக்ரிங் இணைப்பின் மறுமுனை அடையும் வரை கேப்பிலரி டியூபை உள்ளே செலுத்தவும்.

4 பகுதியாக லாக்ரிங்கினுள் சென்றவுடன் ஒரு துளி லாக்பசை தேய்க்கவும்.

5 டியூபின் முழுசுற்றிலும் பசை பரவும் வண்ணம் இணைப்பை 360° க்கு சுற்றவும்.

6 காட்டியவாறு கேப்பிலரி டியூபில் ஒரு சிறு வளைவு ஏற்படுத்தவும்.

7 இதே போல் காப்பர் டியூபின் மறுமுனையை மேற்கூறிய படிகளை பின்பற்றி செய்து லாக்ரிங் இணைப்பை முடிக்கவும்.

8 இணைப்பை செய்து முடித்தபின் உலர்ந்த துணியினால் துடைக்கவும்.

— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# காப்பர் - காப்பர், காப்பர் - எஃகு, காப்பார் - பிராஸ், எல்.பி.ஜி (LPG) மற்றும் ஏர் பிரேசிங் பயிற்சி செய்தல் (Brazing of cu to cu, cu to mild steel cu to brass using air - LPG)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **நாசில் அளவிற்கேற்ப கேஸ் அழுத்தத்தை செட்டிங் செய்க**
- **எல்.பி.ஜி ஏர் தீப்பிழம்பை உருவாக்கு, அட்ஜஸ்ட் மற்றும் அணைக்கவும்**
- **ஸ்வெஜ்ஜிங் செய்த காப்பர் டியுப் இணைப்பில் பிரேஸ் செய்யவும்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

- பாதுகாப்பு அணிகலன்கள் - 1 செட்
- ஸ்பார்க் லைட்டர் - 1 No.
- நாசில் மற்றும் கண்ட்ரோல் வால்வுடன் கூடிய LPG கேன் - 1 செட்

**பொருட்கள்**

- காப்பர் அலாய் பிரேஸிங் ராடு, பித்தளை ராடு மற்றும் சில்வர் ராடு - தேவையான அளவு
- பொருத்தமான பிளக்ஸ் - தேவையான அளவு
- காப்பர் டியுப்கள் - தேவையான அளவு

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **நாசில் அளவிற்கேற்ப வாயு அழுத்தத்தை அமைவு செய்யவும்**

> **இணைக்க வேண்டிய ஜாபின் மேற்பரப்பில் ஆக்ஸைடுகள் மற்ற அசுத்தங்களை அகற்றவும்.**

1 கண் பாதுகாப்புக் கண்ணாடிகள், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு அப்ரான் (apron) போன்றவற்றை அணிந்து கொள்ளவும்.

2 எளிதாகப் பிரேஸ் செய்யும் வகையில் காப்பர் டியூப் ஸ்வேஜ் ஜிங் கனெக்ஷனை சரியான நிலையில் வைக்கவும்.

3 1.6 மி.மீ விட்டமுள்ள சில்வர் பிரேசிங் நிரப்புக் கம்பியை மற்றும் பொருத்தமான பிளகஸ்ஸை பசை போல் எடுத்து வைக்கவும்.

4 LPG கேனை எடுத்துக் கொண்டு அதன் வால்வை சிறிதாகத் திறக்கவும்.

> **நாசிலின் பக்கத்தில் காற்று உறிஞ்சப்படும் (ஆக்சிஜனுக்காக)**

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **LPG - காற்று தீ பிழம்பை எரியவைத்து சரி செய்யவும்**

1 ஸ்பார்க் லைட்டரைப் பயன்படுத்தி பிளேமை ஏற்படுத்தவும்.

2 LPG - கேனின் கன்ட்ரோல் வால்வை சரிக்கட்டி, மென்மையான நியுட்ரல் பிளேம்மை அமைவு செய்யவும்.

— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்ய வேண்டிய வேலை 3: **ஸ்வெஜ்ஜிங் செய்த காப்பர் டியுப்பின் இணைப்பில் பிரேஸ் செய்யவும்**

> ***பிரேசிங் செய்யப்படுவதற்கு முன், ஸ்வேஜிங் செய்த டியுப் இணைப்பை சுத்தம் செய்து பிளக்ஸ்ஸை அதன் மேல் வெப்படுத்தும் பொழுது தடவ வேண்டும்.***

1 இரு டியுப்களிலும் இணைப்புள்ள இடத்தில் சமமாக சூடேற்றவும்.

2 சில்வர் பிரேசிங் ராடின் முனையை பிளக்ஸ் (பேஸ்ட்) முக்கி எடுத்து, அந்த இணைப்புகளின் மேல் தீப்பிழம்புகளைக் காட்டி சூடேற்றவும் (Figs 1&2).

3 அந்த இணைப்பின் நுண்ணிய இடைவெளியின் (கேப்பில்லரி ஆக்ஷன்) மூலம் உருகிய உலோகப் பாய்வு நிறைகிறதா எனக் கவனிக்கவும். (உ.ம்: இணைப்புகளை ஈரப்படுத்தல் -wetting)

4 LPG கேனின் தீப்பிழம்பை (ஆக்ஸி- காற்று) மற்றும் ஃபில்லர் ராடு அந்த இணைப்பின் ஊடே நகர்த்தி, பிரேசிங் நடவடிக்கையை நிறைவேற்றவும்.

குறிப்பு : ஒரு வேளை அந்த இணைப்பு சரியாக ஈரப்படுத்தப்பட (wetted) வில்லை என்றால் அந்த உலோகம் (டியூப்) சரிவர, தேவையான பிரேசிங் வெப்பநிலை அளவுக்கு வெப்பப்படுத்தவில்லை என்பதைக் காட்டுகிறது.

5 அந்த வேலை குளிரும் வரை (இயற்கைக் காற்றினால்) காத்திருந்து இணைப்பின் மேல் படிந்துள்ள கூடுதல் பிளக்ஸை துடைத்து சுத்தமாக்கவும்.

6 மேற்பரப்பில் ஏதேனும் குறைபாடுள்ளதா எனப் பரிசோதிக்கவும்.

7 உங்கள் பயிற்றுநரிடம் சோதிக்கச் சொல்லவும்.

Fig 1




Fig 2




SILVER BRAZING TO MAKE CONNECTING JOINTS

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஆக்ஸி அசிட்டலீனை பயன்படுத்தி காப்பர் - காப்பர், காப்பர் - எஃகு, காப்பார் - பிராஸ் பிரேசிங் செய்தல் (Brazing of cu - cu, cu to mild steel and cu to brass using oxy - acetylene)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **ஸ்வெஜ்ஜிங் காப்பர் டியூப் ஸ்வெஜ்ஜிங் இணைப்பை பிரேஸிங் செய்தல்**
- **காப்பருடன் மென் டியுபை பிரேஸிங் செய்தல்**
- **காப்பர் டியூப் உடன் பிராஸ் டியூப்பை பிரேஸிங் செய்தல்.**

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**
- ஸ்பார்க் லைட்டர் - 1 No.
- டியூப் கட்டர் - 1 No.
- ஒயர் பிரஷ் - 1 No.
- சிலிண்டர் கீ - 1 No.

**சாதனங்கள்**
- ஆக்சிஜன் அசிட்டிலின் வெல்டிங் செட் - 1 No.

**பொருட்கள் (Mareials)**
- உப்புக்காகிதம் - தேவையான அளவு
- பற்றவைப்பு இளக்கி - தேவையான அளவு
- பிரேசிங் ராடு (வெள்ளி, பித்தளை & காப்பர்) - தேவையான அளவு
- MS டியூப் & காப்பர் டியூப் - தேவையான அளவு
- சுத்தமான துணி - தேவையான அளவு
- காப்பர் டியூப் 6 மி.மீ - தேவையான அளவு

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **ஸ்வெஜ்ஜிங் காப்பர் டியுப்பை பிரேஸிங் செய்தல்**

**(பயிற்சி#1.5.27-ல் உள்ள செய்ய வேண்டிய வேலை 3,4 & 5-ஐ பார்க்கவும்)**

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **காப்பர் டியூபுடன் பித்தளைக் டியூப்பை பிரேஸிங் செய்தல்**

1 காப்பர் டியுபின் முனையை வெப்பப்படுத்தி பெல் மவுத் (bell-mouthed) தோற்றம் காண ஏதுவாக மென்மைப்படுத்தவும். (Fig 3)

2 வெப்பப்படுத்திய முனையை தண்ணீரில் முக்கி, ஆக்ஸைடுகளை அகற்றவும். (Fig 4)

3 பெல் மவுத் தோற்றத்தை உருவாக்க ஒரு மேண்ட்ரெல் (mandrel) பயன்படுத்தவும். (Fig 5)

4 மேண்ட்ரெல்லை மென்மைப்படுத்திய குழல் முனையில் செருகி மென் சுத்தியலால் அடித்து உள் செலுத்தவும்.

5 பெல் மவுத் (bell mouthed) சமமற்ற பகுதிகளை ஆன்வில்லில் (anvil) வைத்துத் தட்டி சரி செய்யவும். (Fig 6)

6 பித்தளைக் ( brass) டியுபை பெல் மவுத்தினுள் நுழைத்து 3 புள்ளிகளில் (இடங்களில்) டேக் செய்யவும். (Fig 7)

7 டேக் வெல்டு செய்த இணைப்பை நிற்க வைத்து குழல்களின் நிறம் மாறும் வரை அதனை வெப்பப்படுத்தவும்.

8 பித்தளைக் டியுபின் அடிப்புற வட்டத்தில் மெல்லிய வரியாக பிரேஸிங் செய்யவும், மற்றும் பெல் மவுத் உட்புற சுற்றளவிலும் அடிப்புறத்தில் காப்பர் டியுபில் பிரேஸிங் செய்யவும். (உ.ம். பெல் மவுத்தின் முனையில்)

9 டேக் வெல்டின் 1ம் இடத்தில் பிரேஸிங் டெபாஸிட் (deposit) துவக்கி டேக் வெல்டு 2வின் நடுப்பகுதிவரை தொடரவும். பின்னர் 3வது பாயின்ட்டின் அரைப்பகுதி சுற்றளவு வரை பிரேஸிங் செய்யவும். (Fig 8)

10 பிரேஸிங் டெபாஸிட்டை சேர்க்கையை சுத்தம் செய்யவும்.

11 இரண்டாவது பிரேஸிங் டெபாஸிட் சேர்க்கையை முதல் சேர்க்கை முடிந்த

© NIMI NOT TO BE REPUBLISHED

இடத்தில் ஆரம்பித்து சுற்றளவு முடியும் வரை இரண்டாம் அரைப்பகுதியை பெல் மவுத்தில் முழுமை செய்யவும்.

12 டெபாசிட் 2, டெபாசிட் 1 உடன் ஒன்றாய்க் கலப்பதை சரியாக முடிவதை உறுதி செய்யவும். (உ.ம். முனையப் புள்ளிகள்) முடியும் இடத்தில் ஃபில்லர் ராடை சரியாக அகற்றி அந்த இடத்தை வெப்பம் காட்டி சமமாக முடிப்பு செய்ய வேண்டும்.

13 பிரேஸிங் சேர்க்கை சரியான முறையில் முழுவதையும் மூடி ஒட்டிக் கொண்டிருப்பதை உறுதி செய்யவும் (பெல் மவுத் வெளி விளிம்பில் அதிகமாக நிரம்பி வழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்)

14 பற்றினைப்பில் பெல் போன்ற சேர்க்கை மற்றும் இணைப்பில் மீதமுள்ள பிளக்ஸ்ஸை சுத்தமாக துடைத்து விடவும்.

15 பிரேஸிங் ஒரே சீரான அளவில் அமைந்துள்ளதா, நுண்துளைகள் (porosity) போன்ற வெல்டிங் குறைபாடுகள் ஏதும் இல்லையென பரிசோதித்து உறுதி செய்து கொள்ளவும்.

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஆக்ஸி அசிட்டலீனை பயன்படுத்தி காப்பர் - காப்பர், காப்பர் - எஃகு, காப்பார் - பிராஸ் பிரேசிங் செய்தல் (Brazing of cu - cu, cu to mild steel and cu to brass using oxy - acetylene)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- **ஸ்வெஜ்ஜிங் காப்பர் டியூப் ஸ்வெஜ்ஜிங் இணைப்பை பிரேஸிங் செய்தல்**
- **காப்பருடன் மென் டியுபை பிரேஸிங் செய்தல்**
- **காப்பர் டியூப் உடன் பிராஸ் டியூப்பை பிரேஸிங் செய்தல்.**

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **காப்பர் டியூபுடன் பித்தளைக் டியூப்பை பிரேஸிங் செய்தல்**

**(பயிற்சி#1.6.32-ல் உள்ள செய்ய வேண்டிய வேலை 2-ஐ பார்க்கவும்)**

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **காப்பர் டியூபை வெட்டி மற்றும் மைல்டு ஸ்டீல் டியூபுடன் இணைத்தல்**

1 டியுப் கட்டரின் V கைடில் (guide) வைக்கவும்.

2 தமப் ஸ்குருவை டைட் செய்து போதுமான (thumb screw) அழுத்தம் தரவும்.

3 டியுப் சுற்றிலும் டியுப் கட்டரை சுழற்றவும். கூரான சக்கர முனை டியுபின் சீராக ஆழமாக வெட்டிச் செல்ல தம்ப் ஸ்குரு ( thumb screw) மூலம் அழுத்தம் தந்து முழுமையாக வெட்டுப்படும் வரை இவ்வாறு தொடரவும்.

4 பைப்பின் விளிம்புகளை ஃபைல் ( file) மூலம் சுத்தம் செய்யவும்.

5 பைப்பில் வெளிப்புறத்தை சுத்தம் செய்ய உப்புத்தாள் (sand paper) பயன்படுத்தவும். உட்புறத்தை சுத்தம் செய்ய கம்பி பிரஷ் (wire brush) பயன்படுத்தவும்.

6 சில்வர் ப்ரேசிங் ப்ளக்சை (silver brazing flux) சிறிது தண்ணீர் கலந்து பசை போன்று செய்து அதை பைப்பின் வெளிப்புறத்தில் வெப்படுத்தும்பொழுது பூசவும்.

7 காப்பர் டியூப்பை MS டியூப்புக்குள் செருகவும். பொருத்துதல் மிக எளிதாக இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவும். (Fig 1)

8 ஸ்பார்க் லைட்டரைப் பயன்படுத்தி ஆக்ஸிஜன் எல்.பீ.ஜி (LPG) டார்ச் (அல்லது) ஆக்ஸி -அசிட்டிலின் டார்ச்சை எரிய வைக்கவும்.

9 பாதுகாப்பான தூர இடைவெளியில் இணைப்பின் மீது வெப்பமூட்டி ஈரப்பதம் ஆவியாகும் வரை சூடேற்றவும்.

Fig 1




SILVER BRAZING TO MAKE CONNECTING JOINTS

10 வெப்பமூட்டுதலை பிளக்ஸ் பால் போன்று மாறி இறுதியாக சுத்தமாகும்வரை தொடரவும். (Fig 2)

11 MS டியூப்பின் இருமுனைகளிலும் சில்வர் சால்டரைத் தடவி இணைப்பின் இருமுனைகளிலும் பரவும் படிச் செய்யவும்.

12 சில்வர் சால்டர் ராடை அகற்றி இணைப்பு குளிர அனுமதிக்கவும்.

Fig 2




© NIMI NOT TO BE REPUBLISHED

## (டைரக்ட் கூல் மற்றும் ஃபிராஸ் ஃப்ரி ரெஃப்ரிஜிரேட்டரின் - மின்சார பாகங்கள் மற்றும் மெக்கானிக்கல் அடையாளம் காணுதல் (Identify the electrical and mechanical components of refrigeratordirect cool and frost free)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- ரெஃப்ரிஜிரேட்டரின் மின்சார பாகங்களை அடையாளம் காணுதல்
- ரெஃப்ரிஜிரேட்டரின் மெக்கானிக்கல் பாகங்களை அடையாளம் காணுதல்.

**தேவையானவைகள் (Requirements)**

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**

| | |
|---|---|
| • ஸ்குரு டிரைவர் | - 1 No. |
| • லைன் டெஸ்டர் | - 1 No. |
| • காம்பினேஷன் பிளையர் | - 1 No. |
| • சீரிஸ் டெஸ்ட் லேம்ப் | - 1 No. |
| • மல்டி மீட்டர் | - 1 No. |

**பொருட்கள் (Materials)**
- காட்டன் வேஸ்ட்/துணி
- துண்டு வயர்கள்

© NIMI NOT TO BE REPUBLISHED

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **(Figs 1 - 6)-ல் உள்ள மின்சார பாகங்களை அடையாளம் காண்க**

1 இணைப்புகளை துண்டித்து மின்சார பாகங்களை அடையாளம் காண்க.

2 அவற்றை பணி மேஜை மீது வைக்கவும்.

3 கம்பிரஸ்ஸர் மோட்டார் மற்றும் பாகங்களை சுத்தம் செய்யவும்.

4 பாகங்களை அடையாளம் காண்க.

Fig 1




Fig 2




Fig 6



Fig 5




Fig 5




PTC RELAY

Fig 11




INTERNAL CONSTRUCTION

Fig 13




EVAPORATOR FAN MOTOR

**Table 1**

| Figure No | Name of the part |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **(Figs 7 - 11)-ல் மெக்கானிக்கல் அடையாளம் காண்க**

Fig 1



Fig 2



Fig 3



Fig 4



© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5




**Table 2**

| Figure No | Name of the part |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

© NIMI NOT TO BE REPUBLISHED

# ரெஃப்ரிஜிரேட்டரின் மின்சார பாகங்களை பரிசோதித்தல் மற்றும் மாற்றுதல் (Check and replace electrical components in refrigerator)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- கரண்ட் காயில் ரிலேவை சோதிக்கவும்
- ஓவர்லோடு புரொடக்டரை (OLP) சோதிக்கவும்
- ஓம் மீட்டரை வைத்து பிரிகஸ்னல் ஹார்ஸ் பவர் கம்ப்ரசர் வைண்டிங்கை அடையாளம் காணவும்
- கம்பிரஸ்ஸரில் சார்ட் சாக்கியுட்டை சோதித்தல்
- டோர் சுவிட்ச் நிலைமையை சோதித்தல்
- தெர்மோஸ்டாட் மற்றும் கெப்பாஸிட்டர்களை சோதிக்கவும்.

## தேவையானவைகள் (Requirements)

**கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)**
- ஸ்குரு டிரைவர் 10 மி.மீ முனை 200 மி.மீ நீளம் - 1 No.
- கட்டிங் ப்ளையர் 200 மி.மீ நீளம் (காப்பிடப்பட்டது) - 1 No.
- பிலிப்ஸ் ஸ்குரு டிரைவர் செட் - 1 No.
- ஓம் மீட்டர் - 1 No.
- வோல்ட் மீட்டர் மற்றும் அம்மீட்டருடன் டெஸ்ட் போர்ட் - 1 No.

**பொருட்கள் (Materials)**
- கரண்ட் காயில் ரிலே - 1 No.
- OLP - 1 No.
- FHP கம்ப்பிரஸ்ஸர் இயந்திரசாதனம் - 1 No.
- 2 மீ சிங்கிள் ஸ்டேரன்ஸ் ஒயர் - தேவையான அளவு
- 2 மீ குரோக்கடைல் (முதலை) கிளிப் மற்றும் ஒயர் - தேவையான அளவு
- தெர்மோஸ்டாட் - 1 No.
- கெப்பாஸிட்டர் - 1 No.

## செய்முறை

செய்ய வேண்டிய வேலை 1: **கரண்ட் காயில் ரிலேவை சோதித்தல்**

1 ஓம் மீட்டர் மூலம் புள்ளிகள் 4 மற்றும் 5 ஆகியவைகளுக்கு இடையே தொடர்ச்சியைச் சோதிக்கவும். (Fig 1)

2 புள்ளிகள் 4 & 5-க்கும் இடையே தொடர்ச்சி சரியாக இருந்தால் கரண்ட் காயில் ரிலே தொடர்ச்சியும் சரியாக இருக்கும். சாதாரண நிலைமைகளில் புள்ளிகள் 4 & 5-க்கும் இடையே தொடர்ச்சி இருக்கும்.

3 புள்ளிகள் 5 & 6-க்கும் இடையே தொடர்ச்சியை சோதிக்கவும். சாதாரண நிலைமைகளில் (பயன்படுத்தாத போது) 5 & 6 திறந்திருக்கும். 5 & 6க்கும் இடையே தொடர்ச்சி இல்லையெனில் ரிலே நன்றாக இருக்கும்.

4 ரிலேயைத் தலைகீழாக வைக்கவும். 5 & 6-க்கும் இடையே தொடர்ச்சியை சோதிக்கவும். தொடர்ச்சி இருப்பின் ரிலே நன்றாக இருக்கும்.

Fig 1




CHECK AND TEST CURRENT COIL RELAY

5 பழைய நிலைக்குக் கொண்டு வரவும். 5 & 6-க்கும் இடையே தொடர்ச்சியை சோதிக்கவும். தொடர்ச்சி இருப்பின் ரிலே நன்றாக இருக்கும்.

6 பிளஞ்சர் (plunger) இயக்கத்தை சோதித்து சப்தத்தைக் கவனிக்கவும். ரிலேயைத் தலைகீழாக வைக்கவும். பிளஞ்சர் மேல்நோக்கி நகரும். சப்தம் கேட்கும். சாதாரண நிலைக்குக் கொண்டு வரவும். பிளஞ்சர் கீழ்நோக்கி வரும். தற்போதும் சப்தத்தைக் கேட்கலாம். சப்தம் இல்லையெனில் ரிலே குறைபாடுள்ளது என அறியலாம். ரிலே இயக்கி செயல்பாடு (relay player operating) சரியில்லை.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **ஓவர்லோடு புரொடக்டரை (OLP) சோதித்தல்**

1 1 & 3-க்கும் இடையே தொடர்ச்சியை சோதிக்கவும்.

2 1 & 3-க்கும் இடையே தொடர்ச்சி சரியாக இருந்தால், இரட்டை உலோகத் தொடுப்பு சரியாக இருக்கும்.

3 தொடர்ச்சி இல்லையெனில் மிகைச் சுமை பழுதடைந்திருக்கும்.

4 வட்டில் துரு ஏதாவது படிந்துள்ளதா எனப் பார்க்கவும். துருப் படிந்திருந்தால் அதைப் பயன்படுத்துவது கூடாது. (Fig 1)

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **பிரிக்ஸ்னல் ஹார்ஸ் பவர் கம்ப்ரசர் வைண்டிங்கை ஓம்மீட்டரை வைத்து அடையாளங் காணுதல்**

பின்ன பிரிக்ஷ்னல் ஹார்ஸ் பவர் கொண்ட கம்ப்ரசரின் முனையங்களுடன் ஓம் மீட்டரை இணைக்கவும்.

**பயிற்சியைத் துவங்கும் முன்பு கீழ்க் குறிப்பிட்டவைகளை நினைவில் கொள்ளவும்.**

- ரன்னிங் (வைண்டிங்கின்) மின்தடை அளவு ஸ்டாட்டிங் வைண்டிங்கின் மின்தடையை விடக் குறைவாக இருக்கும்
- ஸ்டாட்டிங் வைண்டிங்கின் மின்தடை எப்பொழுதும் இயங்கு வைண்டிங் மின்தடையை விட அதிகமாக இருக்கும்.
- ரன்னிங் மற்றும் ஸ்டாட்டிங் வைண்டிங் மின்தடை, ஸ்டாட்டிங் வைண்டிங் மின்தடை மற்றும் ரன்னிங் வைண்டிங் மின்தடை ஆகியவைகளின் கூட்டலுக்கு சமமாக இருக்கும்.

1 (Fig 2)-ல் உள்ளபடி ஓம்மீட்டரை அமைக்கவும்.

2 A மற்றும் C க்கும் இடையே உள்ள மின்தடையை அளக்கவும். (20 ஓம்)

3 பதிவுத் தாளின் அட்டவணை 1ல் பதியவும்

4 A மற்றும் B க்கும் இடையே உள்ள மின்தடையை அளக்கவும் (40 ஓம்)

5 பதிவுத் தாள் அட்டவணை பதியவும்

6 C மற்றும் B ஆகியவைகளுக்கு இடையே உள்ள மின்தடையை அளக்கவும். (60 ஓம்)

7 பதிவுத் தாளில் பதிவு செய்யவும்.

8 அடையாளங் காணப்பட்ட A முனையம் பொதுமுனையமாக இருக்கும்

9 அடையாளங் காணப்பட்ட B முனையம் துவக்க வைண்டிங்காக இருக்கும்

10 அடையாளங் காணப்பட்ட C முனையம் இயக்க வைண்டிங்காக இருக்கும்

**மின்தடை அளவு தயாரிப்பாளருக்குத் தயாரிப்பாளர் வேறுபடும். கம்ப்ரசர் தயாரிப்பாளரின் அளவுக் குறிப்பீடுகளை பயிற்றுநர் வைத்துக் கொண்டு இருக்க வேண்டும்.**

**அட்டவணை 1**

| S.No. | Terminal connection | Value reading |
|---|---|---|
| 1 | A and C | ....... |
| 2 | A and B | ....... |
| 3 | C and B | ....... |

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 2




SINGLE PHASE FRACTIONAL HORSE POWER COMPRESSOR

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **கம்ப்ரசரில் சார்ட் சாக்கியுட்டை சோதித்தல்**

1 ஓம் மானியின் அளவுகோலைத் தேர்ந்தெடுக்கவும். (Rx 10000) (Fig 3)

2 A ஆய்வு முனையை கம்ப்ரசர் முனையத்துடன் இணைக்கவும்

3 B ஆய்வு முனையை கம்ப்ரசரின் உலோக பகுதியில் (metal casing) இணைக்கவும்

4 தொடர்ச்சியை சோதிக்கவும். தொடர்ச்சி இருப்பின் கம்ப்ரசர் நில இணைப்பு (grounded)கொண்டுள்ளது (Fig 3)

5 தொடர்ச்சி இல்லையெனில் கம்ப்ரசர் நில இணைப்பை பெற்றிருக்காது.

Fig 3




CHECKING THE COMPRESSOR FOR A GROUND TO CASING

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 5: **டோர் சுவிட்ச் நிலைமையை சோதித்தல்**

1 ரெஃப்ரிஜிரேட்டரை மின் இணைவு செய்யவும் (ON).

2 ரெஃப்ரிஜிரேட்டரின் கதவைத் திறந்து கேபினெட் (cabinet) மின்விளக்கின் நிலைமையை சோதிக்கவும். அது ஒளிர வேண்டும்.

3 அப்படி ஒளிரவில்லையென்றால் மின்விளக்கை சோதிக்கவும் (Fig 4).

4 மின்விளக்கு இழை உருகியிருந்தால், ரெஃப்ரிஜிரேட்டரில் உள்ள மின்விளக்கை மாற்றி சோதிக்கவும்.

Fig 4




BULB AND BULB HOLDER

© NIMI NOT TO BE REPUBLISHED

5 மீண்டும் மின்விளக்கு ஒளிரவில்லையென்றால் ரெஃப்ரிஜிரேட்டர் நிறுத்தி டோர் சுவிட்சை மின் இணைப்புகளை நீக்கவும்.

**நீக்கப்படும் இணைப்புகளை அடையாளக் குறி இடவும்.**

6 சுவிட்சின் தொடர்ச்சியை மல்டி மீட்டரை கொண்டு இணை (ON) அணை (OFF) ஆகிய இரு நிலைகளிலும் சோதிக்கவும் (Fig 5).

7 மின்விளக்கு ஏற்பியின் மின்கம்பிகளை சோதிக்கவும்.

8 சுவிட்ச் குறைபாடு உடையதாகக் காணப்பட்டால் அதை மாற்றி மின்கம்பிகளை இணைக்கவும்.

Fig 5




CHECK DOOR SWITCH

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 6: **தெர்மோஸ்டாட் மற்றும் கெப்பாஸிட்டரின் நிலைமையை சோதித்தல்**

1 ரெஃப்ரிஜிரேட்டரை மின் இணைப்பு செய்யவும்

2 அது இயங்கவில்லையெனில் தெர்மோஸ்டாட்டை சோதிக்கவும்

3 தெர்மோஸ்டாட்டை அதன் மின்சார இணைப்புகளை நீக்கவும்

4 மல்டி மீட்டர் (அ) டெஸ்ட் லாம்ப் கொண்டு தெர்மோஸ்டாட்டின் தொடர்ச்சியை இணை, அணை ஆகிய இருநிலைகளிலும் சோதிக்கவும்

5 துண்டித்து மற்றும் இணைவு செய்து சோதிக்கவும். (Fig 6)

Fig 6




TYPICAL THERMOSTAT

**எச்சரிக்கை ஒரு கெப்பாஸிட்டரை (கொள்ளகியை) சோதித்தல் பொழுது கெப்பாஸிட்டரின் முனையங்களுக்குக் குறுக்காக விரல்களை வைக்கக்கூடாது. அது மின்னேற்றம் கொண்டதாக இருக்கும். ஆகவே மின் அதிர்ச்சியைத் தரலாம். அதைக் கையாள்வதற்கு முன்னாள் இன்சுலேஷன் உள்ள மின்கம்பி கொண்டு சார்ட் செய்யவும்.**

6 சோதனை செய்வதற்காக கெப்பாஸிட்டரை நீக்கவும்.

7 கெப்பாஸிட்டரை சோதனை மின்சுற்றில் கெப்பாஸிட்டரை இணைக்கவும். (Fig 7A)

8 மின்சுற்றில் பியுஸை (FIGD) காட்டப்பட்டவாறு சோதிக்கவும்.

9 மின்சுற்று (E) சுவிட்சை மின் இணைப்பு செய்யவும்.

10 மின்னேற்ற சுவிட்சை (B) ஓரிரு விநாடிகளுக்கு அழுத்தவும் (Fig 7B)

11 மின்சுற்று பிளக்கை (E) அணைக்கவும்

12 சுவிட்சு (B) திறப்பு நிலையில் உள்ளபோது குறுக்கிணைப்பு சுவிட்சு (C) யைத் தொடச் செய்யவும். கெப்பாஸிட்டர் நல்ல நிலையில் இருந்தால் சுவிட்சில் தீப்பொறி உண்டாகும். (Fig 7C)

13 முதல் முறையில் அதில் தீப்பொறி வராவிடில் இரண்டு (அ) மூன்று முறை முயற்சி செய்து பிறகு கெப்பாஸிட்டரை மாற்றவும்.

**கெப்பாஸிட்டர் நல்ல நிலையில் இருந்தால் (Fig 7C) ல் உள்ளவாறு தீப்பொறி உண்டாகும்.**

கெப்பாஸிட்டர் குறுக்கிணைப்பு கொண்டிருந்தால் பியுஸ் உருகிவிடும். (Fig 7D) கெப்பாஸிட்டர் மின்னேற்றம் பெறாவிடில் அது தீப்பொறியை உண்டாக்காது. இது திறப்பு மின்கற்றைக் குறிக்கிறது. (Fig 7A) கெப்பாஸிட்டர் சோதனைக் கருவியின் முனையங்களுடன் இணைக்கப் பட்டிருக்கும்.

எச்சரிக்கை: சோதனை செய்யும் பொழுது கெப்பாஸிட்டரை ஒரு பாதுகாப்புப் பெட்டியுள் வைத்து சோதிக்க வேண்டும். காரணம் குறுக்கிணைப்பு கொண்ட கெப்பாஸிட்டர் மின்சுற்றில் வைக்கப்படும் பொழுது வெடிக்கலாம்.

Fig 7




ONE METHOD OF TESTING A CAPACITOR

— — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# ரெஃப்ரிஜிரேட்டர்களில் கசிவு சோதனை செய்தல், வேக்கியுமைஸிங் மற்றும் கேஸ் சார்ஜிங் (Leak test, evacuation and gas charging in a refrigerator)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய திறன்கள்
- கம்ப்ரசரின் சார்ஜிங் லைனில் ஃபிளேர் செய்து கூடுதலாக உருவாக்குதல்
- கம்ப்ரசரின் சார்ஜிங் லைனில் கூடுதலான ஃபிளேர் செய்த காப்பர் டியூபை பிரேசிங் செய்தல்.
- கம்ப்ரசரின் சார்ஜிங் லைனில் மானிஃபோல்ட் கேஜீடனும் நைட்ரஜன் சிலிண்டருடனும் இணைத்தல்
- சிஸ்டத்தினுள் நைட்ரஜன் வாயு ஏற்றம் செய்தல்
- சோப்பு திரவத்தை பயன்படுத்தி கசிவு சோதனை செய்தல்
- கசிவுள்ள இடங்களில் பிரேஸிங் செய்தல்
- சிஸ்டத்தை வேக்கம் பம்புடன் இணைத்தல்
- வேக்கம் பம்பினை கையாளுதலும் இயக்குதலும்
- சிஸ்டத்தை டிஹைட்ரேஷன் செய்தல்
- லோ பக்கம் மற்றும் ஹை பக்கம் ஆகிய இரண்டிலும் சிஸ்டத் செய்தல்
- டைரக்ட் கூல் ரெப்ரிஜிரேட்டரில் ரெப்ரிஜரண்டை சார்ஜிங் செய்தல்
- ஃபிராஸ்ட் ஃரீ ரெப்ரிஜிரேட்டடர்களில் ரெஃரிஜரண்டை ஏற்றம் செய்தல்
- சிஸ்டத்தை பின்ச்சிங் (நசுக்குதல்) செய்தல்.

## தேவையானவைகள் (Requirements)

### கருவிகள்/அளவிகள் (Tools/Instruments)

- நைட்ரஜன் சிலிண்டர் மற்றும் டபுள் ஸ்டேஜ் பிரஸ்ஸர் ரெகுலேட்டர் - 1 செட்
- காம்பினேஷன் பிளையர் - 1 No.
- சிலிண்டர் கீ - 1 No.
- மல்டி மீட்டர் - 1 No.
- டிஜிட்டல் தெர்மாமீட்டர் - 1 No.
- கேஜ் மானி போல்ட் LP/HP கேஜ் - 1 செட்
- பெயிண்ட் பிரஷ் 1” (25mm) - 1 No.
- டபுள் எண்ட் ஸ்பேனர் Nos. 6 - 32மிமீ - 1 செட்
- அட்ஜஸ்டபிள் ஸ்பேனர் 250 mm) - 1 செட்
- ஃபிளேரிங் பிளாக் மற்றும் யோக் - 1 செட்
- ஆக்ஸிஜன் மற்றும் அசெட்டிலீன் பிரேசிங் செட் - 1 செட்
- இன்ப்ராரெட் வகை ஹீட்டிங்கிட் - 1 No.
- ரேட்சட் ரின்ச் மற்றும் கீ - 1 No.
- டாங் டெஸ்டர் - 1 No.
- எடை மேடை (டிஜிட்டல்) - 1 No.
- பிஞ்சிங் டூல் - 1 No.
- ஹலைடு டார்ச்/எலக்ட்ரானிக் கசிவு சோதிக்கும் கருவி - 1 No.
- டியூப் கட்டர் - 1 No.
- கண் பாதுகாப்பு கண்ணாடி - 1 No.
- ஸ்பார்க் லைட்டர் - 1 No.
- சர்வீஸ் சிலிண்டர் - 1 No.
- பெயிண்ட் பிரஸ் 1” - 1 No.

### சாதனங்கள் (Equipment)

- டைரக்ட் கூல் மற்றும் உறைபணியற்ற ரெஃப்ரிஜிரேட்டர் - 1 No.
- டபுள் ஸ்டேஜ் வேக்கம் பம்பு - 1 No.

### பொருட்கள் (Materials)

- சோப்பு கரைசல் - தேவையான அளவு
- 1/4” OD மிருதுவாக்கப்பட்ட காப்பர் டியூப் (6 mm) - 15 செ.மீ
- 1/4” பித்தலை ஃபிளார் நட்(6mm) - 1 No.
- 1/4” பித்தலை ஃபிளார் யூனியன் (6 mm) - 1 No.
- காப்பர் பிரேஸிங் ராடு) - 2 Nos.
- 1/4” பித்தளை டம்மி நட் (6 mm)- 1 No.
- உலர்ந்த நைட்ரஜன் வாயு - 7cum
- ஃபளக்ஸ் - தேவையான அளவு
- R134a ரெப்ரிஜிரண்ட் சிலிண்டர் - 450 கிராம்.

© NIMI NOT TO BE REPUBLISHED

செய்முறை

**மரபு வழி குளிர்ப்பதனூட்டி (Conventional refrigerator) (Fig 1)**

செய்ய வேண்டிய வேலை 1: **பிளாரிங் செய்து கூடுதலாக கம்ப்ரசர் சார்ஜிங் டியுபை உருவாக்குதல்**

1 கம்ப்ரசரின் சர்ஜிங் டியுப் வழியே அமைப்பில் ஏதும் வாயு இல்லை என்பதை உறுதி செய்துக் கொள்ளவும். (அது திறந்து இருக்க வேண்டும்)

2 6 மிமீ (மென்மை 1/4” OD : காப்பர் டியுப்பை எடுத்துக் கொள்ளவும். ஒரு முனையை பிளாரிங் பிளாக் மற்றும் யோக் கொண்டு ஃபிளார் செய்யவும்.

3 ஃப்ளேர் நட்டை (6மிமீ) காப்பர் டியுபினுள் (6 மிமீ) ஃபிளார் செய்யப்படாத முனை வழியாக செருகவும்.

4 ஃபிளார் செய்யப்படாத காப்பர் டியுபின் (6 மிமீ) முனையை கம்ப்ரசரின் சார்ஜிங் டியுபினுள் செருகவும்.

5 கம்ப்ரசரின் சார்ஜிங் டியுப் பிளார் நட்டுடன் ஹாண்ட் ஷட்ஆப் வால்வு வால்வின் இன்லெட் வழியைப் பொருத்தவும். (Figs 2 & 3)

6 ஹாண்ட் ஷட்ஆப் வால்வு ஃபிளேர் நட் இணைப்பை தகுந்த டபுள்எண்டட் ஸ்பானர் மற்றும் அட்ஜஸ்டபிள் ஸ்பேனர் கொண்டு டைட் செய்யவும்.

7 ஹாண்ட் ஷட்ஆப் வால்வு மூடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

Fig 2




FIXING ANGLE VALVE WITH FLARE NUT

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **கம்ப்ரசரின் சார்ஜிங் டியுபுடன் கூடுதலாக ஸ்வெஜ்ஜிங் செய்யப்பட்ட டியுபை பிரேஸிங் செய்தல்**

1 கேஸ் வெல்டிங் செட்டை எடுத்துக் கொள்ளவும்.

2 ஆக்சிஜன் சிலிண்டரின் வால்வை திறந்து பிரஸ்ஸர் அட்ஜஸ் செய்யவும்.

3 LPG சிலிண்டரின் வால்வை திறந்து பிரஸ்ஸரை அட்ஜஸ் செய்யவும்

4 பிரேஸிங் டார்ச்சை பற்றவைத்து தீப்பிழம்பை அமைக்கவும். (நடுநிலை வகை)

5 கூடுதலாக இணைக்கப்பட்ட காப்பர் டியுபுடன் (6 மிமீ) தீப்பிழம்பை கம்ப்ரசரின் சார்ஜிங் டியுபின் இடத்திற்கு எடுத்துச் செல்லவும்.

6 இணைப்பைப் பிரேஸிஸ் ராடு கொண்டு பிரேஸிங் செய்யவும்.

7 இணைப்பைக் குளிர விடவும் (அறையின் வெப்பநிலைக்கு விட்டுவிடவும்.)

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **கம்ப்ரசர் சார்ஜிங் டியுபில் கேஜ் மானிப்போல்டு கேஜ் மற்றும் நைட்ரஜன் சிலிண்டர் இணைத்தல்**

1 கூடுதல் சார்ஜிங் டியுபின் ஃப்ளேர்நட்டை 6 மிமீ யூனியனுடன் இணைக்கவும்.

2 யூனியனின் மறுமுனையை பிளக்ஸிபுல் சார்ஜிங் ஹோஸ் இணைக்கவும்

3 சார்ஜிங் ஹோஸ் மறுமுனையை மானி போல்ட் கேஜ் ஹை பிரஸ்ஸர் இணைப்பில் (HP port) இணைக்கவும்

4 மானி போல்டு கேஜின் நடுப்பகுதி மற்றொரு ஏற்று சார்ஜிங் ஹோஸை இணைக்கவும்.

5 சார்ஜிங் ஹோஸின் மறுமுனை நைட்ரஜன் சிலிண்டரின் அவுட்லெட் இணைப்பில் இணைக்கவும்.

— — — — — — — —

Fig 1



NOT TO BE REPUBLISHED

TESTING LEAK IN CONVENTIONAL REFRIGERATOR

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **சிஸ்டத்தில் நைட்ரஜன் வாயுவை சார்ஜிங் செய்தல்**

1 எல்லா ஸ்குரு இடங்களும்/ மரைகளும் நல்ல இறுக்கமான நிலையில் உள்ளனவா என உறுதி செய்துக் கொள்ளவும்.

2 இல்லையெனில் டபுள் என்டட் ஸ்பேனர் மற்றும் அட்ஜஸ் டபுள் ஸ்பேனர் ஆகியவைகளைப் பயன்படுத்தி டைட் செய்யவும்.

3 வால்வு கீயை பயன்படுத்தி நைட்ரஜன் சிலிண்டரை திறக்கவும்

4 பிரஸ்ஸர் ரெகுலேட்டரில் 50psig இருக்குமாறு பிரஸ்ஸரை அட்ஜஸ் செய்யவும்.

5 மானிபோல்ட் கேஜின் HP (உயர் அழுத்தம்) வழியை, வால்லை ஆண்டிகிளாக் வைஸ் திசையில் திறக்கவும்.

6 சிஸ்டத்திற்குள் நைட்ரஜன் வாயு பாய்வதைக் கவனிக்கவும். மானிபோல்டு கேஜின் அளவை நோக்கவும்.

7 நைட்ரஜனை 15 - 20 விநாடி நேரம் பாய விடவும்.

8 மானிபோல்டு கேஜின் வால்வை கடிகார முறையில் திருப்பி மூடவும்.

9 மானிபோல்ட் கேஜின் (HP) அளவை கவனிக்கவும்

10 அழுத்தம் 150psig-யை, அடையாவிட்டால் மானிபோல்ட் கேஜின் வால்வை மறுபடியும் திறந்து நைட்ரஜன் சார்ஜிங் செய்யவும்.

11 அழுத்தம் 150psig-யை, அடைந்தவுடன் நைட்ரஜன் சிலிண்டரின் வால்வை மூடவும்.

12 மானி போல்ட் கேஜின் வால்வை மூடவும்.

13 டிரை பல்ப் தெர்மாமீட்டரை எடுத்துக் கொண்டு சுற்றுப்புறக் காற்றின் வெப்பநிலையைக் காணவும்.

14 நேரத்தைக் குறித்துக் கொள்ளவும்.

15 இப்பயிற்சியின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் எடுக்கப்பட்ட அளவுகளை அட்டவணைப்படுத்தவும்.

16 நைட்ரஜன் சிலிண்டரையும் மானி போல்ட் கேஜையும் இணைக்கும் சார்ஜிங் ஹோஸை நீக்கவும்.

17 மானிபோல்ட் கேஜின் நடுப்பகுதியில் உள்ள வழியை டம்மி நட் 6 மிமீ கொண்டு மூடவும்.

— — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 5: **சோப்புத் திரவத்தைப் பயன்படுத்தி கசிவு சோதனை செய்தல்**

1 சுத்தமான தண்ணீர் 500 மில்லி நிரப்பப்பட்ட பிளாஸ்டிக்/ உலோகக் குவளையை எடுத்துக் கொள்ளவும்.

2 தண்ணீரில் 25 மில்லி சோப்புக் கரைசல் செறிவை சேர்க்கவும்

3 கலவையை நன்கு கலக்கவும். பிரஷ் கொண்டு சிறிதளவு சோப்புக் கலவையை எடுத்துக் கொண்டு இணைப்புகளின் மீது பூசவும்.

அறுக்கப்பட்ட இணைப்புகள் சார் ஜிங் ஹோஸ் அடாப்டர், ஃபிளேர் நட் முதலிய பிரேஸிங் செய்யப்பட்ட இணைப்புகள், காப்பர் டியுப்களின் இணைக்கப்பட்ட இடங்கள் ஆகியவைகள் மீது பூசவும்.

4 சோப்புக் கரைசல் சலவை வழியாக அமைப்பிலிருந்து நைட்ரஜன் வாயுக் குமிழிகள் வெளிவருகின்றனவா எனப் பார்க்கவும்

5 குமிழிகள் எதுவும் வெளிவரவில்லையெனில் கசிவு இல்லை என்பதை அது குறிக்கிறது.

6 இணைப்பில் ஏதாவது குமிழிகள் தென்பட்டால், இணைப்பின் மீது கூடுதலான சோப்புக் கரைசலைப் பூசி எங்கிருந்து வருகிறது என்னும் சரியான இடத்தைக் காணவும்.

7 திருகாணியிடப்பட்ட/மரையிடப்பட்ட இணைப்புகளிலிருந்து ஃபிளேர் நட் சார்ஜிங் ஹோஸ் அடாபடர் கசிவு இருந்தால் அவைகளை டபுள்எண்டட் ஸ்பேனர், அட்ஜஸ்டபிள் ஸ்பேனர் ஆகியவைகளைப் பயன்படுத்தி நன்கு டைட் செய்யவும்.

8 பிரேஸ் செய்யப்பட்ட இணைப்புகளில் கசிவு இருந்தால் கசிவை உறுதிப்படுத்தவும். பழுது நீக்கம் செய்ய அந்த இடத்தை குறிக்கவும்.

9 திருகப்பட்ட/பிரேஸ் செய்யப்பட்ட இடங்களில் கசிவு இல்லையெனில், சிஸ்டத்தின் பிரஸ்ஸர் அடுத்த 24 மணி நேரத்திற்குத் ஹோல்டிங் செய்யப்படுகிறதா எனப் பார்க்கவும்.

10 24 மணி நேரம் கழித்து பிரஸ்ஸர் சுற்றுப்புற வெப்பநிலை நேரம் ஆகியவைகளை குறித்துக் கொள்ளவும்.

11 முந்தைய நாள் இருந்த பிரஸ்ஸரும் தற்போது காட்டப்படும் பிரஸ்ஸர் அளவை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

12 இரண்டு அளவுகளுக்கும் இடையே வித்தியாசம் ஏதும் இல்லையெனில் (அ) அமைப்பில் கசிவு இல்லை என எடுத்துக் கொள்ளலாம்.

**II உறைபனியற்ற குளிர்பதனுட்டி** (Fig 1) ஃப்ரஸ்ட் ஃப்ரீ ரெஃப்பிரிஜரேட்டர்) செயல்முறை, மரபு வழி குளிர்பதநுட்டியைப் போன்றதே.

— — — — — — — —

Fig 3




EVACUATING HERMETIC SYSTEM OF A REFRIGERATOR (THROUGH HIGH & LOW SIDES)

## பதிவுத்தாள்

| வ.எண் | தேதி | நேரம் | சுற்றுப்புற | சோதனை வெப்பநிலை | குறிப்பு அழுத்தம் |
|---|---|---|---|---|---|
| | நா.மா.ஆண்டு | மணி. நிமி. | °C | psig/bar | கசிவு சோதனை செய்யப்பட்ட இணைப்புகள் |

செய்ய வேண்டிய வேலை 6: **கசிவு உள்ள இடங்களில் பிரேஸ் செய்தல்**

1 ஏற்கனவே பிரேஸ் செய்த இடங்களில் ஏதேனும் கசிவு இருந்தால் அந்த இடங்களில் குறித்து கொள்ளவும்.

2 அமைப்பிலிருந்து நைட்ரஜன் அழுத்தத்தை வெளிவிடவும்.

3 கசிவுள்ள இடங்களில் எமரிஷீட் தேய்த்து சுத்தம் செய்யவும்.

4 பிரேஸிங் டார்ச்சை பற்ற வைக்கவும் கண் பாதுகாப்புக் கண்ணாடிகளை பயன்படுத்தவும்.

5 காப்பர் டியுபை கசிவுள்ள இடத்தில் மேல் மற்றும் கீழ்புறம் காட்டி சூடேற்றவும். அது செஞ் சூடாகும் போது பிளக்ஸ் தடவி காப்பர் கம்பியால் பிரேஸிங் செய்யவும்.

6 பிரேஸிங் டார்ச்சை நிறுத்தவும். பிரேஸ் செய்த இடம் குளிர வைக்கவும்.

7 சிஸ்டத்தில் நைட்ரஜன் கேஸ் சார்ஜ் செய்யவும்.

8 எல்லா பிரேஸிங் இணைப்பின் மீதும் சோப்புக் கரைசலால் கசிவு சோதனை செய்யவும்.

9 கசிவு ஏதுமில்லை என்றால் உள்ளிருக்கும் நைட்ரஜன் பிரஸ்ஸரை வெளியேற்றவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 7: **அமைப்பை வேக்கம் பம்புடன் இணைத்தல்**

1 சார்ஜிங் ஹோஸ் (I) ஒரு முனையை ஹாண்ட் ஷட்ஆப் வால்வின் அவுட்லெட்டில் இணைக்கவும். இணைப்பை கையினால டைட் செய்யவும்.

2 சார்ஜிங் ஹோஸ் மறுமுனையை (I) மானி போல்ட் கேஜின் குறைந்த (LP) அழுத்த போர்ட்டில் இணைக்கவும்.

3 ஹோஸ் (II)ன் ஒரு முனையை மேனிபோல்டு கேஜின் நடுப்பகுதியில் உள்ள வழியுடன் இணைக்கவும்.

4 ஹோஸின் மறுமுனையை வேக்கம் பம்பின் இன்லெட் (சக்ஷன்) வழியுடன் இணைக்கவும்.

5 பித்தளை டம்மி நட் (6 மிமீ) கொண்டு மானி போல்ட் கேஜின் உயர் அழுத்த வழியை (HP) மூடவும்.

6 மானிபோல்டு கேஜின் HP/LP குமிழ்கள் மூடப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 8: **வேக்கம் பம்பை கையாளுதல் மற்றும் இயக்குதல்**

1 ஆன்ஸன் டெஸ்டரை பயன்படுத்தி வேக்கம் பம்பிற்கு மின் விநியோகம் உள்ளதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

2 வேக்கம் பம்பின் மின்விநியோக இணைப்பை இணைக்கவும்.

3 வேக்கம் பம்பை இயக்கவும்.

4 மானி போல்டு கேஜின் வால்வு சக்ஷன் போர்ட் வழி (LP வழி) திறக்கவும்.

5 ஹாண்ட் ஷட்ஆப் வால்வை கொண்டு எதிர்க் கடிகரா திசையில் திருப்பி திறக்கவும்.

6 மானி போல்ட் கேஜின் LP கேஜீன் பிரஸ்ஸர் அளவைக் கவனிக்கவும். பிரஸ்ஸர் குறைந்துக் கொண்டு வரும்.

7 சிஸ்டத்தினை எந்தவித இடையூறும் இன்றி 2 மணி நேரத்திற்கு வேக்கம் செய்யவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 9: **அமைப்பை டிஹைட்ரேஷன் செய்தல்**

1 வெப்பமூட்டும் இன்பிராரெட் லேம்ப் (அகச்சிவப்பு விளக்கு) எடுத்துக் கொண்டு அதனை மின் இணைவு செய்யவும்.

2 சிஸ்டம் வெற்றிடமாக்கப்படுகிறதா என்றும் வேக்கம் பம்ப் இயங்கிக் கொண்டிருக்கிறதா என்றும் உறுதி செய்துக் கொள்ளவும்.

3 இன்பிராரெட் லேம்ப் (infrared lamp) மூலம் சிஸ்டத்தின் எல்லா பரப்பையும் சூடாக்கவும்.

4 எல்லா பரப்புகள் மீதும் வெப்பத்தை சமச்சீராகப் பரப்பவிடவும். அதாவது, ரெஃப்ரிஜிரேட்டர் டியுப், கண்டென்சர் சாயில் எவாட்ரேட்டர் காயில் (வெளியே தெரியும்படி இருந்தால்) திரவ வழி டிரையர்/ வடிகட்டி ஆகியவைகள் மீது சூடேற்றவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

5 எப்பொழுதும் சிஸ்டத்திற்கும், சூடாக்கிக்கும் இடையே உள்ள தூரம் 15 செமீ இருக்கும்படி பராமரிக்கவும்.

6 இச் செயல்முறையை 15 - 30 நிமி, வரை தொடரவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 10: **சிஸ்டத்தில் வேக்கியுமைஸிங் செய்தல்**

1 மானி போல்ட் கேஜின் LP மானி அழுத்தத்தைக் கவனிக்கவும், அது 100 மைக்ரான் (அ) அதற்குக் குறைவாக (30 அங் Hg க்கு சமம்)

2 வேக்கம் பம்பு துவக்கப்பட்ட 3 மணி நேரத்திற்குப் பிறகு ஹாண்ட் ஷட்ஆப் வால்வை கடிகார சுழல் திசையில் திருப்பி மூடவும்.

**எச்சரிக்கை**

**குழாய் வழிகளில் பொருத்தப்பட்டுள்ள கோண அதரியை இயக்கும் போது (திறத்தல்/மூடுதல்) கூடுதலான கவனம் மேற்கொள்ள வேண்டும். (Fig 3)**

**அதரித் தண்டினை அதிகமாக இறுக்குதல் (மூடுதல்) அதிகமாகத் தளர்த்துதல் (திறத்தல்) கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். காரணம் அது அதரியை உட்புறமாக சேதப்படுத்தும்.**

3 மானி போல்டு கேஜின் LP வால்வை மூடவும்.

4 வேக்கம் பம்பை நிறுத்திவிட்டு மின் விநியோகத்தை நீக்கவும்.

5 வால்விலிருந்து ஏற்று நெளிகுழாயை (I) நீக்கவும்.

6 டம்மி நட் (6 மிமீ) கொண்டு ஹாண்ட்ஷட் வால்வின் வெளிவழியை மூடவும். பொருத்தமான டபுள்எண்டட் ஸ்பேனரை கொண்டு நட்டை டைட் செய்யவும்.

7 மானி போல்டு கேஜின் (Gauge manifold) மற்றும் வேக்கம் பம்பின் சார்ஜிங் ஹோஸ்களை (I & II) இணைப்பு நீக்கம் செய்யவும்.

**குறிப்பு: கம்ப்ரசர் சார்ஜிங் லைனில் கை மூடு வால்வை பயன்படுத்தலாம். (HSV)**

ரெஃப்ரிஜிரேட்டரில் ரெப்ரிஜரன்ட் சார்ஜிங் செய்தல் **(Charge refrigerant in refrigerator)**

(டைரக்ட் கூல் மற்றும் ஃபிராஸ்ட்ப்ரி ரெஃப்ரிஜிரேட்டர்கள் இரண்டிற்கும்)

**குறிப்பு:**

1 சிஸ்டத்தை/சாதனத்தை வேக்யுமைஸிங் செய்த பிறகு (2 மணி நேரத்திற்குள்) இப்பயிற்சி செய்யப்பட வேண்டும்.

2 பயிற்சியைத் துவங்குவதற்கு முன்னர் சிஸ்டம்/சாதனம் தேவையான அளவிற்கு (30அங் Hg) வெற்றிடமாக்கப்பட்டு விட்டதா என்பதை உறுதி செய்துக் கொளளவும்.

3 சார்ஜிங் செய்யப்பட வேண்டிய சிஸ்டம்/சாதனம் வெற்றிடத்தை கொண்டுள்ளது/தக்க வைத்துக் கொண்டுள்ளது என்று உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகிறது.

**முறை (I): சார்ஜிங் செய்யும் சிலிண்டரை பயன்படுத்துதல் (Using charging cylinder)**

**குறிப்பு :**

1 கண் பாதுகாப்புக் கண்ணாடியையும் கையுறைகளையும் அணியவும்.

2 சார்ஜிங் சிலிண்டரில் சரியான ரெஃப்ரிஜின்ட் தேவையான அளவிற்குக் குறையாமல் (முன்னதாகத் தீர்மானித்து) நிரப்பி வைத்துக் கொள்ளவும். (எடை அளவில்)

3 இம்முறை சிஸ்டத்தில்/சாதனங்களில் ரெஃப்ரிஜரண்டை சார்ஜிங் செய்வதற்காகப் பெரும்பாலும் பின்பற்றப்படுகிறது. (Fig 4)

**அமைப்பை சார்ஜிங் சிலிண்டருடன் இணைத்தல் (Fig 4)**

1 சார்ஜிங் ஹோஸின் (I) ஒரு முனையை சார்ஜிங் சிலிண்டரின் வால்வுடன் மறுமுனையை மானி போல்டின் நடுப்பகுதியில் உள்ள வழியுடனும் இணைக்கவும்.

2 சார்ஜிங் ஹோஸின் (II) ஒரு முனையை கம்ப்ரசரின் ஹாண்ட் ஷட் ஆப் வால்வுடன் மறுமுனையை மானி போல்டு கேஜின் குறைந்த அழுத்த (LP) வழியுடனும் இணைக்கவும்.

3 மானி போல்ட் கேஜின் உயர் அழுத்த வழியை ஒரு டம்மி நட் (6மிமீ) கொண்டு சரியான டபுள் எண்ட்ட ஸ்பேனரை பயன்படுத்தி இறுக்கவும்.

NOT TO BE REPUBLISHED © NIMI

மீதுள்ள அளவைக் கவனித்துக் குறித்துக் கொள்ளவும்.

10 ஹாண்ட் சட் ஆப் வால்விலிருந்து சார்ஜிங் ஹோஸை (II)-ஐ விடுவிக்கவும்.

**குறிப்பு:** சிஸ்டத்தில் ரெஃப்ரிஜிரண்ட் பாய்வைத் துரிதப்படுத்த (அ) சார்ஜிங் செயல்முறையை விரைவுபடுத்த சார்ஜிங் சிலிண்டரின் மட்டத்தை கம்ப்ரசரின் மட்டத்திற்கு மேலாக அமைக்கவும். சார்ஜிங் செயல்முறையை மேம்படுத்த ரெஃப்ரிஜிரண்ட் சூடான ஈரத்துணியை சிலிண்டரின் மீது தேய்க்கவும். சார்ஜிங் சிலிண்டரை சூடாக்கி உள்ளேயே குறைவான சுற்றுப்பிற வெப்பநிலையை உயர்த்துவதற்கு அமைக்கப்பட்டிருக்கும்.

**முறை (II) : ரெஃப்ரிஜிரண்ட் சர்வீஸ் சிலிண்டரை பயன்படுத்துதல் (Using refrigerant service cylinder)**

**குறிப்பு: பாதுகாப்புக் கண்ணாடியையும் கையுறையையும் அணியவும்.**

சர்வீஸ் சிலிண்டரில் சரியான ரெஃப்ரிஜிரண்ட்டை தேவையான அளவிற்கு குறையாமல் நிரப்பவும். இந்த முறையே இத்தொழிற் பிரிவில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

11 மின் இணைப்பு செய்வதற்கு சிஸ்டத்தின் ஒயரிங் வேலை வரைபடத்தின்படி தயார் நிலையில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

12 மல்டி மீட்டரை பயன்படுத்தி சாதனத்திற்குரிய மின்விநியோகம் இயக்குவதற்குரிய வரம்பிற்குள் (180-230v) உள்ளதா என உறுதிப்படுத்தி கொள்ளவும்.

**குறிப்பு: கம்ப்ரசரின் ஆயுட்காலத்தை காலத்தை அதிகரிக்க வீட்டு/வணிக சாதனத்திலும் தகுந்த திறனளவு கொண்ட (0.5KVA/500W) 3 நிமி , கால தாமத அளவு கொண்ட வோல்ட்ஜ் ஸ் டெ ப் பி ளை ஸ ர் பயன்படுத்தப்படுகிறது.**

13 சாதனத்தை மின் இணைவு செய்து கம்ப்ரசரின் மேற்பகுதி மீது கையை வைத்து இலேசான அதிர்வையும் கையையும் கையால் தொட்டுப் பார்த்து கம்ப்ரசர் இயங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

14 தெர்மோஸ்டாட் கண்ட்ரோலை கடிகார திசையில் கையினால் திருப்பி அதிகபட்ச அளவிற்கு செட்டிங் செய்யவும்.

15 LP மானியில் அளவைக் கவனிக்கவும். அந்த அளவு ‘0’ அல்லது ‘0’ psig க்கு அதிகமாக உள்ளதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

16 ஹான்ட் சட் ஆப் வால்வை போதுமான அளவு திறந்து ரெஃப்ரிஜிரண்ட் கம்பிரசரினுள் இழுக்கப்படுமாறு செய்யவும்.

17 எவாப்பரேட்டரின் புறப்பரப்பினைக் கையால் தொட்டுப்பார்த்துக் குளிர்ச்சியை உணர்ந்து குளிர்விக்கும் தன்மையைக் கவனிக்கவும். பிறகு கதவை மூடவும்.

18 சக்ஷன் வழியில் குளிர்ச்சியையும் (ஈரம் உருவாதலை) திரவ வழியின் வெப்பத்தையும் (வளிமண்டல வெப்பநிலைக்கு மேல்) கையால் தொட்டுப் பார்த்து உணரவும்.

19 கம்ப்ரசரின் சக்ஷன் டியுப் ஐஸ் உறைவு பெறுவதைக் கொண்டு ரெஃப்ரிஜிரண்ட் பாய்வு சாச்சுரேஷன் (saturation) அடையும் வரை ரெஃப்ரிஜிரடண்டை அனுமதிக்கவும்.

20 ஹான்ட் சட் ஆப் வால்வை மூடி சாதனத்திற்குள் ரெஃப்ரிஜிரண்ட் பாய்வை நிறுத்தவும்.

21 கேஜின் அளவைக் கவனிக்கவும். அது 5 முதல் 7 psig என பார்க்கவும்.

22 டாங்டெஸ்டர் கருவியைப் பயன்படுத்தி கம்ப்ரசரின் ரன்னிங் ஆம்பியர் அளவை அளந்து பதியவும்.

23 குறைந்த அழுத்தம் தன்னுடைய கொதி நிலையை (5 - 8 psig) ஹாண்ட் சட் ஆப் மூடி சார்ஜிங் செய்வதை நிறைவு செய்யவும்.

24 சிலிண்டர் வால்வை, வால்வு கீ கொண்டு மூடவும்.

25 ஹான்ட் சட் ஆப் வால்விலிருந்து சார்ஜிங் ஹேஸை நீக்கவும்.

26 சாதனத்தை 1 மணி நேரம் இயங்க விடவும்.

**குறிப்பு:**

27 சார்ஜிங் செய்யும் பொழுது எவாப்பரேட்டருக்கு நிலையான சுமையைத் தருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

28 இரண்டு முறைக்கும் பொதுவான பணி.



© NIMI NOT TO BE REPUBLISHED

செய்ய வேண்டிய வேலை 12: **அமைப்பில் பின்ச்சிங் (நசுக்குதல்) செய்தல்**

**குறிப்பு:**

1 பின்ஞ்சிங் செய்தல் என்பது லோ சைடு பக்கத்திலோ (அ) உயர் பக்கத்திலோ தேவைப்படலாம். சில நேரங்களில் அது சக்ஷன்/சர்வீஸ் வழி மற்றும் திரவ வழி ஆகியவைகளிலும் தேவைப்படலாம்.

2 லோ சைடு (தாழ் பக்கத்தில்) பின்சிங் செய்யும் பொழுது அமைப்பு இயங்கு நிலையில் இருக்க வேண்டும். ஹை சைடு (உயர் பக்கத்தில்) நெருக்கும் பொழுது சிஸ்டம் நிறுத்து நிலையில் இருக்க வேண்டும்.

3 பிஞ்ச்சிங் செயல்முறையைச் செய்ய சரியான கருவிகளான பின்ஞசிங் டூல் செட் (அ) பின்ச்சிங் பிளையர் கொள்ளும் வகை பின்சிங் டூல் பயன்படுத்தப்பட வேண்டும். காம்பினேஷன் பிளையர் பயன்படுத்துதல் கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டும். கராணம் தேவையைப் பூர்த்தி செய்யாது.

4 பின்சிங் டூலை (கருவியைப்) பயன்படுத்தி கம்ப்ரசரின் சார்ஜிங் டியுபுக்கும் ஹாண்ட் சட் ஆப் வால்வு ஃப்ளேர் நட்டிற்கு இடையே உள்ள வழியை பின்ச்சிங் செய்யவும்.

Fig 4




CHARGING REFRIGERANT IN REFRIGERATORS USING CHARGING CYLINDER

5 அட்ஜஸ்டபில் ஸ்பேனர் மற்றும் சரியான இருமுனை ஸ்பேனர் ஆகியவைகளைப் பயன்படுத்தி ஃப்பிளேர் நட்டில் இருந்து ஹாண்ட் சட் ஆப் வால்வை நீக்கவும்.

6 ஃப்பிளேர் நட்டிற்கும் பின்ச்சிங் செய்யப்பட்ட இடத்திற்கும் இடையே டியூப் கட்டரை பயன்படுத்தி வெட்டவும்.

7 பின்ஞ்சிங் செய்யப்பட்ட இடத்திற்கு அப்பால் காப்பர் டியுபின் திறந்த முனையில் மெல்லிய படலமாக சோப்புக் கரைசலைப் பயன்படுத்தி கசிவு சோதனை செய்யவும்.

8 கசிவு ஏதேனும் தென்பட்டால் பின்சிங் டூலைக் கொண்டு கூடுதலாக பின்சிங் செய்யவும்.

9 பிரேஸிங் டார்ச்சை பற்றவைத்து காப்பர் டியுபின் ஒரு முனையை கறுத்த ஆரஞ்சு நிறம் வரும் வரை சூடாக்கவும். உடனடியாக வெள்ளிப் பிரேஸிங் கம்பி கொண்டு திறந்த முனையை நிரப்பவும்.

Fig 5




NOT TO BE REPUBLISHED © NIMI

CHARGING REFRIGERANT IN REFRIGERATORS USING REFRIGERANT SERVICE CYLINDER

### பதிவுத்தாள்

சாதனத்தின் பெயர் :

திறன் :

தேதி :

